TEACHERS' MANUAL

PUBLISHED

by

THE DEPARTMENT OF EDUCATION
GOVERNMENT OF TRAVANCORE

TRIVANDRUM:
PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS,
1946.

உள்ளுறை.

குறிப்பு

ஒன்று முதல் மூன்றுவரை உள்ள வகுப்புகளின் பாட விஷயம் மற்ற இரண்டு வகுப்புகளில் உள்ளதைவிட கூடுதலாக விவரித்தும் நோக்கம் நிறைவேற்றியுமிருக்கிறது. வருங்காலத்தில் நிறைவேற்றவேண்டிய வன்காரியங்களுக்கு அடிஸ்தானம் உறைப்பிக்கவும் பாடவிஷயங்களில் குழந்தைகளுக்கு விருப்பத்தை உண்டுபண்ணிவளர்த்தும் நிலைமை இதன்றோ.

முன்கூறின வகுப்புகளுக்கு கூறியிருக்கும் வழிகளும் ரீதிகளும் சில மாற்றங்களோடு மற்ற வகுப்புகளுக்கும் உரியனவாயிருக்கும்.

வழிகளும் ரீதிகளும் எவையாயிருந்தாலும் பிள்ளைகளுக்கு ரசமான மாதிரியில் கணக்குப்பாடம் மனசிலாக்க வேண்டுமென்பதுதான் முக்கிய உத்தேசம்,

முதல்வகுப்பு.

[உபகரணங்கள்:—மஞ்சாடி, புளியங்கொட்டை, பலாவிதை, பறங்கிமாவிதை, புன்னைக்காய், கோலி, கூழாங்கற்கள், சிறுசுள்ளிகள், பலநிற பவளமணிகள் முதலிவை]

சுமார் ஆறு வாரம் வரையிலும் வாய்மொழியாயும் அதன்பின் எழுத்து வேலை ஆரம்பித்தலும் நலம்.

எண்மானம் முதலியவை.

ஒன்றுமுதல் பத்து வரையிலும் எண்ணுவதற்கு மாணவர்க்கு தெரியக் கூடும். இந்த எண்களை ரூபமுடைய சாதனங்களோடு சம்பந்தப்படுத்தி தக்கவிதத்தில் அவர்களை வழி நடத்தவேண்டும். சில நாட்கள் இந்த எண்களை சாதனங்களுடன் சம்பந்தப்படுத்தி பழக்கினால் போதும். ஒன்று முதல் பத்துவரையுள்ள எண்களுக்கும் அவைக்குச்சமமான சாமான்களுக்கும் தம்மில் உள்ள சம்பந்தம் மாணவருக்கு நிச்சயமான அறிவு கிடைத்தால், படிப்படியாய் 20, 30, 40. 50 இப்படியாக 100 வரையுள்ள எண்களை ரூப முடைய சாதனங்கள் உபயோகித்து முன் நடத்தவேண்டும். மாணவர்க்கு இந்த எண்களை சாதனங்களோடு சம்பந்தப்படுத்தியும் அனுபவமான ரீதியில் அவைகளை உபயோகிக்கப்பழக வேண்டுமென்பதுதான் இதன் முக்கிய நோக்கம்.

அனுபவபரி சீலனம்

சாதனங்களின் ரூபங்கள் கொண்டு ஒன்றுமுதல் 10 வரை உள்ள எண்களைக்குறித்து ஒருபடம் (சார்ட்) நிர்ம்மிக்க வேண்டும். பிறகு 10 முதல் 20வரை, 20 முதல் 30 வரை ....90 முதல் 100வரையுள்ள எண்களுக்கும் படங்கள் நிர்ம்மிக்கலாம்.

1 முதல் 10 வரையுள்ள எண்களின் ஆராய்ச்சி.

கைகால்களின் விரல்களும் முன் உபயோகித்த சாதனங்களும் இங்கேயும் உபயோகிக்கலாம், மாணவர் இந்த சாதனங்களை 2–களின் கூட்டங்கள், 3-களின் கூட்டங்கள், 4–களின் கூட்டங்கள்............ 10- களின் கூட்டங்களாக சேர்த்துவைக்கட்டும். இவ்வித ஜோலிகள் மாணவர் தாராளம் செய்ய வேண்டும், ஒழுங்காயும் அழகாயும் அடுக்கியிருக்கும் ஒரு கூட்டத்தைப் பார்த்தவுடன், அதில் எத்தனை சாதனங்களுண்டென்று சொல்லக் கூடியதில் அறிவு உண்டாக வேண்டும். ஒரு கூட்டத்தில் 10 சாதனங்கள் தான் இருக்கவேண்டும்.

அனுபவபரிசீலனம் (Practcalel work)

2, 3, முதலானகூட்டங்களில் படம். இந்த அவஸ்தையில் அக்கங்கள் படிப்பிக்கலாம், முதலாவது 1 முதல் 10 வரை அக்கங்கள் படிப்பிக்கவேண்டும். (1 முதல் 10 வரை அக்கங்களின்படம் நிர்மிக்கவேண்டும்.)

உபாத்தியாயருக்கு தெரிந்ததோ கண்டுபிடிக்கக் கூடியதோ வான பாட்டுகளும் விநோதக்களிகளும் முன் விவரித்த அனுபவகாரியங்களுக்கு அவசியமான உதவியாகும்.

10 முதல் 100 வரையுள்ள எண்கள்.

ஏராளம் சாதனங்கள் கொடுத்து மாணவரைக்கொண்டு 10–ன் கூட்டங்களாக வைககப்பண்ணவேண்டும். இந்த கூட்டங்களின் உதவியால் 20(2, பத்து), 30 (3 பத்து)........ 100 (10 பத்து) முதலிய எண்கள் படிக்க உபாத்தியாயர் தூண்டிக்கொடுக்கவேண்டும். இந்த எண்களின் பெயர் மாணவர்களின் மனதில் பதியவேண்டும்.

பிறகு பத்தின் ஒரு கூட்டத்தோடு 1, 2, 3 என்று இவ்விதம் கூட்டிச்சேர்த்து 11, 12, 13 முதலான எண்களை படிப்

பிக்கவேண்டும். 21, 22, 23, முதலிய எண்களைப் படிப்பிக்க இதுபோலுள்ள ரீதியை கையாளவேண்டும். இந்த ரீதியின் 10–களின் இடையிலுள்ள எண்கள் முதல் 100 வரையுள்ளவை படிப்பிக்கலாம். எண்களின் ஸ்தான வித்தியாசமூலம் உண்டாகும் விலை வித்தியாசங்கள் படிப்பிக்கவேண்டாம்.

இவ்வளவும் கழிந்தால் 20 வரை, 30 வரை, 40 வரை படிப்படியாய் எண்கள் எழுதலாம். ஒவ்வொரு மாணவனும், மணலிலோ, போர்டிலோ, சிலேற்றிலோ எழுதவேண்டும்.

அனுபவபரிசீலனம் (Practical work)

1 முதல் 10 வரை, 11 முதல் 20 வரை, 21 முதல் 30 வரை முதலிய எண்களின். படங்கள்.

ஆரோகணக் கிரமத்திலுள்ள எண்ணம் கழிந்தால் இறங்கு வரிசைக்கிரமத்திலுள்ள எண்ணம் ஆரம்பிக்கலாம். 1 முதல் 10 வரையுள்ள எண்ணம் பல விதங்களிலும் பரீசீலித்துக்கழிந்தால் 10 முதல் 1 வரை எண்ணம் படிப்பிக்க வேண்டும். இந்த ரீதியில் ஒவ்வொரு பாகத்தின் ஆரோகணம் அனுசரித்துள்ள இறங்கு வரிசைக் கிரமமும் நடக்க வேண்டும்.

அனுபவ பரிசீலனம் (Practical work)

10 முதல் 1 வரை 20 முதல் 11 வரை 30 முதல் 21 வரை இவ்விதம் இறங்கு வரிசைக் கிரமத்தில் எண்களின் படம் நிர்ம்மிக்கவேண்டும்.

கூட்டலும் கழித்தலும்.

எண்மானத்தின் இரண்டு வசங்களும் உபர்த்தியாயரின் மனதில் இருக்கவேண்டும்.

(1) எண்ணுதலின் எரு கிரமம். (2) 1-ன் கூட்டல் பட்டிகை. அதாவது பொதுவில் கூட்டும் எண் 1 ஆக இருக்கும் பட்டிகை. ஒரு கூட்டத்திலுள்ள சாதனங்களோடு ஒரு சாதனம்கூட சேர்ந்தால் எண்களின் கிரமத்தில் அடுத்த பெரிய எண் கிடைக்கிறது என்று ரூபமுடைய சாதனங்சள் உபயோகித்து மாணவரின்மனதி

லாக்கவேண்டும். அவ்விதம் கழித்தலின் கிரமத்தையும் மனதிலாக்கலாம். அநுபவ பரிசீலனம்மூலம் 1-ம் 1-ம் கூட்டினல் 2, 2-ம் 1-ம் கூட்டினல் 3, 3-ம் 1-ம்கூட்டினல் 4 என்றவ்விதம் படிப்பிக்க வேண்டும். பிறகு 1-ன்கூட்டல் பட்டிகை தயாருக்க வேண்டும். அது போலவே 2, 3, 4 முதலிய எண்களின் காரியத்திலும் செய்யவேண்டும். இது 20 வரை நடத்தலாம். கூட்டும் எண் கிரமத்தில் 1-ல் இருந்து 10-க்கு போகலாம். ஆனல் தொகை 20 ஆக இருக்க வேண்டும்.

1, 2. 3. 4, ... முதலியவைகளின் கூட்டல் பட்டிகை கூடுதல் ஜோலி வாய்மொழி மூலமாக 1-ல் ஆரம்பித்து 20 வரையுள்ள அடுக்கது, மூன்ருவது, நான்காவது முதலிய எண்களை சொல்லுவித்தல்:

அநுபவ பரிசிலனம் (Practical work)

ஒன்றிடைவிட்டுள்ளது, இரண்டிடை விட்டுள்ளது, மூன்றிடைவிட்டுள்ளது, நாலு இடைவிட்டுள்ளது முதலான எண்களின் ஆரோகணப்பட்டிகைதயாருக்குக.

எண்களின் ஆரோகணக்கிரமம் கூட்டலுக்கு பட்டிகையாக அங்கீகரிக்கிறது போலே இறங்கு வரிசைக்கிரமம் கழித்தலுக்குள்ள பட்டிகையாக கைக்கொள்ளலாம். கூட்டலுக்கு உபயோகித்த ரீதியையே உபயோகிக்கலாம். 20-ஐ உயர்ந்த அதிராகவைத்துக் கொள்ளவேண்டும்.

அநுபவ பரிசிலனம் (Practical work.)

1, 2, 3, 4 முதலியவையின் கூட்டல் கழித்தல் பட்டிகை தயாருக்குக. 10 வரையுள்ள எண்களின் கூட்டல் சம்பந்தித்து லெகுவான கணக்குகள் இந்த நிலைமையில் கொடுக்கலாம். பிறகு 20 வரையுள்ள எண்களை சம்மந்தித்தும் அவ்விதம் செய்யலாம். தொடர்ந்து 20-க்கு கீழ் உள்ள எண்களையும் அவ்விதம் கழிக்கலாம்.

ஒன்றின் அக்கம் நமது வலது பாகமும், 10, 100 முதலியவை இடது வசமும் எழுதுவதின் சாதாரண சமாதானம்:—

மற்ற கூட்டங்களை விட ஒற்றைகளைத்தான் நாம் அதிகம் உபயோகிந்து வருகிறது. அதினால் வசதியனுசரித்துள்ள ஒரு கிரமீகரணம்.

வியாபாரிகள் தராஸில் சாமான்கள் வலது தட்டில் வைக்கிறதும், கிராமபோனின் சாவி வலது வசம் இருக்கிறதையும் ஒற்றுமைப்படுத்தலாம்.

நாணயங்கள் பார்த்தறிதல் முதலானவை

[பணம், சக்கரம். அரைச்சக்கரம், கால்ச்சக்கரம், காசு இவை ஏகதேசம் 20 எண்ணம் விதம் வேண்டும்.]

மாணவர் மனம்போல் இந்த நாணயங்களை கையாடி அவைகளின் பருமன், வடிவம், கனம் முதலியவைகளை மனதிலாக்கவேண்டும், தூரத்தில் நின்று பார்த்தும் கண்கள் அடைத்துக் கொண்டு தொட்டும் இந்த நாணயங்களை பிரத்தியேகமாக அறிய பழக்கவேண்டும், இந்த நாணயங்களின் ஒன்றோடொன்றுள்ள சம்பந்தம் பிறகு படிப்பிக்க வேண்டும் நாணய மாற்றம் சம்பந்தித்து விளையாட்டுகள் மூலம் மனதிலாக்க வேண்டும்.

வியாபாரவிளையாட்டுகள் நடத்தவேண்டும். ஒரு மாணவன் வியாபாரியும், இரண்டு மூன்று பேர் சாமான்கள் வாங்குகிறவர்களுமாக இருக்கவேண்டும். அவர்கள் சில சாமான்கள் கடையிலிருந்து வாங்கி விட்டு விலை கொடுத்து மீதி வர வேண்டுமானால் திரும்ப வாங்கவும் வேண்டும்.

இது மாதிரியுள்ள பல விளையாட்டுகளும் உபாத்தியாயர் மாணவரைக் கொண்டு பழக்கவேண்டும். வாங்கல், விற்பனை சம்பந்தித்து லெகுவான கணக்குகள் வாய்மொழியாக கேட்கலாம்.

அநுபவ பரிசிலனம் (Practical work)

முன் படித்த நாணயங்களின் சம்பந்த விவரப்பட்டிகை மாணவர் தயாருக்கவேண்டும்,

இரண்டாம் வகுப்பு.

(ஒன்றுகள், பத்துகள். நூறுகள், ஆயிரங்கள்)

(10-ன் கெட்டுகள், 100-ன் பவளப்பைகள், 1000-ன் விதைப்பைகள்)

1 முதல் 100 வரையுள்ள எண்கள் மறுபடியும் பார்க்க. 100-ன் பைகள் உபயோகித்து 200, 300, 400, . . . முதலி

யவை படிப்பிக்கவேண்டும். கரும்பலகையில் எழுதவும் வேண்டும்.

100-ன் பைகளும், 10-ன் கெட்டுகளும் உபயோகித்து 110, 120, 130, ... 220, 210, 230 ...... இப்படியாக படிப்பிக்கவும். கரும்பலகையில் எழுதவும். ஒன்றும் மற்ற சாதனங்களும் உபயோகித்து மூன்றக்க எண்கள் மனதிலாக்குக.

பைகளும் கெட்டுகளும் ஒழுங்குப்படுத்துக. அதற்கு மாணவரின் ஆலோசனை கேட்க. 10, 100, இவைகளின் கூட்டங்களை ஒழுங்கப்படுத்தியிருப்பதாலுள்ள வசதி சூண்டிக்காட்டுக.

கர்சவடக்காரரும் பணவியாபாரிகளும் கொடுக்கல் வாங்கல் நடத்தும் ரீதி பரிசோதிக்குக. அளவும், எண்ணமும் நிச்சிதமான கெட்டுகளாக சாமான்கள் விற்கிறார்கள். பல எண்களை ரேகைப்படுத்தும் ரீதியில் இருந்து எண்களின் ஸ்தானவிலை என்ற அர்த்தம் மனதிலாக்க மாணவரை தூண்டுக. ஏராளம் அப்பியாசங்கள் மாணவரைக்கொண்டு செய்யவேண்டும்.

உபாத்தியாயர் சொல்லும் எண்களின் அக்கங்கள் இடது பக்கமிருந்து வலபக்கத்தும் வல பக்கமிருந்து இடதுபக்கமும் மாணவரைக்கொண்டு வாசிப்பிக்கவேண்டும். நேரே மாதிரியுள்ள அப்பியாசமும் மாணவரைக்கொண்டு செய்யவேண்டும். பிறகு 1000 மனதிலாக்குக. அக்கங்களின் ஸ்தானவிலையின் அர்த்தம் இந்த எண்ணின் காரியத்திலும் தெளிவாக்குக.

9999வரையுள்ள நாலக்க எண்கள் படிப்பிக்கவேண்டும். முன் சொன்ன வழியும் பல வித அப்பியாசங்களும் உபயோகிக்கவேண்டும். ஒரு நிச்சித ஸ்தானவிலைக்குள்ள அக்கத்தின் ஸ்தானம் நிச்சயப்படுத்த மறுபடியும் மனதிலாக்குக.

9999 வரையுள்ள அக்கங்கள் கவனமாய் பரிசோதித்து சேர்த்து சேர்த்து எழுதப்பழக்கவேண்டும். 10,000 என்ற

எண் முன் வைக்குக, நாலக்க எண் எழுத மனதிலாக்கவும். உபாத்தியாயர் சொல்லும் எண்கள் மாணவர் எழுதவும் உபாத்தியாயர் எழுதும் எண்கள் மாணவர் வாசிக்கவும் செய்ய வேண்டும். பிறகு இந்த எண்களை வார்த்தைகளில் எழுத படிப்பிக்க வேண்டும். அக்கங்களாய் எழுதும் எண்களை வார்த்தைகளிலும் மாற்றியும் எழுதப்பழக்க வேண்டும்.

கூட்டலும் கழித்தலும்.

கைவசமுள்ள உபகரணங்கள் உபயோகப்படுத்தி ஒரு இரண்டக்க எண்ணும் ஒரக்க எண்ணும் கூட்டப் படிப்பிக்க வேண்டும். இரண்டு ஒற்றை எண்கள் சேர்ந்து "பத்து" பூர்த்தியாகிறது பரிசோதித்து "மீதி" வரும் விதத்தை மனசிலாக்குக. உதாரணமாக 4-ம், 8-ம் கூட்டினால் 'ஒரு பத்தும்' "இரண்டு ஒற்றையும்' கிடைக்கிறது என்று சூண்டிக்காட்டுக. இந்த பத்து, 10-ன் ஸ்தானத்தில் 1கொண்டு ரேகைப்படுத்த வேண்டும். 4 பளிங்கு+8 பளிங்கு=12 பளிங்கு=1 பத்துப்பை + 2 ஒற்றப்பளிங்கு.

ரூபமுடைய சாதனங்கள் கொண்டுள்ள இந்த அப்பியாசம் அக்கங்களின் ஸ்தானவிலையோடு சப்பந்தப்படுத்தி தெளிவாக்கவேண்டும். இந்த விதத்தில் ஏராளம் அப்பியாசங்கள் செய்விக்க வேண்டும்.

2. இரண்டக்க எண்கள், 1 இரண்டக்க எண்ணும் 1 மூன்றக்க எண்ணும், 1 நாலக்க எண்ணும், மூன்றக்க எண்ணும்2 நாலக்க எண்கள் முதநியவைகளின் கூட்டல்கிரியை செய்யட்டும். கூட்டி வரும் தொகை 5 அக்க என். ஆக வேண்டாம். அதின் பிறகு 2 எண்களிலதிகம் கூட்டும் விதம் படிப்பிக்க வேண்டும் பிறகு எண்களில் அக்கங்களின் எண்ணம் அனுசரித்துதரம் பிரித்து எண்கள் கூட்டவேண்டும்.

கழித்தல்:—ஒரு மாணவன்கையில் 5 பளிங்கு கொடுத்துவிட்டு 3 தரும்படி சொல்லவேண்டும். எத்தனை மீதியுண்டு? ஒருவன்கையில் 9 பளிங்கு கொடுத்துவிட்டு 4 தரும்படி கேட்டால் எத்தனை மீதியிருக்கிறது?

எடுத்து விடவோ, நீக்கி விடவோ, குறைக்கவோ செய்யும் எண், எதிலிருந்து எடுக்கப்படுகிறதோ, அந்த எண்ணை விட சிறியதாயிருக்க வேண்டுமென்ற காரியம் மனதிலாக்க வேண்டும்.

ஒரு மாணவனுக்கு ஒரு 10-ன் பையும் 5 ஒற்றைப் பளிங்கும் கொடு. 2பளிங்கு திருப்பத்தரச் சொல். எத்தனை மிதி இருக்கும்? 3, 4, 5 முதலிய எண்கள் உபயோகித்து செய்க. ஒவ்வொரு அவசரத்திலும் எத்தனை மிதி வரும்? 8 எண்ணம் தரும்படி சொல். என்ன சம்பவிக்கிறது? 10-ன் பை திறந்து அதிலிருந்து கொஞ்சம் எடுக்க வேண்டும் என்று மாணவன் சொல்லலாம். இரண்டக்க எண்ணும், ஒரக்க எண்ணுமோ அல்லது இரண்டு இரண்டக்க எண் களோ உபயோகித்து இவ்விதக் கேள்விகள் கேட்குக. இந்த அப்பியாசம் இவ்விதம் தெளிவாக்கலாம்.

1 பத்து பை 5 ஒன்று—15 ஒன்று
9 ஒன்றுகள் எடுத்தால்—9 ஒன்று எடுத்தால்

6 ஒன்றுகள் மிதி.

இவ் விதத்தில் தெளிவாக்கும் சம்பிரதாயம் மனதிலாக் கணம். இவ்விதம் அக்கங்கள் உபயோகித்து கிரியை செய்ய பிள்ளைகளை உற்சாகப்படுத்த வேண்டும். இது 4 அக்கம் வரை உள்ள பெரிய எண்கள் வரை பூர்த்தியாக்கலாம். இவ் விதம் கழித்தல் பாடம் மாணவருக்கு மனதிலாக்கலாம்.

விபரீத கூட்டல் ரூபத்தில் உள்ளகூட்டல் சம்பிரதா யம் இந்த நிலைமையில் உபயோகிக்கவும் உறைப்பிக்கவும் செய்யலாம்.

கூட்டல் கழித்தல் சம்பந்தித்து ஜிவிதரீதியிலுள்ள சில லெகுவான கணக்குகள் படிப்பிக்க வேண்டும்

பெருக்கல் வாய்ப்பாடு. –10 வரை.

ரூபமுடைய வஸ்துக்கள் உபயோகித்து இந்த விடை யை மாணவருக்கு மனதிலாக்குக.

$1+1=2$
$1+1+1=3$
$1+1+1+1=4$...... முதலியன.

பெருக்கல் அடையாளம் (×) கூட்டலின் ஓர் சுருக்க முறையாகும். 1×3 என்பது 3 ஒன்றின் தொகை. 2×4 என்பது நாலு இரண்டின் தொகை. இவ்விதம் லெகு வான பெருக்கல் கணக்குகள் உபயோகிக்கவேண்டும். இவ் விதம் தொடர்பாகவுள்ள கூட்டலின் ஓர் சுருக்க முறைதான் பெருக்கல். ஒரு எண்ணை வேறு ஒரு எண் கொண்டு பெருக்கி கிடைக்கும் பலம் சில ஒரேதரம் எண்களை தொடர்பாக

எழுதிக் கூட்டும் தொகைதான். இது சம்பந்தமாயுள்ள கிரியைவிவஸ்தைகளை மாணவர் மனதிலாக்க வேண்டும். 10 வரையுள்ள எண்களை 10 வரையுள்ள எண்களால் பெருகுவதற்குள்ள ஒரு பெருக்கல் வாய்ப்பாடு தொடர்பாய் கூட்டி மாணவர் கண்டுபிடிக்கவேண்டும். இவ்விதம் கிடைத்த விடைகள் அவர்கள் மனப்பாடம் செய்யவேண்டும்.

பெருக்கல் வாய்ப்பாடின் மாதிரி.

1 × 2 = 2	1 × 1 = 1
2 × 2 = 4	1 × 2 = 2
3 × 2 = 6	1 × 3 = 3
4 × 2 = 8	1 × 4 = 4
... .	1 × 5 = 5
... .	1 × 6 = 6
10 × 2 = 20	.

1 × 3 = 3	2 × 1 = 2
2 × 3 = 6	2 × 2 = 4
3 × 3 = 9	2 × 3 = 6
... .	2 × 4 = 8
... .	2 × 5 = 10
10 × 3 = 30	

இரண்டுதரம் பட்டிகைகள் தயாரிக்கலாம். ஒன்றில் ஒரேகுணகமும் வித்தியாசமான குணியங்களும் உபயோகிக்கலாம். மற்றதில் ஒரே குணியமும் வித்தியாசமான குணகங்களும் உபயோகிக்கலாம். இவ்விதம் பட்டிகைகள் தயாராக்கி வைத்தால் பிரமாணமாக உபயோகிக்கலாம்.

பல குணியங்களும் ஒரு குணகமும் உபயோகித்த பட்டிகைதான் மாணவர்க்கு பெரிய பெருக்கலுக்கும் உதவியாயிருக்கும்.

தாழே காணும் பிரகாரமுள்ள ஒரு பெருக்கல் வாய்ப்பாடு தயாராக்கலாம்:—

1	2	3	4	5	6	7	8	9	10
2	4	6	8	10	12	14	16	18	20
3	6	9	12	15	18	21	24	27	30
4	8	12	16	20	24	28	32	36	40
5	10	15	20	25	30	35	40	45	50
6	12	18	24	30	36	42	48	54	60
7	14	21	28	35	42	49	56	63	70
8	16	24	32	40	48	56	64	72	80
9	18	27	36	45	54	63	72	81	90
10	20	30	40	50	60	70	80	90	100

நாணயங்கள்—[பிரிட்டிஷ் இந்திய நாணயங்களும் திருவிதாங்கூர் நாணயங்களும்]

நாணயங்களை மாணவருக்குக் காண்பித்து மனதிலாக்க வேண்டும். வெள்ளி நாணயங்களா, அல்லது செம்பு, பித்தளை, ஓடு முதலியவை கொண்டுள்ள நாணயங்களா கூடுதல் விலையுள்ளது என்று ஆலோசிக்க மாணவரை தூண்ட வேண்டும். அவைகளின் விலையை அவர்களுக்கு மனதிலாக்க வேண்டும். அவைகளின் யதார்த்தவிலையும் திருவிதாங்கூர் நாணயங்களுக்கும் பிரிட்டிஷ் நாணயங்களுக்கும் தம்மில் உள்ள சம்பந்தமும் படிப்பிக்கவேண்டும். வாங்கல் விற்றல் முதலியவை சம்பந்தமாய் நாணயமாற்றம் படிப்பிக்க வேண்டும். முதல்வகுப்பில் உள்ளது போலேயுள்ள விநோதங்கள் கூடுதலாய் கொடுக்கவேண்டும். நாணயங்களைக் கண்டால் உடன் பகுத்தறிய திறமை உண்டாகவேண்டும். அதற்காக நாணயங்களின் வடிவம், பருமன், கனம், நிறம் முதலியவை நிச்சயமாய் தெரியவேண்டும்.

லெகுவானபின்னங்களின் கருத்து.

முழுரூபாய்க்கும் அரைரூபாய்க்கும், முழுப்பணம் அரைப்பணம், முழுச்சக்கரம் அரைச்சக்கரம் முதலியவைக்கும், காகிதத்துண்டுகள், கம்புதுண்டுகள், நூல்துண்டுகள் முதலியவை அடிஸ்தானமாக்கி தொடங்கவேண்டும். $\frac{1}{2}$-ல் இருந்து ஆரம்பிக்க வேண்டும். பிறகு $\frac{1}{4}$. இவைகளில் சரியான அறிவு வந்தவுடன் $\frac{3}{4}$ ஆரம்பிக்கவேண்டும். பயிற்சி கணக்குகள் கொடுக்குக.

2 சக்கரம், 4 காகிதம், 6 சான் இவைகளின் $\frac{1}{2}$-எவ்வளவு?
1, 2, 3, 4 ......சாதனங்களின் $\frac{1}{4}$ எவ்வளவு!
1, 2, 3, 4.........சாதனங்களின் $\frac{3}{4}$ எவ்வளவு?.
சாதாரண நாணயங்களின் $\frac{1}{4}$,ம், $\frac{3}{4}$-ம்.

$\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{3}{4}$ முதலிய பாகங்கள் எவ்விதம் வெட்டி எடுக்கலாம் என்று படிப்பிக்கவேண்டும். (காகிதம், நூல்துண்டுகள், கம்புகள், வட்டவடிவத்திலுள்ள காகிததுண்டுகள் முதலியவற்றை உபயோகிக்கலாம்) கூடியமட்டும் வியாபாரவிளையாட்டுகள் காட்டவேண்டும். $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{3}{4}$ இவைகளின் கருத்து சரியாய் மனதிலாக்கவேண்டும்.

மூன்றாம் வகுப்பு.

கூடுதல் அக்கங்கள் உள்ள எண்களைப்பற்றி படிப்பிக்க ஸ்தூலபதார்த்தங்களின் அவசியம் அதிகம் வேண்டாம், ஆனால் 10,000; 100,000; 99,999 வரையுள்ள பெரிய எண்களை படிப்பிக்க அக்கங்களின் ஸ்தானவிலை மனதில் பதிப்பிக்க வேண்டும். எண்களை ஆராய்ச்சி செய்யவும், பிரித்தும் சேர்த்தும்எழுதவும், எழுத்துகளிலும் அக்கங்களிலும் எழுதவும் தெரியவேண்டும். கூட்டல் கழித்தல் முறையில் பெரிய கணக்குகள் கொடுத்து பயிற்சிக்கவேண்டும்.

பெருக்கல் வாய்ப்பாடு 11, 12, ...16 வரை படிப்பிக்க வேண்டும். தாழ்ந்த வகுப்பில் செய்ததுபோல் பட்டிகை தயாராக்கி மனப்பாடம் செய்விக்க வேண்டும். (பட்டிகையின் மாதிரி 2-ாமது வகுப்பிற்கு தயாராக்கினது போல்தான்.)

கிரமப்பிரகாரமுள்ள பெருக்கல்.

ஒரு இரண்டக்க எண் × ஒருஓரக்கஎண். ஒரு இரண்டக்க எண்ணை முதலாவது ஆராய்ச்சிசெய்யவேண்டும்.

உதாரணம்:-- 28 × 7.

2 பத்தும் 8 ஒன்றும் எடுத்து; 7 தரம் கூட்டினால் 14 பத்தும் 56 ஒன்றும் அதாவது 14 பத்தும் 5 பத்தும் 6 ஒன்றும் அல்லது 19 பத்தும் 6 ஒன்றும்; அல்லது 1 நூறும் 9 பத்தும் 6 ஒன்றும் அதாவது 196, என்றுபத்தில் எழுதினால்

28
7
196

பத்தாம் ஸ்தானத்தின் அக்கம் பெருக்குமுன் ஒன்றாம் ஸ்தானஅக்கம் பெருக்கவும்; நூறாம் ஸ்தான அக்கம் பெருக்குமுன் பத்தாம் ஸ்தானஅக்கம் பெருக்கவேண்டுமென்பதைச் சரியாய் மனதிலாக்கவேண்டும். அதுபோலே 2-ம் 3-ம், 4-ம் அக்கங்கள் உள்ள எண்களை பெருக்குக. 324 × 36 பெருக்க. பின் அடிஸ்தானத்திலிருந்து ஆரம்பிக்கலாம். 36 தரம் 324-ஐ கூட்டவேண்டும் என்று அர்த்தம். அதாவது 324 + 324 + 324 ....36தரம். அதற்கு மிகவும் எளிதான ஒரு வழி மாணவர் ஆலோசிக்கட்டும். பத்துகொண்டு பெருக்கி கிடைக்கும் தொகைக்குள்ள விசேஷத்தையும் மனதிலாக்க வேண்டும்.

ஓரக்க எண்கொண்டுள்ள எழுதிப்பெருக்கல்.

உதாரணம் :--324 × 6

i.e. (3 நூறு + 2 பத்து + 4 ஒன்று) × 6 ஒன்று.
= 18 நூறு + 12 பத்து + 24 ஒன்று.
= 1 ஆயிரம் + 8 நூறு + 1 நூறு + 2 பத்து + 2 பத்து + 4 ஒன்று.
= 1 ஆயிரம் + 9 நூறு + 4 பத்து + 4 ஒன்று.
= 1944.

324-ஐ 36 கொண்டு பெருக்க இந்த வழியை கொஞ்சம் கூட தெளிவாக்கலாம்.

324 × 36 = (3 நூறு × 36) + (2 பத்து × 36) + (4 ஒன்று × 36)
= 108 நூறு + 72 பத்து + 144 ஒன்று.
= 10800 + 720 + 144 = 11664

அல்லது 10 ஆயிரம் + 8 நூறு + 7 நூறு + 2 பத்து + 14 பத்து + 4 ஒன்று

அதாவது 1 பதினாயிரம் + 8 நூறு + 7 நூறு + 2 பத்து + 1 நூறு + 4 பத்து + 4 ஒன்று

i.e. 1 பதினாயிரம் + 16 நூறு + 6 பத்து + 4 ஒன்று.
i.e. 1 பதினாயிரம் + 1 ஆயிரம் + 6 நூறு + 6 பத்து + 4 ஒன்று
= 11664

முறையே உள்ள வழி உபயோகித்து பூஜியங்களை நீக்கி அக்கங்களின் ஸ்தானவிலை அனுஸரித்து அந்த ஜோலி நடந்திருக்கிறது.

கூடுதல் கணக்குகள்கொடுக்குக.

வகுத்தல்:----சில திருஷ்டாந்தங்கள் கொண்டும் உதாரணங்கள் கொண்டும் வகுத்தலின் அர்த்தம் என்னவென்று மாணவரை மனதிலாக்குக. ஒரு எண் மற்ற எண்ணில் எத்தனை தரம் அடங்கியிருக்கிறது என்று கண்டுபிடித்து தான் வகுத்தல் ஸ்கேல்கொண்டு ஒரு நீளத்தை அளந்து திருஷ்டாந்தப்படுத்துக. நாம் என்ன செய்கிறோம்? முழு நீளத்திலிருந்துகிளிப்தமான ஒரு நீளம் அளந்து எடுக்கிறோம். ஒரு பாத்திரத்திலுள்ள சாதனத்தை அளக்கிறோம். ஒருபாகம் விதம் அளந்து நீக்குகிறோம். கடைசியில் மீதி இருக்கிறது எந்த அளவுகொண்டு அளக்கிறோமோ அதைவிட சிறிய ஒரு பாகம் தான். அதாவது தொடர்பான கழித்தல்தான் நாம் செய்கிறது.

வகுத்தல் என்பது தொடர்பான கழித்தல்தான். பெருக்கல் வாய்ப்பாட்டின் உதவியால் ஒரு எண்ணில் மற்றொரு எண் எத்தனை தரம் அடங்கியிருக்கிறது என்று லெகுவில் கண்டுபிடிக்கலாம்.

பிறகு எண்களை அவைகளின் பிரதான பாகங்களாக பிரித்து சாதாரண ரீதியில் கிரியை செய்ய படிப்பிக்குக.

8 ÷ 3; எத்தனை மூன்று கிடைக்கும்? மீதி என்ன?
14 ÷ 3; 14 ஒன்றில் எத்தனை 3 உண்டு? ,,
116 ÷ 3. 116 ஒன்றில் எத்தனை 3 உண்டு? ,,
15 ÷ 12; 15 ஒன்றில் எத்தனை 12 உண்டு? ,,
அல்லது 1 பத்தும் 5 ஒன்றும் ÷ 1 பத்தும் 2 ஒன்றும் எத்தனை தரம்?
[என்ன மீதி?
27 ÷ 11; 2 பத்தும் 7 ஒன்றும் ÷ 1 பத்தும் 1 ஒன்றும் — ,,
27 ÷ 18; 2 பத்தும் 7 ஒன்றும் ÷ 1 பத்தும் 8 ஒன்றும் ,,
108 ÷ 13; 1 நூறும் 8 ஒன்றும் ÷ 1 பத்தும் 3 ஒன்றும் ,,

ஈவு உத்தேசிக்க பயிற்சிக்கவேண்டும். பிறகு கிரமமாய் சரியான வழி பயிற்சிக்க பழகுந்தோறும் லெகுவான வகுத்தல் கொடுத்துவரவும்.

திருவிதாங்கூர், இந்தியா நாணயங்கள்.

பழைய பாடம் பார்த்தல்.

நாணயங்களின் கூட்டல் கழித்தல் மனதிலாக்குக. தாழ்ந்த தரம் நாணயங்களிலுள்ள இரண்டு எண்கள் கூட்டிவரும்போது ஒரு பெரிய தொகை கிடைத்தால் அதை கொஞ்சம்கூட உயர்ந்த இனத்துக்கு மாற்றலாம். கழித்தல் நேரே மாறியும் செய்யலாம். இவ்விதம் கூட்டல் கழித்தல் பயிற்சிக்க கூடுதல் கணக்குகள் செய்விக்கவும்.

நீட்டளவு:—முழம், சாண், சுவடு முதலியவை விவரித்து மனதிலாக்குக. பல ஆட்களிடத்தும் வித்தியாசமாயிருக்குமென்று கண்டுபிடிக்காண்பிக்க. பொதுவான ஒரு அளவு அல்லது தோது அவசியப்படுகிறது. பஜார்களில் உபயோகித்துவரும் கெஜக் கோல் வரையுள்ள இங்கிலிஷ் தோதுகளை மனதிலாக்குக.

சமயம்:—சூரியனும் ஆகாசத்தில் அதின் தெளிவான சஞ்சாரமும். அதற்கு வேண்டிவரும் சமயம் ஏகதேசம் மாற்

தமில்லே (ஸ்நிரம்). சமயம் அளக்கும் ரீதியும் தோதுகளும் மனதிலாக்கவேண்டும். செக்கன்ட் ஸூசியுள்ள ஒரு கடிகாரமோ, நாழிகைகாட்டும் மணியோ காட்டி, கடிகாரமுகம் மனதிலாக்குக. சமயம் பார்க்கும் விதம் மாணவரை படிப்பிக்கவேண்டும்.

பின்னம்:—ரூபாயும் அணவும் அல்லது சக்கரமும் காசும் உபயோகித்து பின்னம் படிப்பிக்கவேண்டும். மலையாளத்திலோ தமிழிலோ வழங்கிவரும் இந்த பின்னங்களின் பெயர்களை மனதிலாக்கவேண்டும். நாணயங்கள், காகிதம், பவளமணிகள் உபயோகித்து பயிற்சிகணக்குகள் கொடுக்குக,

நான்காம் வகுப்பு.

ஒரு லெக்ஷம் வரையுள்ள எண்களை வாசிக்கவும் எழுதவும் செய்யவேண்டும். எண்களை ஆராய்ச்சி செய்து பிரித்து இடது வசமுள்ள அக்கங்களுக்கும் வலது வசமுள்ள அக்கங்களுக்குமுள்ள ஸ்தானவலிப்பத்தை மனதிலாக்க வேண்டும்.

பயிச்சி:—வாய்மொழியாயும், எழுதி செய்வித்தும் ஒரு லெக்ஷம் வரையுள்ள எண்களை மனதிலாக்க வேண்டும்.

நீட்டலளவு:—மூன்றுவது வகுப்பிலுள்ள பழைய பாடம் பார்த்தல். ஒவ்வொரு தோதையும் கிழினமும் மேலினமும் ஆக்கல். இது சம்பந்தமான கணக்குகள்.

திருவிதாங்கூர் அளவுகள்:—ஒரு கோல் 30 இஞ்சு அல்லவென்று மனதிலாக்கி, வசதிக்காக 30 இஞ்சு என்று வைத்திருக்கிறதாக மனதிலாக்கவும். இது சம்பந்தமான கணக்குகள் கொடுக்கவேண்டும்.

பயிற்சி:—நிலத்தின் அளவும் தோதும் உபயோகித்து, வரைக்கும் ரீதியும், ஸ்கேல் உபயோகிக்கும் முறையும் மனதிலாக்கி படிப்பிக்க வேண்டும். பூமிசாஸ்திரபாடத்தோடு தாரதம்மியப் படுத்துக.

பின்னங்கள்:—3-ாமது வகுப்பிலே பாடங்களைதிரும்பப் பார்க்க. பின்னங்களை கொஞ்சம்கூட மனதிலாக்க வேண்டும். ஒரு சாதனத்தை சில சமபாகங்களாக விதிக்கு அவைகளில் சிலதை எடுக்கவேண்டும்.

தூக்கம் (நிறை)---ஸ்தலத்திலுள்ள நிறை தோதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். பிறகு சில இங்கிலிஷ் நிறைகளை மனதிலாக்கி படிப்பிக்கவேண்டும்.

பரிமாண அளவு:---மாணவர்க்கு தெரிந்த பரிமாண அளவுகளைப்பற்றி படிப்பிக்க. முன் சொன்ன தோதுகளை அந்நியோந்நியம் தரம்மாற்றுக.

பிரிட்டிஷ்இந்தியா, திருவிதாங்கூர் நாணயங்கள் சம்பந்தமாயுள்ள 4 கிரியைகளிலும் பல கணக்குகள் போடவும், பல நாணயங்கள் சேகரிக்கவும்.

பயிற்சி:---சாதாரண தராசு உபயோகித்து ஒரு சாமானத்தின் நிறை காண்க. $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{3}{4}$, $\frac{1}{8}$, $\frac{3}{8}$, $\frac{5}{8}$, $\frac{7}{8}$, $\frac{1}{6}$........முதலிய பாகங்கள் வெட்டியெடுக்க. (வெட்டியெடுக்கும் பாகங்கள் 2-ன், 3-ன்- 16 வரையுள்ள பெருக்குத் தொகைகளாயிருக்க வேண்டும்.)

ஐந்தாம் வகுப்பு.

கிரமப்பிரகாரமுள்ள வகுத்தலில் பல கணக்குகள்.

குணுங்கங்களும் குணிஜங்களும்:---இவையைப் பற்றி விவரித்து பெருக்கலிலும் வகுத்தலிலும் உள்ள உபயோகத்தை மனதிலாக்க.

சாதாரணகுணுங்கங்களும் சாதாரண குணிஜங்களும்.

உ. பொ. அ.	அ. பொ. ம.
(G. C. M.)	(L. C. M.)

சமமான பின்னங்கள் கண்டுபிடிக்க.

ஒரு பின்னத்தை கொடுத்திருக்கும் ஒரு பகுதிக்குச் சரியான சமபின்னமாக்கல்:--அதிலிருந்து ஒரு பொதுவான தோது (ரீதி) மனதிலாக்குக. ஒரு பின்னத்தின் தொகுதி பகுதிகளை ஒரே எண்கொண்டு பெருக்கவோ வகுக்கவோ செய்தால் பின்ன எண்ணில் மாற்றமில்லை என்று மனதிலாக்க வேண்டும். இரண்டில் ஒன்று = 4-ல் இரண்டு = ஆறில் மூன்று........முதலியவை முதல் ஆரம்பிக்கவேண்டும்.

பின்னஎண்கூட்டல் வகுத்தலுக்கு (G. C. M) உ. பொ. அ. (L. C. M.) அ. பொ. ம. உபயோகப்படல்.

முழு எண்கொண்டு பின்ன எண்ணை லெகுவாய் பெருக்கவும் வகுக்கவும் செய்யலாம். திருவிதாங்கூர் நாணயங்களும் பிரிட்டிஷ் இந்தியா நாணயங்களும் தம்மில் மாற்றம் சம்பந்தமாய் லெகுவான கணக்குகள்; வரவு செலவு சம்பந்தமாய் உள்ள கணக்கு; வீட்டுக்கணக்குகள். (மாணவருக்கு எளிதில் மனதிலாகக் கூடிய விவரங்கள் மாத்திரம் உபயோகித்தால் போதும்.)

முதல் பலிசை முதலியவை:---வாடகை கூலி முதலியவை கொடுப்பதிலிருந்து மனதிலாக்கலாம். தற்கால உபயோகத்திற்காக ஒரு தொகை கொடுக்கும் ரீதி; நாடுகளில் நடப்புள்ள வழக்கங்கள்; பலிசை ரிக்குகள் மனதிலாக்குக. வாய்மொழிக் கணக்குகளும் எழுத்துக் கணக்குகளும். ஒருபாங்கில் நடத்தும் ஜோலி விவாங்களை மாணவருக்கு மனதிலாக்க வேண்டும். (சேவிங்ஸ் பாங்கு சம்பிரதாயம் மனதிலாக்குக.)

லாபநஷ்டக்கணக்குகள்:---லெகுவான ரீதியில் கடை வியாபாரம், பணம் கடன் கொடுக்கல், வாங்கல் முதலியவை சம்பந்தமாய் உள்ள கணக்குகள்.

இதுவரையிலும் படித்த பட்டிகைகள் எல்லாம் மனப்பாடம் செய்யவேண்டும்.

தமிழ் மொழி கற்பித்தல்.

தமிழ்மொழி கற்பிக்கும் நோக்கம்.

1. மொழியானது மனதின் எண்ணங்களுக்கு ஒலி உருவளிக்கின்றது. மனமானது வேலை செய்யும்போது வெளியே வழிந்து பாய்ந்து செல்கின்றது. மனதின் உள்ளீட்டிற்கு (impression) வெளியீடு (expression) உண்டு. முகக்குறி, சைகை, இன்னும் பல மெய்ப்பாடுகளாலும் செய்கைகளாலும் வெளியீடு ஏற்படுவது மாத்திரமன்று, மக்கட்குச் சிறப்பாகிய மொழியாலும் அது ஏற்படுகின்றது. மனதை விருத்திசெய்து வளர்த்த நினைக்கும் ஆசிரியர் மொழி வெளியீட்டைக் கவனித்து வளர்த்தவேண்டியது.

2. மக்களை மக்களாக்குவது மொழிப் பயிற்சியே எனினும் ஒக்கும். மக்களது அறிவுச் செல்வம் மொழியிலேயே உருவாக்கப்பட்டு சேகரிக்கப்பட்டு நூற்களில் அமைந்து கிடக்கிறது. அதைத் தனியாள் அடைந்துகொள்ளுமாறு மொழிப்பயிற்சி இன்றியமையாத கருவிப் பாடமாகிறது.

3. சமூக வாழ்கையின் இனிமை மொழியின் மூலமே மக்கட்கு அமையும். ஒருவரோடொருவர் ஊடாடி, உறவாடி, உசாவி, உரையாடி மகிழ்ந்திருக்க மொழியைக் கருவியாகக்கொள்ளல் வேண்டும்.

4. இலக்கியங்களை அநுபவித்து இன்பமடைய, சிற்றின்பமட்டுமன்று பேரின்பமுமடைய, மொழி உதவுகின்றது.

5. கல்விப்பயனை எய்துமாறு மொழியே தலைசிறந்த வாயிலாகும். இப்பூவுலகினின்று வானுலகுமட்டும் பாய்ந்து செல்லும் பேரறிஞரது மனவெளியீடு பாமர மக்களை எழுப்பி, வளர்த்தி அறிஞராக மாற்றித் தீர்க்கிறது. அழகுறப் புனைந்த இலக்கியங்கள் மக்கட்கு இன்பமளிக்கின்றன; பக்திரஸம் ததும்பும் பாடல்கள் கடவுளோடு ஒற்றுமையடையக் காரணமாகின்றன. இப்பயன்களை மொழி கற்பிப்போர் மனதிற் கொள்ளவேண்டும்.

முதற்பள்ளியில் (Primary School) மொழிக்கல்வியின் சிறப்புநோக்கங்கள்.

1. கேள்வி:—பிறர் கூறுவதைக் கேட்டறியப் பழகுதல் அவசியமே. செவிப்புலனைப் பயிற்சிப்பதன்று, செவிப் புலனை உபயோகிக்கும் மனதைத் திருத்தமாய்க் கேட்டறியப் பயிற்சிப்பதே இந்நோக்கம். சிசுக்கள் பேசுமுன்னதாகவே கேட்டறியக்கூடிய நிலையிற் காணப்படுகிறார்கள். அவர்கள் முகத்தோற்றத்தாலும் மற்றும் செய்கைகளினாலும் கேட்டறி கிறார்கள் என்பதை நாம் கண்டுகொள்கிறோம். இக்கேட் டறியும் திறம் நாளடைவில் வளர்ந்துவருகின்றது. முதன் முதல் 'அம்மா' 'அப்பா' என்பவைபோன்ற சொற்களை யும் பின்னர் சொற்றொடர்களையும் அதன்பின் நீண்ட உரை களையும் கேட்டறியக்கூடியவர்களாகின்றார்கள். இவ்வளர்ச் சிக்கு உதவுவது ஆசிரியர் கடன்.

2. வாய்மொழி:—வாய்மொழித்திறனடைவது பயிற்சி யாலேயே ஆகும். மொழி திருத்தமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். சொற்களை உச்சரிக்கும் முறையில் கல்வியின் மேன்மையைக் கண்டுகொள்ளலாம். குழந்தைக ளது கொச்சைப் பேச்சு வரவர அற்றுப்போகவேண்டும். பொருள் இனிது விளங்கும் வண்ணம் அழுத்தமாகவும் இன்பமாகவும் மாணவர் பேசக் கற்றுக்கொள்ளல் வேண்டும். முதற்பள்ளிப் படிப்பு முடிக்குங்காலத்தில் மாணவர் தொ டர்ந்து பேசி நிற்கும் திறன் அடைந்தவர்களாகக் காணப் படவேண்டும். வருங்காலங்களில் அவர்கள் சொற்பொழி வுகள் நடக்கத்தகுந்த முன்னாயத்தம் கொடுக்கப்படவேண் டும்.

3. வாசிப்பு:—சிறுவர் வாசிக்கப் படிக்கவேண்டும். உரக்க வாசிப்பது மட்டுமன்று, மௌனவாசிப்பும் பழகியி ருத்தல் வேண்டும். கடிதங்கள், அறிக்கைகள், பத்திரங்கள், புத்தகங்கள் மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டும் திறனடைய வேண்டும்; அதோடுகூட மௌனமாக வாசித்துத் தானாக அறிவு உட்கொண்டு இரசிக்கும் திறன் படைத்தவர்களாக வும் காணப்படவேண்டும்.

4. எழுத்து:—கடிதங்கள் எழுதக் கற்றவர்களையே தற் காலம் எழுத்தறிவுடையவர்களாகக் கணிக்கிறார்கள். ஒப்பு

இடுதல் மட்டும் அறிந்த ஒருவனை எழுத்தறிவுடையவனாக எண்ணின காலம் கழிந்துவிட்டது. மனதில் எழும் எக் கருத்தையும் மற்றவர் இலகுவில் வாசித்தறியும் வண்ணம் தெளிவாகவும் அழகாகவும் எழுதக் கற்பித்தல் வேண்டும்.

தமிழ்மொழிக் கல்வியை உருப்படுத்தும் கல்விமுறைப் போக்குகள்.

1. குழந்தையை முதன்மைப்படுத்தல். ஒரு காலத்தில் கல்விச் சாலையின் ஆசிரியரே முதன்மை பெற்று நின்றார்; பின் பள்ளிப்பாடம் முக்கியப்படுத்தப்பட்டது; தற்காலமோ குழந்தையே நடுநாயகமாக விளங்குகிறான். அவனைச் சுற்றியே கல்வியுலகம் சுழல்கின்றது. ஆசிரியராலும், பாடங்களாலும், கல்வித்திட்டமாலும், பாடப்புத்தகமாலும், பள்ளியமைப்பாலும், பள்ளி ஒழுங்காலும், கல்விமுறையாலும் குழந்தையை நடுவாகக்கொண்டே இயங்கி வருகின்றன. குழந்தையின் யுகம் இது. தமிழாசிரியர் இதைத் தம்முள்ளத்திற் பதிக்கவேண்டியது.

2. குழந்தையைப் படிப்பிப்பதே ஆசிரியரது சிறந்த கடமையாகும். முதற் பள்ளிப்பாடம் ஆசிரியர் நன்கு அறிவதே; ஆனால் குழந்தைகளைத் தனித்தனியாகவும், கூட்டமாகவும் நன்கு ஆய்ந்து படித்து வரவேண்டும். இங்ஙனம் ஆசிரியர் கற்பிக்க மாத்திரமன்று, கற்றுக்கொண்டிருக்கவுமே பள்ளிக்குச் செல்கிறார்.

3. குழந்தையைப் பின் செல்லல்வேண்டும். ஆசிரியரைக் குழந்தைகள் பின் செல்வது தகுந்ததே, ஆனால் அவர் குழந்தைகளின் இயல்பை அறிந்து அவர்களது வளர்ச்சியைக் கருத்துடன் பின் செல்லவேண்டியதே. அவர்கள் உள்ளம் இயல்பாய் மலர்ந்து வளர்ச்சியடைவதை ஆசிரியர் பின்பற்றி, ஓர் தோட்டக்காரன் எங்ஙனம் செடி கொடிகளை வளர்த்துகிறானோ அங்ஙனம் வெளியே நின்று உதவி செய்யவேண்டியது. உதாரணமாக எழுதுவதற்கு முன்னுயத்தம் எப்பொழுது நிரம்பி வருகின்றதென்று ஆசிரியர் கவனித்து நின்று ஏற்ற சமயத்தில் மாணவன் எழுதக் கற்றுக்கொள்ள உதவவேண்டும்.

4. ஐம்புலன் பயிற்சி. குழந்தைப் பருவத்திற்குரியதாதலின் தமிழ்மொழிக் கல்வியை அதற்குப் பொருத்தியே நடத்தவேண்டும்.

5. மாணவர் செய்து படித்தலே கல்விமுறையிற் சிறந்தோங்கிவருகின்றது. தானகச் செய்து படிப்பதே தலை சிறந்தது. ஒரு கடிதம் எழுதச் சொல்லிக் கொடுத்துப் படிக்க வைப்பதைவிட சுயநோக்க முயற்சி முறையில் (Project) மாணவன் தானகக் கடிதம் எழுதிமுடிப்பது நன்று.

6. தங்கள் ஜீவியத்தை மகிழ்ச்சியாக விளையாடிக் களித்து நடத்துவது குழந்தைகளது பிறவியுரிமையாகும். அவர்களது சுவாதீனத்தைக் கட்டுப்படுத்தலாகாது. இது காரணமாகவே பல்வேறு விளையாட்டு முறைகள் நிலவுகின்றன.

தமிழ்மொழி கற்பிக்கும் முறைகள்.

விளையாட்டு முறை(The Play Way):—ஆரம்ப பாடசாலையில் கல்விபயிற்றும் சிறந்த வழி விளையாட்டாகும். வேலை செய்யும்போது வேலையையே செய், விளையாடும் போது விளையாடு என்னும் முதுமொழி மாறி வேலையை விளையாட்டாகச் செய், விளையாட்டை வேலையாகக் கொள் என்று கூறப்படுகிறது. விளையாட்டின் மூலம் குழந்தைகளின் கல்வி வேலை நடந்தேறவேண்டியது.

பலவகையான விளையாட்டுக்கள்.

1. பொருளை மாணவர் கையில் விளையாடக் கொடுத்து மொழி கற்பித்தல்.

2. அட்டைகளில் வரைந்துள்ள சொற்களை வாசித்து வகுப்பறையில் வைக்கப்பட்டிருக்கும் அச்சொற்கள் குறிக்கும் பொருட்களின் கீழ்க்கொண்டு வைத்தல்.

3. அட்டை எழுத்துக்கள் பல மாணவர் கையிலும் கொடுத்து ஆசிரியர் ஓர் சொல்லை உச்சரிக்க அதன் எழுத்துக்களை உடைய மாணவர் வரிசையாக வந்துசேர எல்லோரும் அச்சொல்லை சத்தமிட்டுக் கூறுதல்.

4. தளத்தில் சொற்களை ஒழுங்காக எழுதியிட்டு மாணவர் குதித்துக் குதித்து வாசிக்க வைத்தல்.

5. முத்துக்கள், மஞ்சாடிகள் கொண்டு எழுத்துக்கள், சொற்கள் அமைத்தல்.

6. குச்சுக்கள் கொண்டு அங்ஙனமே செய்தல்.

7. பாடிப்பாடித் தாளம் போட்டு நடந்து வகுப்பு மாணவர் எழுத்துக்கள் வடிவில் வரியாய் நிற்றல்,

8. பாட்டில் மொழி பயிற்சித்தல்.

9. நடித்து விளையாடுதல்

10. சுயநோக்கமுயற்சி (project) விளையாட்டுக்கள் இன்னும் பல உள.

விளையாட்டு வழியை முதன்மையாகக் கைக்கொள்ளும் சிறந்த இரு முறைகள் நாகரிக உலகமெங்கும் பரந்து நிற்கின்றன.

1. கின்றர் காட்டன் முறை.
2. மான்றிசோறி முறை.

கின்றர் காட்டன் முறை—(Froebel) பிரோபல் என்னும் ஆசிரியரால் ஜெர்மனியில் ஒரு நூற்றாண்டின் முன் ஏற்படுத்தப்பட்ட இக்கின்றர் காட்டின் முறை தற்காலம் பல நாடுகளிலும் காணப்படுகிறது. குழந்தைப் பருவத்தில் விளையாட்டே மக்களது உன்னத தூயதான தொழில் என்றார் இவ்வாசிரியர். எல்லா நன்மைக்கும் காரணமாயிருந்து சுவாதீனம், திருப்தி, உள்ளும் புறமும் சாந்தம், சந்தோஷம் இவற்றை விளையாட்டே அளிக்கிறது. ஆகையால் இவர் விளையாட்டைக் கல்விக்கு உபயோகப்படுத்தினார். இளைஞர்க்குக் கல்விக்குரிய பல கொடைகள் அளித்தார். இவைகளைக் கொண்டு குழந்தைகள் விளையாடி களிப்புற்றனர். பல்வேறு விநோதத் தொழில்கள் செய்தல், கதை சொல்லுதல், நடித்துப் பாடல், தாளத்திற்கு நடந்து செல்லல் முதலிய பலவகை விளையாட்டுப் படிப்பு இம்முறையிற் சிறந்து விளங்குகின்றன.

மான்றிசோறி முறை:- இந்நூற்றாண்டின் விளைவாக எழும்பி நிலவுகின்ற இம்முறை இற்றலி நாட்டு (Dr. Maria Montessori) டாக்டர் மரிய மான்றிசோறி அம்மாளால் ஏற்படுத்தப்பட்டது. இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாகரிக தேசங்களில் இவரது முறை அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. தற்காலம் அவர் இந்தியாவில் வந்து அவரது முறையைப் பரப்பி வருகின்றார்.

இம்முறைப்படி எழுதக் கற்பித்தல் வாசிக்க கற்பித்தலுக்கு முன்னாகத் தொடங்குகிறது. நம் முதல் வகுப்பு மாணவர் முதல் ஆறு வாரம் வாய்மொழித் தேர்ச்சியடைந்து

வரும்போது எழுத்திற்கு முன்னுயத்தமடைந்துவர விட வேண்டும். சுயேச்சையாக வரைந்து விளையாடுவது குழந்தைகளுக்குரியது. வாசிக்கத்தொடங்கு முன்னதாக எழுதுவது இலகுவாகிறது. ஏனென்றால் இதில் தசைநார்ப்பயிற்சியே அதிகமும் வேண்டிவருகிறது. நீறச்சாக்கு அல்லது பென்சில் கொண்டு பல உருவங்கள் வரைய அவர்கள் விளையாட்டாக பல உபகரணங்களை உபயோகிக்கலாம். வரைந்த உருவங்களுக்கு நிறங்கொடுக்க பிரயாசப்படும்போது கட்டுப்பட்ட விதத்தில் வரையவும் பலவகையான நேர் கோடுகளும் வளை கோடுகளும் எழுதவும் பழகுகிறார்கள். எழுது கோல் பிடிக்கவும் எழுதும் தசைநார் உணர்ச்சி நரம்புகளுக்குப் பயிற்சியளிக்கவும் இப்பழக்கம் உதவியாகிறது.

மான்றிசோறி முறைப்படி மணல்தாளில் எழுத்துக்கள் அமைக்கப்பெற்று விரலால் தடவி வடிவம் நன்கு குழந்தைகளால் உணரப்படுகிறது. ஆகாயத்தில் எழுத்தின் வடிவத்தை எழுதவும் விடப்படுகிறார்கள்.

இங்ஙனம் பயின்றுவரவே சொற்களை எழுத்துப் பிரித்து உச்சரிக்கவும் படிக்கிறார்கள். திடீரென எழுத வேண்டுமென்ற அவா குழந்தைக்குட்பிறக்கிறது. எழுதத் தொடங்கும்போது மிகத் துரிதமாய்ப் படித்துக் கொள்ளக் கூடியதாய்க காணப்படுகிறது.

எழுதப்படித்து ஒன்று இரண்டு வாரங்களுள் குழந்தைகள் வாசிக்கவும் தொடங்குகிறார்கள். இதற்கு முதற் புத்தகங்களல்ல தாள் துண்டுகளில் வரையப்பட்டிருக்கும் சொற்களும் சொற்றொடர்களும் உபயோகமாகின்றன. ஒரு பெட்டியில் இட்டிருக்கும் இவற்றை இஷ்டம் போல் பிள்ளைகள் எடுத்து வாசித்து முடிக்கிறார்கள். அவர்களது உற்சாகத்தினால் அவர்கள் வாசிக்கும் அளவு கொஞ்சமல்ல. உரக்க வாசிதல் புத்தியுடனுயிருக்கவேண்டும். அல்லாவிடில் அது அர்சைப்பார்த்துக் குரைத்தலாகும்.

மான்றிசோறி முறையில் மௌன வாசிப்பு முக்கியமடைகிறது. பெயர்களை மௌனமாய் வாசித்துத் துண்டுகளை அப்பெயர்களுள்ள பொருள்களண்டையில் குழந்தை கொண்டு வைக்கிறான். செய்யவேண்டிய கட்டளைகளை மௌனமாய் வாசித்து அதன்படி செய்து மகிழ்ச்சியடைகிறான்.

இவ்வனம் பயிலும் குழந்தைகள் நாலுவயதில் எழுதவும் ஐந்து வயதில் வாசிக்கவும் கூடியதாயிருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளில் சாதாரண புத்தகங்களை ஒருவிதம் நன்ருய் வாசிக்கவும், நன்ருய் எழுதவும் கற்றுக் கொள்கிருர்கள்.

கதைசொல்லல்.

கதைகளைவிடக் குழந்தைகளை இன்புறச் செய்யும் வேருேர் கல்விமுறை காண்பதரிது. பெரியோரிடமிருந்து கதை கேட்டறிவது சிறுவர்க்குப் பேருவகை அளிக்கின்றது. அவர்களது வயதிற்கும் பருவத்திற்கும் தகுந்த கதைகளை எடுத்துரைத்து அவர்களது கேள்வித்திறனைப் பெருகச் செய்வதோடு அவர்களே கதை சொல்லும் படியாக ஏவப் பட்டு வாய்மொழித்திறனில் விருத்தியடைச் செய்யலாம். கதையில் ஏற்படும் இரசத்தால் அவர்கள் மனது எழுப்பப் பட்டு முழு ஊக்கத்தோடும் உற்சாகத்தொடும் அவர்கள் கதை சொல்லத் துணிகின்றனர். முதல் வகுப்பு மாணவர்கூட இதில் வெற்றியடைகின்றனர். தம்மொழியில் தடை ஏற்படுமாயின் அதை மேற்கொள்ள இலகுவில் தாங்களாகவே கற்றுக்கொள்கின்றனர். ஆசிரியரிடமிருந்தும் மற்றும் பெரியோர்களிடமிருந்தும் கதை கேட்க அவர்கள் எவ்வளவு ஊக்கங் கொள்கிருர்களோ அவ்வளவு ஊக்கத்தோடு தாங்களே கதை சோல்லவும் துணிகின்றனர். மற்றவர்களுக்கு இரசம் தோன்றக் கதை சொல்ல முயல்கின்றனர். மொழி திருத்தமடைகின்றது. கால ஒழுங்கின்படி வரலாற்றை ஒழுங்குபடுத்தி எடுத்துரைக்கப் பழகுகிருர்கள். ஆசிரியர் சற்றுக் கவனம் செலுத்திவந்தால் கொச்சைப் பேச்சு இலக்கண வழி இவை மாற உதவியாகும். சுருங்கக்கூறின் கதையானது குழந்தைகளுக்கு மனமகிழ்ச்சியை அளிப்பதோடு ஆரம்பக் கல்வியின் சிறந்த நோக்கமாகிய மொழிப் பயிற்சியையும் அளிக்கிறது.

பாலர் பாட்டு.

எழுத வாசிக்கப் படிக்கு முன்னரே குழந்தைகள் பாட்டுப்படிக்கக்கூடியவர்களாய் காணப்படுகிருர்கள். இயற்கைச் சுவையும் இரசமும் அதில் வெளியாவதைக் காணலாம். குழந்தைகளது மனோநிலையுணர்ந்து எழுதப்பட்டிருக்கும் இப்பாட்டுக்கள் மொழியினிமை ததும்பி

நிற்பதால் சிறுவரைக் களிக்கச் செய்வதோடு அவரது மொழித் திறனை முன்னேற்ற உதவுகிறது. எளிதில் மனனஞ் செய்யக் கூடியவைகளாகக் காணப்படுவதால் குழந்தைகளின் மனதில் நிலைவரமாகப் பதிந்து நன்மொழிக்கு என்றும் மாரு ஊற்ருக நிற்கும்.

பாலர் பாட்டுக்களிற் சில பொருட்சிறப்பற்றனவயாகக் காணப்படலாம். எனினும் மொழியினது இன்பம் அவற்றினின்று உற்பத்தியாகின்றது. மொழியை நன்கு உச்சரிக்கவும் களிப்புடன் கூறவும் பாட்டு உதவுகின்றது. பொது மக்களின் பாட்டுக்கள் பல, மிக்க எளிதானவைகளாகக் காணப்படுவதால் ஆரம்ப வகுப்புகளில் தாராளமாய் உபயோகிக்கப்படலாம். ஆட்டப் பாட்டுக்களும் கற்பித்தால் பிள்ளைகளுக்கு மொழிக்கல்வியில் வருத்தம் தோன்ருது.

வாசிக்கக் கற்பிக்கும் முறைகள்.

1. எழுத்துமுறை.
2. சொன்முறை.
3. சொற்ருெடர்முறை.

மான்றிசோறியம் மாள் எழுத்துமுறையைத் திரும்பவும் முதன்மைக்குக் கொண்டுவந்திருக்கிருர். எனினும் அது பழைய எழுத்துமுறையன்று. பழைய முறைப்படி பிள்ளைகள் அன்ன ஆவன்ன என்ற முறையே கூப்பிட்டுக்கொண்டு நெடுங்கணக்கை மணலில் எழுதிப்படித்தார்கள். மணல் தாள் உபயோகம் நாகரிகத்தின் பலன் எனலாம். எனினும் தற்போது எழுதத் தொடங்கும்போது முழுச்சொற்களையே குழந்தைகள் எழுதுகிருர்கள். பழைய முறையில் எந்த எழுத்தையும் சரிவரஎழுதப்படித்த பின்னரேமாணவர் சொற்களை எழுதவிடப்பட்டார்கள். இது தற்கால உளநூலாராய்ச்சிக்குப் பொருந்தினதன்று. பொருளற்ற எழுத்துக்கள் உயிரற்ற ஒலிக்குறிப்புக்களே. பொருள் நிரம்பிய சொற்களோ உற்சாகமளிக்கும் உயிருள்ள உருவங்களாக விளங்கும்.

சொன் முறையை 'நோக்கிச்சொல்முறை' என்றுமழைப்பர். ஒரு முழுவார்த்தையை ஒருமித்து பார்த்துப் படித்துக்கொள்வது இரசகரமானது. இங்ஙனம் பல சொற்களைப்படித்து வரவே எழுத்துக்கள் பிரித்துப் படிக்கப்படுகின்றன. நம் முதல் புத்தகத்திலும் சொற்களாகவே நாம் மா

ணவர் முன் வைக்கிறோம். பொருட்களைக் காண்பித்தும், கொடுக்கப்பட்டிருக்கும் படங்களையும் மற்றும் உபயோகித்தும் இச்சொற்களை வாசிக்கவும் எழுதவும் அவாபிறப்பித்த பின்னரே புத்தகத்தை உபயோகித்தல் நன்று. நம் புத்தகத்தில் கண்டுணரவும் எழுதவும் எளிதான எழுத்துக்களாலான சொற்களையே முதலில் கற்பிக்கிறோம். எழுத்தும் வாசிப்பும் ஒருமித்துச் சொல்ல இது அனுகூலமானது எனலாம்.

சொற்றொடர் முறையைச் சிலர் கையாடுவதுண்டு. தொடரைவிட தனிச் சொல் எழுதவும் வாசிக்கவும் எளிதாகையால் இம்முறை அதிகம் உபயோகத்திலில்லை. எனினும் ஒரு சிறு கதையையே ஒருமித்து வாசிக்கப் பயிற்சி செய்வோருமுண்டு.

சிறுவர் வாசிப்புக்குரிய உபகரணங்கள்.

1. எழுத்து அட்டைகள், மணல்தாள் எழுத்துக்கள்.
2. குச்சுக்கள், முத்துக்கள்.
3. எழுத்தோடுள்ள படங்கள்.
4. வாசிப்புத் தாள்கள்.

நல்ல வாசிப்பின் இயல்பு.

மூன்று பாகம் இதில் அடங்கியுள்ளன:

1. ஆசிரியர் கருத்தை வரிவடிவிலிருந்து மனதினுள் எடுத்தல்.

2. வரிவடிவைத் தெளிவான ஒலி வடிவாக மாற்றுதல்.

3. ஒலியில் கருத்தை வெளிப்படுத்தல். இங்ஙனம் சரியாக உரக்க வாசித்தல் மௌன வாசிப்பைவிடக் கடினமானது. அடிக்கடி மாணவர் வரிவடிவை ஒலிவடிவாக மட்டும் மாற்றுகிறார்கள். பொருள் அவர்கள் சிந்தனைக்குள் வருவதில்லை. இக்குறையை மாற்ற ஆசிரியர் முயலவேண்டும்.

உச்சரிப்பு தெளிவாக இருக்கவேண்டும். ஒவ்வொரு எழுத்தும், அசையும், சொல்லும், சொற்றொடரும் தெளிவாய் ஒலிக்கப்பட வேண்டும்.

பொருளை மாணவர் உணர்ந்து மற்றவர்கள் உணரும் வண்ணம் வாசிக்கக் கற்பிக்கவேண்டும். இயல்புநிலை மாறிக் குரலோசையிட்டு வாசிக்கும் மாணவருண்டு. "பேசுவது போல வாசிக்கவேண்டும்" என்றார் ஜெக்காட்டோ என்பவர்.

வாசிப்பில் நீக்கப்படவேண்டும் குறைகள்.

1. இயல்புத் தொனியை மாற்றி வாசிப்பது.

2. இழுத்து இழுத்து வாசிப்பது.

3. கிளிப்பிள்ளைபோல் பொருளுணராமல் வாசிப்பது.

4. வார்த்தைகள் எழுத்துக்கள் விழுங்குவது.

5. உச்சரிப்பு தெளிவாயும் அழுத்தமாயும் இல்லாதிருப்பது.

6. ழகர ளகர, நகர ணகர, றகர ரகர வேற்றுமைகள் மறைந்துபோவது.

7. பொருளுக்குத் தகுந்த வண்ணம் வற்புறுத்தி தொனி இசைத்து வாசியாமலிருப்பது.

மௌனவாசிப்பின் சிறப்பு.

1. பள்ளி விட்ட பின்னர்ப் பெரும்பாலும் வாழ்க்கையில் உபயோகமுள்ளது மௌனவாசிப்பு.

2. இது துரிதமாய் வாசிப்பதற்குள்ள முறையாகும். எழுத்தை உச்சரிப்பதற்குள்ள நேரம் கண்ணோட்டத்திற்கு வேண்டியதில்லை.

3. சொற்களை உச்சரிப்பதால் உள்ள களைப்பு இல்லாதாகிறது.

4. துரிதமாய் அறிவு சேகரிப்பதாலுள்ள இன்பம் பெரிது.

மௌன வாசிப்பு பயிற்சிக்கும் வழிகள்.

1. பாடப் புத்தகங்களில் மௌன வாசிப்புக் கேற்ற பாகங்கள் அமையவேண்டும். முதல் வகுப்பிலேயே ஒன்றிரண்டு பாடத்தில் சில தொழில்கள் செய்யக்கட்டளைகளடங்கியிருப்ப, மாணவர் மௌனமாய் வாசித்து அதன் படி நடந்து கொள்ளலாம்.

2. தாள் துண்டுகளில் இங்ஙனம் கட்டளைகள் எழுதி வைத்து மௌனமாய் வாசித்து அதன்படி நடக்க வைக்கலாம்.

3. பத்திரிகைகளை வாசித்து கருத்தைச் சொல்ல விடலாம்.

4. கதைகள், கதைப் பாகங்கள் துரிதமாய் வாசித்துக் குறிக்கப் பட்டிருக்கும் புதியரீதிக் கேள்விகளுக்கு விடை எழுதச் செய்யலாம்.

5. கதைப் புத்தகங்கள், நாடகங்கள், சம்பாஷணைகள் வாசிக்க விடலாம்.

6. எளிய நடையில் இரசகரமான பர்ந்த அறிவை ஊட்டும் புத்தகங்களைப் பள்ளிநூனிலையத்தினின்று வாசிக்கக் கொடுக்கலாம்.

7. உலக வர்த்தமானமறிய ஆவலுண்டுபண்ணி பத்திரிகைகள் வாசிக்க ஏவலாம்.

மௌன வாசிப்புப் பயிற்சிக்கும் அளவு.

இரண்டாவது வகுப்பில் 40% மூன்ருவது வகுப்பில் 60% பாகம் மௌன வாசிப்புப், பயிற்சிக்கு வேண்டியது. மேல் வகுப்புக்களில் அதைவிடக் கூடவேண்டியது. வர வர சுண்டு அசையாமலும் சத்தமில்லாமலும் பெரியோர் வாசிப்பது போல மாணவர் வாசிக்கப் பழகவேண்டியது.

நல்ல கையெழுத்தின் இலக்கணம்.

1. தெளிவு.
2. துரிதம்.
3. அழகு.

எண்ணங்களை வரிவடிவாக்கி நிலைவரப்படுத்தி மற்றவர்க்குக் கொடுப்பது எழுத்தின் நோக்கம். எழுத்து எவ்வளவு தெளிவாகக் கண்ணிற்படக் கூடுமோ அவ்வளவு நல்லது. துரிதமாக எழுதும் போது தெளிவு குன்ருதிருக்க வேண்டும். அழகிற்காகத் துரிதமோ, தெளிவோ குன்ருதிருத்தல் வேண்டும்.

எழுதும்போது மாணவன் இருக்கவேண்டிய நிலை.

1. உடல் நேராக வருத்தமில்லாத நிலையில் வைக்கப்படவேண்டும். ஒருபக்கம் சரிந்தோ, டெஸ்கின் மேல் விழுந்தோ இருப்பது நல்லதன்று. எழுதும் தாளிற்கு மேலாக வளைந்திருப்பதும் இடதுகையில் தலையைத் தாங்கியிருத்தலும் சரியான நிலையல்ல.

2. தாள் அல்லது சிலேற்று டெஸ்கின் விளிம்பிற்கு நேராக எழுதுவோனுக்குச் சற்று வலது பக்கத்தில் வைக்கப்படலாம்.

3. வெளிச்சம் இடது பக்கமிருந்து வருவது நலம்.

4. எழுதுகோலை மிதமிஞ்சி அழுத்தத்தில் பிடிக்கலாகாது. கட்டையான எழுதுகோலைப் பிடிப்பதால் கை அசாதாரணவளைவு அடைகின்றது.

பேசக் கற்பித்தல்.

பொதுமக்கள் தாங்கள் பேசும் வார்த்தைகளில் ஆயிரத்திற்கு ஒரு வார்த்தை எழுதுவார்களோ என்பது ஐயம். பேச்சு மக்களது வாழ்க்கையில் எப்பொழுதும் உபயோகத்திலிருப்பது. இது திருத்தமாயும் தெளிவாயும் இருப்பது அவசியம். முதல் வகுப்பிலிருந்தே இதைக் குறித்துக் கவனம் எடுக்க வேண்டும்: ஒருவனது பேச்சிலிருந்தே அவனது கல்வித் தேர்ச்சியை அளப்பதுண்டு.

பொதுவாக பேச்சில் உபயோகிக்கக்கூடாத கொச்சை வார்த்தைகளை ஆசிரியர் குறித்து வைத்து அவைகள் மாணவரோடு உள்ள சம்பாஷணையில் வராமற் காத்துக் கொள்ள வேண்டும். அதுபோலவே எச்சொற்கள் புதிதாக மாணவர் கற்றுக் கொள்ளவேண்டியவை என்றும் குறித்து வைத்துப் பேச்சில் உபயோகித்துவர வேண்டும்.

புத்தகத்திலுள்ள வாக்கிய ரூபத்தில் பேசாமல் நாட்டு வழக்கத்திலிருக்கும் திருத்தப் பொருள் கொள்ளும் சொற்களையும் சொற்றொடர்களையும் உபயோகிப்பது நல்லது. உதாரணமாக, நெற்பயிரைப் பற்றியுள்ள பல சொற்களை, படித்தவர் தற்காலம் உபயோகிக்க இயலாதிருக்கிறார்கள். பிறமொழிச் சொற்கள் கலந்து நம்மொழியை திருத்தமோ

தெளிவோ இல்லாததாக்குகிறதுபோற் ருேன்றுகிறது ஆகவே பேச்சைத் திருத்தி எளிய இனிய நாடோடி நடையில் உரையாடக் கற்பிக்க வேண்டியது.

ஆரம்ப பாடசாலையின் படிப்பினுல் ஒருவன் சொற்பொழிவாளன் ஆகாத போதிலும் திருந்தின பேச்சுடையவனுக அவசியப்படுமளவு மொழியை சற்பிரயோஜனம் செய்யக் கூடியவனுகக் காணப்படவேண்டும்.

கடிதம் எழுதல்.

வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் கல்வி; கடிதம் எழுதப் பழக்குவிப்பது அவசியம். பொதுவாக முதற் பள்ளியில் எழுதப் படிப்பதின் நோக்கமே கடிதம் எழுதப் படிப்பதற்காக எனலாம். சிற் சில அவசியங்களுக்குத்தவிர பொது மக்களுக்கு இன்றியமையாது காணப்படுவது கடிதம் எழுதுவதே. ஆகவே முதல் மூன்று வகுப்புகளிலும் வாய் மொழிப் பயிற்சிமட்டுமே நடந்துவர நாலாவது வகுப்பில் கடிதங்கள் எழுதக் கற்பிக்கவேண்டியது. ஐந்தாவது வகுப்பிலும் பகுதிக் காலம் இப் பயிற்சியே கொடுத்து விட்டுப் பின் சிறிய கட்டுரைகள் எழுத முயற்சிக்கலாம்.

கடிதம் எழுதுவதில் மாணவருக்குப் பெரும் உற்சாகமுண்டு. வாழ்க்கைக்கும் அனுபவத்திற்கும் பொருந்தியது அது. எப் பொழுதும் உபயோகமுள்ளது. எளிதில் எழுதக் கூடியது. வியாசங்களைப் போல் கருத்துக்களைத் தேடி எடுத்து ஒழுங்குப் படுத்தும் அவசியம் இதற்கில்லை. சிறுவரது திறமைக்கு மிஞ்சியதன்று. தங்கள் தினசரி ஜீவியத்தை உபயோகித்து, கடிதங்கள் வரைவது சிறுவருக்குரிய பயிற்சியாகும். சுய நோக்கமுறையில் இதை நடத்த விடுவது நன்மை பயக்கும்.

பூமி நூல் கற்பித்தல்.

பிரைமரிப் பாடசாலை ஆசிரியர்களது பயிற்சிக் குரிய புதிய திட்டம்.

குறிப்பு:—புதிய பூமி நூல், ஆரம்பப் பூமி நூல் கற்பிப்பதின் நோக்கங்கள், கற்பிக்கும் முறை, உபகரணங்கள், முதலியவை களைப் பற்றி ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துவது பயிற்சி நல்கும் ஆசிரியரது முதற்கடன். தற்போது நடைமுறையில் இருக்கும் பூமி நூல் கற்பிக்கும் முறையைச் சீர்படுத்த இன்றியமையாத நல்லறிவும் ஆராய்ச்சியும் அனுபவமும் ஆசிரியருக்கு வேண்டும். பாடத்திட்டத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் ஒவ்வொரு பாடமாவது மாதிரியாக எடுத்துக் காட்டவேண்டும். பிள்ளைகளின் உள நூல் தத்துவங்களும், போதனை நூல் முடிவுகளும் புதிய கருத்துகளும் பாடம் நடாத்தப் பயிற்றப் படவேண்டும். இதற்கேற்ற முதன்மையான சில பொதுவிஷயங்கள் கீழே கூறப்படுகின்றன.

1. புதிய பூமி நூல்.

புதிய பூமிநூல் மனித வாழ்க்கையையும் இயற்கையமைப்பையும் ஒன்று படுத்துகிறது. உலகில் வெவ்வேறான பற்பல இடங்களிலும் வாழ்கிற மக்களின் வாழ்க்கைமுறை பெரும்பாலும் அவர்கள் தங்கும் இடத்தைப் பொறுத்திருக்கிறது.

உதாரணம்:—சமநிலமான இடங்களில் தங்குவோரில் பலர் கைத்தொழில் செய்பவராகவும், கடற்கரையில் வசிப்பவரில் அனேகரும் மீன் பிடிப்பவராகவும், காடுகளில் வாழ்வோர் வேட்டையாடுபவராகவும், புற்றரையில் வாழ்வோர் ஆடுமாடுகளை மேய்ப்போராகவும், இருத்தல் பூமிநூல் சம்பந்தத்தினலன்றோ.

2. பூமி நூலின் உயரிய உண்மைகள்.

பூமி நூல் தத்துவங்கள் தட்ப வெப்ப நிலையையும் இயற்கை அமைப்பையும் பொறுத்திருக்கின்றன. தாவரங்கள் மிருகங்கள் ஏனைய உயிரினங்கள். மனிதர்களது வாழ்க்கை

முறை, தொழில்கள் முதலிய பெரும்பாலும் சீதோஷ்ண மண்டலங்களின் தன்மையை ஒட்டியவைகளே. சுற்றுப் பக்கங்களின் இயற்கைக்கும் மனித வாழ்விற்கும் முயற்சிக ளுக்கும் உள்ள தொடர்பை ஆரம்பக்கல்வியின் முடிவு வரையிலுமுள்ள காலஅளவில் படிப்படியாகப் படிப்பிக்க வேண்டும். அவை உளநூல்ச் சட்டம், போதனுமுறைஇவை களை ஒட்டியதாக இருத்தல் வேண்டும். மாணவன் தன் வா ழுள் முழுதும் பலன்தரக்கூடிய அறிவையும் பயிற்சியை யும் பெறுதல் மிக அவசியம். செயலளவான வாழ்க்கை யின் பயனே அதன் தலைநோக்கு.

3. முற்காலங்களில் பூமிநூல் கற்பித்தல்.

மலைகள், ஆறுகள், காயல்கள், ஜலசந்திகள், முக்கிய பட்டணங்கள், இயற்கையமைப்பு, ஏற்றுமதி இறக்கு மதிப் பொருள்கள், விளைபொருள்கள், கைத்தொழில்ச் சா மான்கள் முதலியவைகளின் பெயர்களும், பட்டிகைகளும் மட்டுமே முற்காலத்தில் பூமிநூல் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பித்து வந்தார்கள். இவைகளை மனப்பாடம் செய்து சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைபோல் சொல்லும் மாணவன் பூமிநூற் பாடத்தில் திறமையுடையவனாக மதிக் கப்பட்டான். பூகோள விவரணமே பூமிநூல் என்று இடைக்காலத்திலுள்ளோர் எண்ணியதால் பூமிநூல் விஷயங் கள் ஒன்றற்கொன்று மாறுபாடாகக் கூறப்பட்டன. ஆனால் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மேலைநாட்டு பூகோள வல்லுனர் காரணகாரியங்களை விளக்கி பூமிநூல் விஷயங்க ளை ஆராய்ந்து தெளிவு படுத்தினர். இவ்வாறு யுக்தியுடன் உண்மைகளை நிலைநாட்டி பூமிநூலை ஓர் உண்மையான சாஸ்திரமாக்கினார்கள்.

பண்டைக்கால பூமிநூல், என்னது ? எங்கே ? எனும் இருவினாக்களுக்கு மட்டுமே விடை அளித்து வந்தது. தற் காலப் பூமிநூலோ எவ்வாறு ? ஏன் ? என்னும் வினாக்க ளுக்கும் விடை தருகிறது.

4. பூமிநூற் போதனையின் முக்கிய நோக்கங்கள்.

A. அறிவு வளர்ச்சி.

தம்மூர், தம் நாடு இவைகளைக் கூறும் பூமிநூல் விஷ யங்களைக் கற்பித்து அவைகளை அடிப்படையாகக் கொண்டு ஏனைய பூபாகங்களைப் பற்றிய அறிவை வளர்க்கவேண்டும். பூமியின் பற்பல பாகங்களிலுமுள்ள மக்களின் வாழ்க்கை

முறை, விளைவு, வியாபாரம், போக்குவரவு முதலியன கற்பித்து மாணவரது அறிவின் பரப்பைப் பெரிதாக்குக. மாணவர்கள் தம் அனுபவத்தால் அறியக்கூடிய பல பொருள்களும் பூமிநூல் வாயிலாய்ப் பெறுகிறார்கள். ஆகவே அவர்களது பண அறிவு வளர ஏதுவாகிறது.

B. கைத்தொழில் வளர்ச்சியும் செல்வ முன்னேற்றமும்.

உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் உலக மக்கள் எல்லோருக்கும் இன்றியமையாதன. இவற்றை அடைவதற்குரிய பொருள்தேடுதல் தொழிலாலே தான் முடியும். ஆகவே ஒவ்வொருவரும் யாதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டே தீரவேண்டும். ஆனால் சரியான பூமிநூல் அறிவில்லாத ஒருவனைவிட அவ்வறிவு பெற்றவனுக்கே எளிதில் பணம் தேடமுடியும். கிருஷிக்காரனுக்கு பூமிநூல் அறிவு மிகமிக அவசியம். வியாபாரப் பொருள்கள், உபகரணங்கள், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள், போக்குவரவு வசதிகள் முதலியவற்றைப்பற்றிய சரியான அறிவு வியாபாரிக்கும் இன்றியமையாததே. கைத்தொழிற் சாலைகள் நடாத்துவோருக்கும் அவர்கள் கைத்தொழிலுக்குரிய மூலப் பொருள்கள் எங்கே கிடைக்குமென்றும், செய்த பொருள்களை எங்கே விற்கலாம் என்றும் அறிதல் அவசியமன்றோ! ஆகவே எவ்வகையிலும் மனிதஜீவிதத்திற்குப் பூமிநூல் அறிவு இன்றியமையாத வழிகாட்டியென்பது வெளிப்படை.

C. நாட்டுப்பற்று.

தன்னாட்டைப்பற்றிய பூமிநூல் வழியாய் இளமைப்பருவம் முதற்கொண்டு தேசப்பற்றை வளர்க்கலாம். தாய் நாட்டின் இயற்கையழகு, கிருஷி, வியாபாரம் கைத்தொழில், ஜனங்கள், ஒழுக்கவழக்கங்கள் முதலியன கற்பதிலிருந்து தன்னாட்டின் பெருமையைப் பற்றிய அறிவு முளைத்தெழும். நம் மாணவர்கட்கு இளமையிலேயே தாய் நாட்டின் நன்மதிப்பை உண்டுபண்ணவேண்டும்.

D. எல்லா நாடுகளையும் பற்றின அறிவு.

தன்னாட்டுப் பற்றை விளைவிப்பதோடு எல்லா நாடுகளுடனும் ஒன்றுபட்ட நோக்கத்தையும் ஓங்கச் செய்க. உலகில் பல்வேறு நாடுகளும் தம்முள் உறுதியாய்க்கட்டுப்பட்

டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டாரும் ஏனைய நாட்டாரோடு இணைந்தே இந்நாளில் வாழமுடியும். நமக்கவசியமான ஆடைகள், அரிசி, யந்திரச்சாமான்கள், புகையிலை முத லியவைகளுக்குப் பிறநாட்டாரை நாட வேண்டும். நமது ரப்பர், நல்லமிளகு, கொப்பரை, முந்திரிப் பருப்பு (Cashewnut) பிற நாட்டில் விற்கப்பட வேண்டும். அயல் நாடுகளின் தொடர்பையும் கட்டுப் பாட்டையும், யுத்தகாலத்தி லேற்பட்ட வேற்றுமை யுணர்ச்சி எவ்வளவு துன்புறுத்திய தென்பதை நாம் கண்கூடாய்க் கண்டோமன்றோ? ஒரு நாட்டின் முன்னேற்றம் பிறநாடுகளின் முன்னேற்றத்தை ஒட்டியதேயாம்.

E. நாடுகள் சுற்றிப்பார்க்கும் ஆசை.

பத்திரிகை வாயிலாய் உலகின் பல பாகங்களைப் பற்றிய விசேடங்களை அறிகிறோம். பத்திரிகை படித்தறிய பூமிநூல றிவு அரண்செய்யும். பற்பல நாடுகளின் புதுமைகளைப் படிப்பதால் அந்நாடுகளை நேரில் பார்த்திருந்தவர்களோடு பழக ஆசையுண்டாம்,

5. பள்ளிக்கூடப்பாடத்திட்டத்தில் பூமி நூலின் முதன்மை நிலை.

பூமிநூல் பள்ளிக்கூடங்களிலே பல விஷயங்களுக்கும் அடிப்படையான ஒன்றாகும். ஏனைய சாத்திரங்களோடு சம்பந்தமும் பெற்றது. பல சாத்திரங்களின் உண்மைகளை வேண்டிய இடத்தில் கையாண்டு உருவப்படுத்திய ஓர் சாத்திரம் பூமிநூலாகும். ஒவ்வொரு விஞ்ஞானப் பிரிவுகளைக் கூறும் வனநூல், ரஸாயனநூல், வானநூல், கடல்நூல், தாவரநூல், பிராணிநூல் இவை போன்ற நூற்களும், செல்வநிலை விளக்கும் சாத்திரங்களும், சரித்திரம், அரசியல், பௌரநூல், பாஷைநூல் போன்ற சமூகவாழ்க்கை விளக்கச் சாத்திரங்களும் கலந்த ஓர் தனியான சாத்திரமே பூமிசாஸ்திரம் என்பர்.

உலகில் எவ்விடங்களைப்பற்றி யறிய வேண்டுமானாலும் அவ்வவ்விடங்களைப் பற்றிய பூமிநூலறிவு இன்றியமையாததே. சரியான பூமிநூலில் இருசேர்ப்புகள் உண்டு. ஒன்று பூமியைப் பற்றியதும், மற்றொன்று மனித சமூகத்தைப் பற்றியதுமாம், இவை காரிய காரண இயைபினால் நன்கமைந்ததாகும்! பூமி சம்பந்த பகுதியில் பூமியின் நிலை,

மேடுபள்ளம், வெப்பதட்பநிலை, தாவரங்கள், உயிரினங்கள், தாதுப்பொருள்கள் முதலியனவும் சமூக வாழக்கையை ஒட்டிய பகுதியில் ஜனங்கள், கைத்தொழில், வியாபாரம், பட்டணங்கள், துறைமுகங்கள், போக்குவரவு வசதிகள், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் ஜனவாழ்க்கை பரவுதல், அரசியல் பிரிவு, அரசாட்சி முதலியனவும் கூறப்படும்.

6. ஆரம்பப்பள்ளிக் கூடமும் பூமிநூலும்.

ஜனங்களின் வாழ்வும் அதன் சுற்றுப்பக்க நிலைமைகளின் சம்பந்தமுமே பூமிநூலின் சிறந்த அடிப்படைகளாம். இதனை ஆரம்பக் கல்விக் காலம் முடியும்பொழுது சுருக்கமாகவேனும் மாணவர் அறிந்திருத்தலவசியம்! பூமியின் இயற்கையமைப்பு மனிதவாழ்வையும் தொழிலையும் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றதென்னும் பொது அறிவு இக்காலத்தில் வளர்தலவசியம். இவ்வுயர்நோக்கத்தோடு பாடங்களும், பயிற்சிகளும் நன்கமைத்தல் வேண்டும். ஒவ்வொரு பாடத்தினுடையவும் தனிநோக்கம் முற்கூறிய உயர் நோக்கத்திற்கு இசைந்திருத்தல் இன்றியமையாததே. ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தங்கும் தலங்களின் இயற்கையமைப்பு, மக்களின் வாழ்க்கைமுறை, உணவு, உடை, தொழில், வீடமைக்கும் முறை முதலியன கதைகள் வாயிலாய் விளக்குதல் நலம். இதனால் மாணவர்கள் வாழும் ஊர்களின் சிதோஷ்ண நிலை, வாழ்க்கை முறையை எங்ஙனம் அமைக்கும் என்பதை ஊகிக்கச் செய்க. ஆரம்பகாலத்தில் இவ்விஷயங்களைக் காரிய காரணமுறையில் முழுதும் விளக்கவேண்டுமென்பதில்லை.

பூமிநூற்கதைகள்:—மாணவர்க்குரைக்கும் கதைகள் பூமிநூலுண்மைகளை விளக்குபவைகளாயிருத்தல் நலம். அவை உண்மையாயினும் கற்பனையாயினும் இயல்பாக நிகழக் கூடியவைகளாயிருக்கவேண்டும். எக்காரணங்களாலும் பிழையானவை பூமிநூல் தத்துவங்களென்று கதைகளில் சேர்க்கலாகா. நல்லொழுக்கப் பாடம் பூமிநூற் கதைகளின் நோக்கமன்று.

கதைகளால் பூமிநூற்பாடம் கற்பிக்க விரும்பும் ஆசிரியன் எந்நாட்டின் மக்களைப்பற்றிக் கூறப்போகின்றானே அந்நாட்டின் பொருள்களும், படங்களும் முன்னரே தயாரிக்கக் கடமைப்பட்டுள்ளான். இக்கதைகளில் பூமிநூலறிவு தலைநோக்கமாதலால் அவையில் வரும் இடங்களைப்பற்றி

யறிதல் அவசியமே. இன்பமாகக் கதை சொல்வதினிடையே ஏற்ற வினாக்கள் கேட்டு மாணவர் கவனத்தைக் கவர்க. அவர்கள் பாடத்தைப் பின்பற்றுகின்றனரா வென்று ஆராய்ந்து கற்பனாசக்தியையும் ஆவலையும் எழுப்புக. கதைப்பாடம் முடிந்தவுடன் பிள்ளைகளைக்கொண்டு அவற்றை திரும்பச் சொல்லச் செய்யவோ, நடிக்கச் செய்யவோ, அதை அடிப்படையாகக்கொண்ட படம் அமைப்பு, மாதிரி செய்தல் (Model) போன்ற அனுபவப் பயிற்சி செய்விக்கவோ வேண்டும். பூமிநூல் மனிதவாழ்க்கையையும் சுற்றுப்பக்கங்களனைத்தையும் சிறப்பாக விளக்கும் சாத்திரமானதால் பிறநாட்டாரின் வாழ்க்கையைக் கூறும் கதைகளுக்கு ஆரம்பப் பூமிநூலில் முதன்மைத் தானமுண்டு. முதல் வகுப்புமுதல் நான்காம் வகுப்புவரையிலும் இம்முறை சிறந்த பயனளிக்கும்.

பூமிநூல் பாடத்திட்டம்.

வகுப்பு 1—20 பாடங்கள்.

குறிப்பு :—ஆரம்பப் பாடங்களிற் சில பள்ளிக்கூடத்தின் வெளியில் வைத்து நடத்தல் நன்மை தரும். சித்திரம் அமைத்தல், மாதிரி செய்து வைத்தல், வேலைத்திட்டங்கள், செய்கை முறைப் பயிற்சி இவைகளைப் பொதுவாகப் பின்பற்றுக. கதையாய்க் கூறில் நலம். செயல்முறைப் பயிற்சி செய்வித்தல் அல்லாது பிள்ளைகள் யாதொன்றும் எழுதிப் பழகவேண்டியதில்லை. ஏ, பி, முதலிய பிரிவுகளை வரிசையாய்ப் பின்பற்றிப் பாடம் தொடரவேண்டாம். படங்களும் மாடல்களும் போதுமான அளவு உபயோகிக்க. விவரணங்களும், பட்டிகைகளும் காணமல் படித்தல் அவசியமில்லை. கதைவாயிலாய் இயல்பாகப் பூமிநூல் உண்மைகளைக் கவனிக்கச் செய்க. மாணவர்கட்குப் பாடபுஸ்தகம் வேண்டாம்.

(ஏ) குன்று, குழி, மலை, சமநிலம், குளம், ஆறு முதலிய பூமியின் இயற்கை விசேடங்களைப் பாடசாலையின் சுற்றுப்புறநிலையை ஆராய்ந்து கற்பிக்க.

மழை, வெயில், சூரியன், சந்திரன்.

(பி) பிள்ளைகளின் கதைகள் :—காட்டினத்தாரின் ஒன்றிரண்டு பிரிவினர்களது கதை. உதாரணம், வேடர், வண்ணார், முக்குவர் முதலிய இனத்தாரின் பிள்ளைகள், தமிழ்நாட்டுப் பிள்ளைகள், நீக்ரோக் குழந்தைகள், எஸ்கிமோக் குழந்தைகள்.

(ஸி) உணவுப் பொருள்கள் :—அரிசி, கோதுமை, மரச்சினி, மீன், பழங்கள்.

(டி) பசு, காளை, யானை, குதிரை, கடுவாய், கரடி, சிங்கம் (கதைகள் மட்டும்).

வகுப்பு 2—30 பாடங்கள்.

(எ) கடல், காயல், முனை, தீவு, துறைமுகம், ஆறு, உபநதி, நதிமுகம், காற்று, பனி, மேகம்.

(பி) பிள்ளைகளின் கதைகள் :—வங்காளம், பர்மா சைனா, ஜப்பான் போன்ற நாடுகளிலுள்ள பிள்ளைகள், அரேபியன் பிள்ளைகள், ஆஸ்திரேலியப் பிள்ளைகள், மலையரயர், மலைப்பண்டாரம் போன்ற காட்டினத்தாரின் பிள்ளைகள்.

(ஸி) நெல், தென்னை, தாள், தீப்பெட்டி.

(டி) பட்டணம், கிராமம் : கன்னியாகுமரி, திருவனந்தபுரம், கொல்லம், ஆலுவாய்.

வகுப்பு 3—45 பாடங்கள்.

(எ) மாதங்கள், அமாவாசை, பௌர்ணமி, இருதுக்கள், திசைகள், திசை காட்டும் கருவி. துருவ நட்சத்திரம்.

(பி) பாடசாலையையும், சுற்றுப்பக்கங்களையும் பார்த்தறிதல். ஸ்கெச்சுப் படம் வரைதல்.

(ஸி) கதைகள் :—இலங்கை, வட இந்தியா, காஷ்மீரம், இத்தாலியா, எகிப்து, கிரீஸ், பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய நாட்டுப் பிள்ளைகளது கதைகள்.

(டி) ரப்பர், நல்லமிளகு, பருத்தி, புகையிலை, முதலிய தொழில்கள்.

(இ) மோட்டார் ஸைக்கிள், கப்பல் இவைகளது போக்குவரவு.

(எப்) அலப்புழை, கோட்டயம், பீர்மேடு.

வகுப்பு 4—60 பாடங்கள்.

(எ) 1. திருவிதாங்கூரின் இயற்கைப் பிரிவுகள்:—மலைநாடு, இடை நாடு, கடலோரம், முக்கிய மலைகள், ஆறுகள், காயல்கள்.

2. பள்ளிக்கூடமிருக்கும் தாலூகாவைப் பற்றிய விரிவான அறிவு. தாலூகா, பகுதி, ஊர், தாலூகாவின் முக்கியஸ்தாபனங்கள், கிருஷி, கைத்தொழில்.

(பி) 1. தட்பவெப்ப நிலை, பருவக்காற்று, மழை பெய்தல், ஸ்கெயில் பிளான்வரைதல் ஆரம்பம். வகுப்பறையின் பிளான், பள்ளிக்கூடம், பள்ளிக்கூடத்தின் சுற்றுப் பக்கங்கள், தாலூகாப் படம்.

2. பிள்ளைகளின் கதைகள்:—இங்கிலாந்து, ரஷியா, அமெரிக்கா. திருவாங்கூரின் போக்குவரவு வழிகள். அஞ்சல், தபால், தந்தி, போண் முதலிய மனக்கருத்தைப் பரவச் செய்யும் வழிகள். முக்கிய விளைவுகள், கைத்தொழில், எற்றுமதி, இறக்குமதி.

(ஸி) ஜனங்கள், ஜனவாழ்க்கை பரவுதல், டிவிஷன், தாலூக்குகள், கச்சேரிஸ்தலங்கள், சுகாதாரக் கேந்திரஸ்தானங்கள்.

(டி) இந்தியாவின் பிரதான் பட்டணங்கள்—சென்னை, பாம்பே, கல்கத்தா, டெல்ஹி. இயற்கைப் பிரிவுகள், ஆறுகள், மலைகள், மழை, விளைவுகள், கைத்தொழில்கள் இவைகளை விளக்கும் திருவாங்கூர் படம் வரைதல்.

வகுப்பு 5—75 பாடங்கள்.

(எ) இரவு பகல், உத்தராயணம், தக்ஷிணாயனம், துருவங்கள், சீதோஷ்ண நிலையைத் திட்டப்படுத்தும் ஆதாரங்கள்.

(பி) தென்னிந்தியா:—இந்தியாப் படம், பூ கோளப் படம், பிரதான கடற் பாதைகள், விமான வழிகள், பற் பல நாடுகளின் காட்சிகள், ஸ்தாபனங்கள் முதலியவற்றின் படங்கள், பற் பல தேசங்களின் ஸ்டாம்புகள்.

(ஸி) இந்தியா, பொது விவரம், மாகாணங்கள், பிரதான பட்டணங்கள், சிறந்த ஆறுகள், முக்கியமான ஏற்று

மதி, இறக்குமதிச் சாமான்கள், கைத்தொழில், பட்டணங்கள், அரசாட்சி (பொது அறிவு).

(டி) பூகோளம்—பொது அறிவு. மகாசமுத்திரங்கள்; சிறந்த துறைமுகங்கள்; முக்கிய நாடுகள்; உலகம் போற்றும் பட்டணங்கள்—லண்டன், பாரிஸ், பெர்லின், மாஸ்கோ, நியூயார்க்கு, சுக்கிங், டோக்கியோ, வாஷிங்டன்.

திருவாங்கூரும் உலக வியாபாரமும், இந்தயாவின் முக்கிய இருப்புப் பாதைகள்.

குறிப்பு:—பத்திரிகைகளிலிருந்து பூமிநூற் படிப்பிற் கேற்ற படங்களைச் சேர்த்து வைக்கவேண்டும். பலதேசங்களின் ஸ்டாம்புகளைச் சேர்த்து ஆசிரியர் ஓர் அட்டைத்தாள் (ஆல்பம்) உண்டுபண்ணுக. இயன்ற அளவு ஸ்பேஸிமென்லாம் சேர்த்துக் கொள்ளுதல் நலம்.

இயற்கைப் பாடம் படிப்பித்தல்.

ஆரம்பப் பாடசாலைகளில் இயற்கைப் பாடம் கற்பித்தலின் நோக்கம்.

தாவர நூலையும் பிராணி நூலையும் தழுவின சாத்திர உண்மைகளோ, போதனு முறைகளோ படிப்பிப்பதல்ல இங்கு நோக்கம். இளஞ்சிறுவரின் உடல் சம்பந்தமானதும், உள்ளம் சம்பந்தமானதுமானவை இதற்கு ஏற்றதல்ல.. இளமைப் பருவத்தில் சிறுவர்களிடம் காணப்படும் கருவிலே அமைந்த ஆசைதான் ஒன்றை அறிய வேண்டும் என்றுள்ள அவா. இயற்கை உண்மைகள் கூடுதல் கூடுதலாய்க் காணப்படும்பொழுது சிறுவர்கள் ஆசையும் பெருகுகிறது. இயற்கைப் பொருள்களோடுள்ள பழக்கத்தால் காரண காரிய சம்பந்தமான ஓர் அறிவு எளிதாகவே உண்டாகிறது. இயன்ற மட்டும் குறைந்த கால அளவில் இயற்கைப் பொருளோடு சேர்ந்த ஓர் பொதுப் பழக்கம் மாணவர்கள் பெற ஆசிரியர் உதவவேண்டும்.

இயற்கைப் பொருள்களின் உயர்ந்த தன்மையைப் பற்றிய பொது அறிவும், செயல் முறையும் சேர்ந்த நிகழ்ச்சிக் குறிப்பின் முறையாய் (ஆக்ற்றிவிற்றி புரோகிராம்) இளைஞர்கட்கு அளித்தல் மிக அவசியம். இம்முயற்சியால் ஐம்புலன் பயிற்சிக்குப் போதிய வழியுண்டு. சுற்றிலுமுள்ளவற்றோடு சேர்ந்து வாழும் பழக்கமும் பெறுவர்.

ஆசிரியர் பெற்ற இயற்கை விஞ்ஞானத்தைப் பிள்ளைகள் மனதில் திணித்தல் தகாது. இயற்கைப்பாட அறிவை இயல்பாகவே சுற்றிலுமுள்ள இயற்கையிலிருந்து மாணவன் தானே அறிந்து கொள்ள முயலுமாறு உதவுவதே ஆசிரியர் கடன். செய்து படித்தல், கண்டு படித்தல் முதலியவைகளே முக்கிய போதனு முறைத் தத்துவங்கள்.

ஒன்று முதல் ஐந்து வரையிலுமுள்ள வகுப்புக்குத் தற்போது தயாரித்திருக்கும் பாடத்திட்டம் நடுத்தரப் பாடசாலைப் பாடக்கிரமத்தோடு மிக்க பொருத்தமுள்ளதாகத் தோற்றலாம். சாத்திர சம்பந்தமும் குறிப்பு மொழியுமான (டெக்னிக்கல்) சொற்கள் சேராமல் முழுதும் இனிமையான

ஓர் பாடத்திட்டம் தயாரித்தல் எளிதன்று. சாத்திர மொழிகள் கலந்துவிட்டதால் இயற்கைப் பாடம் வெறும் சாத்திரப் பாடமாகக் கற்பிக்கவேண்டுமென்பதில்லை. பாடத் திட்டத்தில் அமைந்த காரியங்களை ஒட்டிய பொது அறிவு நல்கப் படவேண்டுமென்றே எதிர்பார்க்கப் படுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் சூழ்நிலைக்கேற்றவாறுள்ள மாற்றங்கள் ஆசிரியர் செய்துகொள்ளலாம். பிள்ளைகளை இயற்கையோடொட்டி அதில் தகுதியடையச் செய்தலே ஆசிரியர் குறிக்கோள் என்பர்.

இயற்கையோடுள்ள பழக்கம் பண்டைக் காலம் முதற் கொண்டே ஆதிமனிதர்கட்கும் உளது. சுற்றிலுமுள்ள இயற்கையைப் பார்த்தறிந்து பின்னர் காரணகாரியம் பற்றி ஆராயத் தொடங்கினர். உணவு தேடவும் தற்காப்பிற்குமாக விலங்கினங்களின் சுபாவமும் வாழ்க்கை முறையும் இன்றியமையாதறிய வேண்டியதாயிற்று. வேட்டையாடி வாழ்க்கை நடத்திய ஆதிமனிதர்கட்கு விலங்குகளைக் குறித்த அறிவு மிக அவசியமாயிற்று. ஏற்றகாலத்தில் விதைக்கவும் விளைவெடுக்கவும் இருதுக்களைப்பற்றித் தெரியவேண்டியதாயிற்று. பல்லாயிரம் ஆண்டுகளாக மக்களின் ஆசிரியர் இயற்கைதான். தலைமுறை தலைமுறையாக மக்கள் இயற்கையினின்றும் பலவற்றையும் கற்றார்கள். இவ்வாறு மனிதர்கள் பல தலைமுறைகளிலும் தேடின விஞ்ஞானம் செயல் முறையாகவும் தனிமுறையாகவும் அநுபவ வாயிலாகவும் என்றும் வளர்ந்து கொண்டுதானிருக்கின்றது.

சமூக வாழ்க்கை அதிகம் வியாபகமாகவும் செயல் முறை அநுபவ அறிவின் மேன்மை குறையவும் புஸ்தகங்களில் சேர்த்து வந்த அறிவிற்கு முதன்மை கூடியும் வந்த பொழுது, மனித வாழ்வில் மிக முக்கியமான ஒரு பகுதிக்கு இயற்கை சம்பந்தத்திற்கு மிகக் குறைவேற்பட்டது. மாணவர்கட்கு இயற்கையை ஒட்டி, செயல் முறையானதும் ஜீவ சக்தியை உடையதும் தனிப்பட்டதுமான அறிவு அளிக்கவே பாடத்திட்டம் வகுக்கப்பட்டது. மனித சமூகம் இன்று வரையிலும் தேடின இயற்கை ஞானம் வாழ்க்கையில் நடைமுறையில் பயன் படுத்த எதிர் காலக் குடிகளைத் தகுதியுடையவராக்குவதே பாடக்கிரமத்தின் நோக்கமாகும்.

ஆரம்பப் பாடசாலையில் இயற்கைப் பாடம் கற்பித்தலின் முழு வெற்றி ஆசிரியர்களது திறமையையும் உற்சாகத்தைத்

யும் பொருத்தமன்றோ? இசைவல்லான் ஒருவன் தன் கலையின் திறமையைக் காட்டுவதோடு தானும் மெய் மறந்து அதில் ஈடுபட்டு இன்புறுவதுபோல் ஆசிரியன் இயல்பாகவே இன்புறத் தகுதியுள்ளவனாக வேண்டும். இயற்கைப் பொருள்களை உண்மையாய் நேசித்தல் வேண்டும். இவ்வித ஆசையுள்ளவர்கள் இயற்கைப் பொருள்களைச் சேர்ப்பதற்கும், பறவைகளையும் பிராணிகளையும் அன்பாக வளர்ப்பதற்கும், பூந்தோட்டங்கள், பார்க்குகள், மிருகசாலைகள் முதலியன பார்ப்பதற்கு மிக்க விருப்பமுள்ளவராக இருப்பார். ஆசிரியர்களுக்கு குழந்தைகளுடனிணங்கி அவர்களது மனமும் உடலும் சம்பந்தமான இயல்புகளுக்குத் தக்கவாறு பாடம் நடத்தி வெற்றி பெறுதல் எளிது.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் செயன்முறைப் பயிற்சிகள்.

ஆல்பம்.

(a) மிருகங்கள், பிராணிகள், பறவைகள், பூக்கள் முதலியவைகளை ஒட்டிய படங்கள் சேர்த்து ஆல்பம் செய்யலாம். பத்திரிகைகள், கார்டு சித்திரங்களிலிருந்து அவசியத்திற்குத் தக்கபடி படங்கள் தயாரிக்கலாம். பிள்ளைகளது விருப்பத்திற்குத் தக்கபடி பல படங்களைச் சேர்க்கச் செய்யலாம். ஒவ்வொரு மாணவனும் தனிமையாக சொந்த ஆல்பம் உண்டு பண்ணுவதால் அவனது உடைமைத் தன்மை உணர்ச்சியை எழுப்பலாம். படங்களை அழகான முறையில் வைக்க ஏவுதல் செய்து அவர்களது அழகிய அறிவை வளர்க்கலாம்.

உபாத்தியாயர் தானமைத்த ஆல்பத்தைக் காட்டி மாணவரது போட்டி உணர்ச்சியை எழுப்பலாம். ஆசிரியர் ஆல்பத்தைக் காட்டி உரையாடல் செய்து பிள்ளைகளை உண்டு பண்ணத் தூண்டல் எளிது. படங்கள் சேர்த்து ஆல்பம் அமைத்து அழகிய காட்சியைக் காட்டுக. பெயரை அழகாயெழுதி ஒட்டுக. இவை போன்ற கட்டளைகள் அளிப்பீராக. தவிட்டுநிறத் தாளினால் செய்யப் பெற்று அட்டைத் தாளினால் புறம் பொதிந்து பைண்டு செய்யப்பட்ட ஓர் நோட்டு புஸ்தகம் ஆல்பத்திற்கு ஏற்றது. அதில் படங்கள், பாஷை, சித்திரம் முதலான ஏனைய பாடங்களுமாக இயற்கைப் பாடங்களை சம்பந்தப் படுத்திக் கற்பிக்க சந்தர்ப்பம் அளிக்கலாம். பிள்ளைகளது இயற்கையாய் அமைந்த வெளியீடு

களுக்குள்ள ஆவலை ஆசிரியர் கெடுக்கலாகாது. எல்லா நிகழ்ச்சித் திட்டங்களும் உபாத்தியாயரது கட்டளைப்படியே நடைபெறவேண்டுமென்று வற்புறுத்தற்க. மாணவர் ஒவ்வொருவரும் செய்யும் வேலையை ஏனைய பிள்ளைகளோடு ஒத்து நோக்க இடமளிக்கவேண்டும். ஒவ்வொருவரதும் ஆக்கத்தில் நிறைவையும் குறைவையும் தானாகவே உணர இது ஒரு தக்க வழி.

(b) உண்மையான பொருள்களால் ஆக்கப்பட்ட ஆல்பம்.

இலைகளினுடையவும் பூக்களினுடையவும் உண்மையான மாதிரிகள் சேர்த்து ஆல்பம் ஆக்கலாம். இச்செயல் முறையையும் காட்டவேண்டுவது ஆசிரியரது பொறுப்பே. வெள்ளைத்தாள் நோட்டுப் புஸ்தகத்தில் காய்ந்த இலைகளும் பூக்களும் ஒட்டி பெயர் எழுதிவைத்தல் நல்லது.

விதைகள் நட்டுவளர்த்தல், பூச்சட்டிகள் வாங்கி அவையில் மண்ணிட்டு, பலவித விதைகள் போட்டு வளர்க்க. கள்ளிப்பெட்டி, தகரப்பெட்டி, கூடை சிரட்டை இவைகளை அவசியத்திற்கு எற்றவாறு உபயோகிக்க. பூச்சட்டிகள் மட்டும் எங்கும் எப்படியும் பயன்படும். பூச்சட்டியில் மண்ணிடலும் உரமிடலும் செயல்முறையில் பிள்ளைகளுக்குணர்த்துக. விதைகளினுடையவும் முளைகளினுடையவும் வேற்றுமையை உணர பலவித விதைகளை இட்டு முளைக்கச் செய்து காட்டுக. முதல் ஐந்து வகுப்புவரையிலும் படிக்கும் காலத்தில் கிருஷிகள் சாதாரணமாய் உபயோகிக்கும் விதைகளை ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் முளையிட்டுக் காட்டலாம். பாடசாலைத் தோட்டம் இதற்குரிய சிறந்த இடமே. பயறு வகைகள், வெண்டை, வழுதுணை, பாகல், வெள்ளரி, புடலை, பூசணி, உழுந்து, எள், கொள், கடுகு, மல்லி, நெல், கேழ்வரகு, புளி, பலா, மா, தென்னை இவைபோன்ற செடிகளையும் மரங்களையும் விதையிட்டு முளையிட்டுக் காட்டல் நன்று. விதை முளைப்பதும், வளர்வதும் பார்த்துப் படிக்க பிள்ளைகளுக்கு இன்பந்தான். இந்த அட்டவணைகளை ஒழுங்காகக் கையாளுவதால் பிள்ளைகளுக்கு ஜீவசக்தி வாய்ந்த கவனமும் தாவரங்களைப் பாதுகாக்க உண்டாகும் விருப்பமும் எற்படும். கம்புகள் வெட்டி நட்டு வளர்க்கும் திட்டமும் கையாளப்படும். மரச்சீனி முதலியன கம்புகள் வெட்டி நட்டு வளர்க்கத்தக்கவை. இதை மாணவர்கள் அநுபவத்தில் கண்டறிய வழியுண்டு. சேம்பு, இஞ்சி இவைகளை முளைப்பித்து

வளர்த்துக்கற்பிக்க இயற்கைப் பாடத்தின் ஒவ்வொரு கால அளவிலும் பாஷை சம்பந்தமான வளர்ச்சியையும் சிறப்பாக எண்ணிப் பாடம் நடத்தல் விஷயங்கள் ஒவ்வொன்றிற்குமுள்ள சம்பந்தத்திற்குத் துணை செய்யும்.

பூக்களை அழகாய் அலங்கரித்தல்.

அழகிய பூக்களும், பூங்கொத்துக்களும் ஒழுங்குபடுத்தி வகுப்பறையில் ஏற்ற இடங்களில் வைத்தல் நன்றே. மலர்கள் வீட்டுக்கு அணியாய் வைக்கப் பழ்கிருவிக்க. தென்னம் கமுகம் பூ, இந்தியலாறல், கோள்ட்மோஹர், இராஜமல்லி போன்ற தாவரங்களின் பூக்கள் இதற்குப் பயன்படும். பூக்களும் இலைகளும் சேர்ந்த கம்புகளை வெட்டியெடுத்து தண்ணீர்விட்டகுப்பிகளில் வைத்தால இரண்டு மூன்று நாள் வாடாமலிருக்கும். பூக்களினுருவம், நறம், ஒழுங்குபடுத்தல் முதலியவைகளைப் பற்றி மாணவர்கட்கு நினைக்கவும் பேசவும் வசதியளிக்கவேண்டும்.

இவ்வாறு அழகாய் வைக்கப் பழக்கிய பின் பூம்பாத்திரங்களில் அவைகளை நேர்த்தியாய் வைக்கவும். தைமாதப் பிறப்பு முதலிய விசேட நாட்களில் பூக்களால் அலங்கரிக்கவும் பிள்ளைகளைப் பழக்கவேண்டும். அழகிய மலர்களைப் பார்த்தும், அவைகளின் நிறத்தையும் மிருதுத்தன்மையையும் அனுபவித்து வருவதால் இலை, பூ, இவைகளைப் பற்றிய விருப்பம் ஏற்படும். பூக்களின் படம் வரைந்தும், அவைகளுக்குச் சாயமிட்டும், பிள்ளைகளது இன்பத்தை வளர்த்தல் எளிது. முதலில் கரும்பலகையிலும், பின்னர் தவிட்டு நிறத்ததாளில் சாயப்பென்ஸில் உபயோகித்தும், பிறகு வெண்மை நிறத்தாளில் பென்ஸில் கொண்டும் படம் வரையச்செய்க.

பூந்தோட்டப் பாதுகாப்பு.

கிழங்குகள் விதைகள் முதலியன பூச்சட்டிகளிலாவது அல்லது வேறு எதிலாவது நட்டு அவை முளைப்பதும், வளர்வதும் முதல் வகுப்புப் பிள்ளைகட்கு நாடோறும் காண்பித்தால் அவை மீதுள்ள விருப்பம் வளரும். சிறிது காலம் கழிந்தால் பூந்தோட்டத்தைப் பாதுகாக்கும் ஆசை தானே அவர்களுக்கு ஏற்படும். பிரைமரிப் பாடசாலையில்

பூந்தோட்டம் பாதுகாப்பினால் பற்பல செடிகளைப்பற்றி அறியவும், அவைகளது பெயரை எளிதில் மனதிலாக்கவும் செய்வர். ஒவ்வொரு செடியினுடையவும், பூக்களினுடையவும், தனித்தனியான தன்மையை மாணவன் எளிதல் உணர்வான். இவ்வாறு பிள்ளைகளின் அனுபவ அறிவு வளருவதற்குத் தக்கபடி மரங்களைக்குறித்தும் கற்பிக்கத் தொடங்கலாம்.

பின்னர் விசேஷமானவைகளும் கிடைப்பதற்கருமையானவைகளுமாகிய மரங்களைப் பற்றிப் படிப்பித்தல் எளிது. மரங்களினிலைகள், கிளைகள், தோல், தடி, உருவம் முதலிய பிரிவுகளை ஒட்டி அவைகளின் இனங்களறியும் வழிகளைப் பற்றி, இயற்கைப் பாடப்போதனையெனும் நூலில் விளக்கப் பட்டுளது.

இயற்கைப் பாடத்தை இன்பமாக்க சிறு விநோதயாத்திரை செய்யலாம். பல செடிகளையும் மரங்களையும் கண்டு இயற்கைத் தோற்றத்தினருமை எண்ணி மகிழவும் இத்தகைய பிரயாணம் பயனளிக்கும். வயல்களில் கிருஷி செய்வதும், மரச்சீனி, சேனை, காய்கறிகள் முதலியன பயிர் செய்த இடங்களைப் பார்ப்பதும் மிக்க பயனைத்தரும். ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலுமுள்ள வசதிக்குத் தக்கவாறு யாத்திரைப் பாடத்தை ஒழுங்கு படுத்த வேண்டும்.

பிராணிகளையும் பறவைகளையும் பார்க்கவும் அவைகளைப் பற்றி இன்பமாகப் பாடங்களை நடத்தவும் யாத்திரைப் பாடம் ஏற்றதே. பசு, நாய், பூனை, ஆடு, கோழி முதலியனவும் பல வகைப் பறவைகளும் அவைகள் வசிக்கும் இடங்களில் வைத்துப் பார்க்க யாத்திரை போதல் பயனளிக்கும்.

நேரம் கிடைக்கும்போதெல்லாம் வகுப்பிற்கு வெளியில் சென்று பாடம் கற்பித்தல் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இன்பம் தரும். பறவைக்கூடுகள், தாவல்கள், பலஇன வித்துக்கள், காய்கனி, பூக்கள் முதலியன சேர்ப்பதற்கும் யாத்திரைப் பாடம் பயன் தரும். பிரயாணப் பாடம் கழிந்த பின் படம் அமைத்தல், மாதிரி செய்தல் முதலிய திட்டங்களை அதை ஒட்டிச் செய்யலாம். ஆசிரியரது இன்பமும் உற்சாகமும் பிள்ளைகளினிடையே விரைவில் பரவும். இதனால் வகுப்பு முழுதும் எழுச்சியும் உணர்ச்சியும் பெறும்.

ஆரம்பப் பாடசாலையில் இயற்கைப் பாடத்தின் பொது லக்ஷணங்களையும் செயல் முறைப் பயிற்சிகளையும் பற்றிப் பொதுவாகக் கூறப்பட்டது. பல பாடங்களும் ஏனைய பாடங்களைப்போல வகுப்பில் வைத்துக் கற்பிக்க வேண்டியதுண்டு.

புதிய பாடத்திட்டத்தில் ஒன்று முதல் நான்கு வரையிலுமுள்ள வகுப்புகளுக்கு வாரத்தில் 2 பிரியட் நேரம் உளது.

ஒவ்வொரு வகுப்பிற்குரிய விலபனை ஒட்டிப் பாடம் கற்பிக்கத் துணை செய்யும் சட்டங்கள் அடியிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

<u>வகுப்பு 1.</u>

சமயம் கிடைத்த போதெல்லாம் முதல் வகுப்புப் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தின் வெளியில் அழைத்துச் சென்று பாடம் நடத்துக. ஆரம்பத்தில் இப்பாடங்கள் கீழ்ப்படிதலுக்கும் வணக்க முறைக்கும் பொருத்தமில்லாமல் தோன்றலாம்: உண்மையாக உழைத்தால் நாலைந்து பாடங்கள் நடத்தும்பொழுது சரியான முறையில் அமைதியாகப் பாடம் நடத்தும் நிலைமை ஏற்படும். வகுப்பின் வெளியில் வைத்து நடத்தும் பாடங்களுக்கு ஆயத்தம் முன்னதியாகச் செய்ய வேண்டும். எவ்விடத்திற்குக் கொண்டு போக வேண்டும்! எவ்வழியாய்ப் போக வேண்டும்? இயற்கைப் பொருள்கள் எல்லோர் கண்களிலும் படும்படி மாணவர்களை ஒழுங்கு படுத்தல் எவ்வாறு? எவ்வளவு நேரமாகும்? என்ன என்ன காரியங்கள் பிள்ளைகளின் கவனத்தில் விடவேண்டும்? இவை போன்ற பற்பல காரியங்களையும் ஆசிரியர் முன்னதாகவே ஆலோசித்து முடிவுகட்ட வேண்டும். வகுப்பின் அகமும் புறமும் வைத்து நடத்தும் பாடங்கட்குச் சரியான தொடர்பு இருத்தல் நலம். இயற்கையையும் மாணவர்களையும், அனுபவ முறையில் ஒன்று படுத்தி அவர்களது சுற்றுப் பக்கங்களைக் கவனிக்கச் செய்து தெளிவு படுத்துமாறு விடுதல் ஆசிரியர் பொறுப்பு.

நாய்க்குட்டி, பூனைக்குட்டி, அணில் முதலிய பிரியமாய் வளர்க்கும் பிராணிகளை வகுப்பிற் கொண்டு வருவதில் கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். ஆனால் அவ்வாறு கொண்டுவருவதால், கலக்கமும், குழப்பமும், கூக்குரலும், எப்பொழுதும் உண்டாகா. இவைகளை அவசியத்திற்கிசைந்தபடி

யும், காலத்திற்கேற்ற படியும் காண்பிக்கத்தகுதியான கண்ணு டிப்பெட்டிகளிருந்தால் அவைகளை வகுப்பில் டிவிப்ளின் குறைவில்லாமல் காட்டலாம். அவைகளைத் தொடுவதாலும் பழகுவதாலும் பிராணிகளிடம் அன்பு ஏற்படும். இம்மு றைப் படிப் பாடம் கற்பித்தல் மாணவர் மனதை மகிழச் செய்யும்.

வகுப்பு. 2.

முதல் வகுப்புப் பாடங்களால் பிள்ளைகளுக்கு அவர்க ளது உடம்பின் பாகங்களையும் பார்த்தும் படித்தும் செய்து முடித்த உடல் உறுப்புக்களைப் பற்றியும் தெரிந்தி ருக்கிறார்கள். முதல் வகுப்பிற் பெற்ற அறிவினுல் செடிக ளின் பலவகைப் பாகங்களைப் பற்றிப் படிப்பிக்க இரண்டாம் வகுப்பாசிரியர்க்கு வருத்தமில்லை. செடியின் எல்லா உறுப் புக்களும் மனதிலாகத்தக்க ஓர் முதன் மாதிரிச்செடியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வேர், தடி போன்ற பல பகுதிக ளைப்பற்றியும் நன்கு கற்பிக்க. முறைப்படி தயாரித்த ஓர் ஸ்கெச்சுப்படம் கரும்பலகையில் வரைதலவசியும். பல மாதி ரிகளைக்காட்டிசெடிகளின் பாகங்களைப் பிள்ளைகளுக்குப் பன் முறையும் பழக்கலாம். விதைகள் முளைத்து செடிகள் ஒழுங் காய் வளர்ந்து, கிளைகள் தோன்றி பூத்துக் காய்த்து நிற்கும் எனும்பொது உண்மைகளை எளிதில் உணர்வார்கள். இவ் வாறே மாணவனும் ஒழுங்காக வளர்ந்து கொண்டிருக்கி ருனென்னும் உணர்வை யவனுக் கூட்டுக.

சாதாரணமாக வளர்க்கும் பிராணிகள்:— பசு, காளை, எருமை, குதிரை, நாய், பூனை முதலியவைகளைப் பற்றிக் கற் பிக்க. இவைகளின் படங்களைக் கையாண்டு பாடம் நடத்தல் எளிதே. வகுப்பின் வெளியில் இம்மாதிரி மிருகங்களைப் பார் த்துப் படிக்கும் வசதியைப் பயன்படுமாறுபயோகிக்க வேண் டும்.

பறவைகள்:— கோழிகளை முதலில் கற்பிக்கலாம். அவை களின் வாழ்க்கை முறை, உணவு, உபயோகம் போன்ற காரி யங்களை மாணவர் கவனத்திற்குக் கொண்டு வருக. கோழிப் பாடம் முடிந்தால் வீட்டின் பக்கத்திலுள்ள பறவைகளைப் பறறிக்கற்பிக்கலாம்.

புள்ளினங்களின் ஒலியைக் கேட்டு அவைகளைப் பகுத்த றியும் திறமை வளரும். காகம், பருந்து இவைகளின் ஒலிக்கு றிப்பைப் பிள்ளைகள் எளிதிலறிவர்.

வகுப்பு 3.

மூன்றும் வகுப்பில் வரும்பொழுது மாணவர் பெற்றிருக்கும் விஞ்ஞானச் சிற்றறிவுகளை ஒருவாறு ஒன்று படுத்தும் ஆற்றல் அவர்கட்குண்டாகிறது. அநுபவ அறிவின் பரப்பு முன்னையை விட அதிகமாயிற்று. பெருமரம், சிறுமரம், செடிகள் இவைகளை ஒருவாறு பகுத்தறியவியலும்.

பலம் குறைந்த மிருதுவான தண்டுகளுள்ள செடிகளையும் மண்ணுக்குள் கடியும் தண்டுகளுமுள்ள செடிகளையும் மற்றும் பற்றி தற்பொழுது தெரிந்திருக்கும். பொதுவாய் வேர்களிலும் தடிகளிலும் சேர்த்து வைத்திருக்கும் உணவுக பொருள்களைக்குறித்து இவ்வகுப்பில் கற்பிக்கலாம். செடிகளை உற்றுப் பார்த்தல் அவைகளின் பகுதிகளை ஆராய்தல், படங்கள் வரைதல், அவைகள் சம்பந்தமான உரையாடல் இவைகள் தான் பாடங்களில் கையாளவேண்டிய பொதுவான முறைகள். மனிதவாழ்விற்கு இச்செடிகள் எவ்வாறு பயன்படுகின்றன என்பது மாணவர் மனதில் நன்கு பதியுமாறு கவனிக்க.

தவளை, மீன்:—இவைகளின் ஜீவிதமுறை, உடலமைப்பு, இவைகளால் மனிதர்க்குள்ளசன்மை தீமைகள் முதலியன கற்பிக்க. இப்பிராணிகளின் உடலமைப்பிலுறும் சில விசேடங்கள், அவற்றின் காரணங்களெல்லாம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அறியச்செய்க. உள்ளக்கவர்ச்சியை அளிக்காத இப்பிராணிகளைப் பிள்ளைகள் தொடுவதாலும், பழகுவதாலும் நாளடைவில் இவைகளைப்பற்றிய மனவெறுப்பு மாறிவிடும்.

மலர்கள்:—இவைகளின் பாகங்கள், பற்பல பாகங்களின் வேலைகள் முதலியன உற்றுப் பார்த்தல், உரையாடல், வர்ணனை, சித்திரம் அமைத்தல் போன்ற முறைகளால் கற்பிக்கப்படவேண்டும். இவ்வகுப்பில் அதிகமான சாத்திர தத்துவங்களும், குறிப்புச்சொற்களும் (டெக்னிக்கல்) வேண்டியதில்லை.

வகுப்பு 4.

பூக்கள், பூம்பொடிகள் (பராகம்), தேனீ, வண்ணாத்திப் பூச்சி, காற்று முதலியன; வெண்டை, பாகல், பூசனி, பயறு, இராஜமல்லி முதலிய செடிகளின் பூக்களில் பராகம் சேர்ந்து

அவை பலன் பெறும் முறைகள்; சில காய்கள் விளைந்து காய்ந்து வெடித்துச் சிதறி விதைகள் பரவல், இவைகற்க கவேண்டும்.

சித்திரசலபங்கள் (Butterflies), பறவைகள், முயல்கள்; சித்திரசலபத்தின் முட்டையினின்றுண்டாகும் புழுக்களை வளர்த்து அவைகளின் ஜீவிதத்திலுண்டாகும் பல மாற்றங்களையும்செய்கை முறைப்படிக் கவனிக்கவேண்டும்.

வகுப்பு 5.

விளைவுகள் விதைக்கவும், பலனெடுக்கவும் செய்யும் காலங்கள், சாதாரணமாய் நடைமுறையிலிருக்கும் கிருஷிகள், அவை பயிர்செய்யும் முறைகள், கிருஷிக்கு இடையூறுவிளைக்கும் பிராணிகள், அவைகளினின்றும் கிருஷியைக் காப்பாற்றும் வழிகள், தேனி வளர்த்தல், கன்றுகாலி வளர்த்தல் முதலியன கிருஷித் தொழில் புரிவோர்க்குப் பயன்படும் விஷயங்கள் தான் இவ்வகுப்புப் பாடத்திட்டத்தில் சேர்க்கபபட்டிருக்கின்றன. பெரும்பான்மையும் கிருஷித் தொழிலே புரிந்துவரும் நம் நாட்டு ஜனங்களைப்பற்றி வருங்காலத்தில் கிருஷியல்லாத மற்று தொழில்களிலும் ஏற்படக்கூடியவைகளும் அறியவேண்டுவது அவசியமன்றோ? இவ்வகுப்பில் செடிகளையும், பிராணிகளையும், மிருகங்களையும் பற்றிக் கற்பிக்கும் பொழுது செயன்முறை வாழ்க்கைக்குப் பயன்படுமாறு நன்குகவனிக்க.

சரித்திரம் கற்பித்தல்.

குறிப்பு :—சரித்திரம் என்றால் என்ன? ஆரம்பப் பாடசாலையில் சரித்திரம் கற்பிப்பதின் நோக்கமும் பயனும், பாடத்திட்டம், பொதுத் தத்துவம், ஆரம்பப் பாடசாலையின் பாடத்திட்டம், சரித்திர ஆசிரியர், பாடந் தயார்செய்தல், ஆரம்பகாலத்துக்குரிய போதனு முறை, தெளிவுகள், செயன் முறைப் பயிற்சிகள், இம்முக்கிய விஷயங்களைத் தழுவி ஆசிரியர்களின் அறிவில் புதியன புனைதல் வேண்டும். போதனு முறைப் பாடசாலைகளில் உபயோகித்துவரும் 'சரித்திரபோதனம்' எனும் நூல் மேற்கூறிய விஷயங்களைப் பொதுவாக விளக்கும். பற்பல விஷயங்களுக்கும் எடுத்துக் காட்டாக ஐந்தோ ஆறோ பாடங்கள் எழுதிக் காட்டல் அவசியம்.

சரித்திரம் :—சரித்திரம் பொருளிலும் பரவுதலிலும் பண்டைக் காலத்தைவிட இந்நாளில் அதிக வளர்ச்சியடைந்திருக்கிறது. முன் காலத்தில் சரித்திரப்படிப்பில் இலக்கியம், சமூகம், அரசியல் ஆகியவற்றையும் சேர்த்திருந்தனர். முற்காலச் சரித்திரத்தில் பெரும்பகுதியும் அரசியலைப் பற்றிய விளக்கங்களும் ஆட்சி செய்வோரது செயல்களைச் சிறப்பித்துக் கூறுபவைகளுமாம். பொது மக்களும் சமூகங்களும் பண்டைச் சரித்திரத்தில் இடம் பெறவில்லை. சமூக வாழ்க்கையின் பற்பல நிலைமைகளைத் தழுவிய வினுக்களுக்குப் பண்டைக்காலச் சரித்திரம் விடையளிக்கவில்லை. சரித்திர ஆதாரங்களின் உண்மைநிலையை நன்கு ஆராயாமலும் சரித்திர இரேகைகளையும் தெளிவுகளையும் சரிவர உணராமலும் பகுத்தறிவுக்கு ஒத்த ஆராய்ச்சி இல்லாமலும் முற்காலச் சரித்திர ஆசிரியர்கள் நூலெழுதினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின்பின் சரித்திரம் பொருளிலும் வியாபகத்திலும் சாஸ்திர தத்துவங்களைத் தக்கவாறு ஏற்று பல மாற்றங்களும் செய்ததுண்டு. இப்பொழுதுள்ள சரித்திரத்தில் சாஸ்திரப்படியான சில லட்சணங்களை முக்கியமாகக் கருதுகின்றனர்.

(1) தற்கால சாஸ்திர சம்பந்தமான சரித்திரத்தின குறிக்கோள்.

தம் சமுதாயங்களின் சுற்று நிலையை நுட்பமாக உணரத்தக்க ஆற்றலை உண்டுபண்ணலே தற்காலம் சரித்திரம் கற்

பதின் தலைநோக்கம். நம் அரசியல் ஸ்தாபனங்கள், அரசாட்சி, செல்வநிலை, ஜாதி, மதம், இனம், வியாபாரம், கைத்தொழில், சாஸ்திரம், கலைகள் இவைகளெல்லாம் நம் சமூக சுற்றுநிலையின் இன்றியமையாப் பாகங்களென்ப. நம் சமூகச் சுற்றுநிலைக்கு முக்கிய காரணமாகவிருப்பது நம் சரித்திரமன்றோ! ஆதலால் இன்றைய நம் சுற்று நிலைகளை நன்கு வெளிப்படுத்தி நம் வாழ்க்கையை வெற்றியுடன் நடத்தத் தகுதியுடையவராக்குதலே சாஸ்திரீய சரித்திரத்தின் நோக்கமாம்.

சரித்திரம்.

நம் கழிந்தகால நிகழ்ச்சிகளைப் பற்றிய சாஸ்திரப்படிப்பே சரித்திரம் என்பர். மனித சமூகத்தின் ஒற்றுமைதான் சரித்திரத்தின் உள்ளுறைந்த முதல் கருத்தாகும். மனித சமூக வளர்ச்சியில் நிலைமாற்றங்கள் பல உண்டு. இந்நிலை மாற்றங்களை ஒன்றுசேர்க்கும் தொடர் ஒன்றன் பின் ஒன்றாக நிகழும் நிகழ்ச்சிகளே. மக்கள் சமுதாயத்தின் ஒற்றுமையைப் பற்றிய அறிவு தற்காலச் சரித்திரத்தின் முக்கிய லக்ஷணமாகும்.

சரித்திர நூலாசிரியரும் உபாத்தியாயரும்.

சரித்திர நூலாசிரியருடையவும் உபாத்தியாயருடையவும் நோக்கங்கள் வேறு வேறாம். சரித்திர நூலாசிரியரது கடமை உண்மையான சரித்திர விஷயங்களைச் சேர்த்தலாம். உபாத்தியாயரது முக்கிய வேலை உணர்ச்சி, உண்மை, இன்பம் இவ்வ ததும்ப வெளிப்படுத்தலாம். சரித்திரம் தேடுவோன் சாத்திரம் நிறைந்த பண்டிதனுவான். சரித்திரம் கற்பிப்போன் கலைவல்லான். ஆசிரியன் கற்பனைத்திறனோடும் சுதந்திரத்தோடும் கலையைக் கையாளும் உரிமை இருப்பதால்தான் கலை அழகுபடுகிறது.

(2) சரித்திரம் கற்பிப்பதின் நோக்கம்.

சரித்திரத்துக்குப் பாடத்திட்டத்தில் ஏனைய விஷயங்களால் பெறமுடியாத சில சிறந்த நோக்கங்கள் உண்டு.

சரித்திரத்தின் சமூக நோக்கம்.

மனிதர்களின் சுற்று நிலையை தெளிவுபடுத்தி நிகழ் காலத்தை நன்கு வெளியிடலே சரித்திரத்தின் தலை சிறந்த

நோக்கமாகும். எந்த உண்மைகளையும் அதன் முன்சரித்திர வாயிலாலல்லாமல் அறியமுடியாது. ஒரு வகுப்போ அல்லது சமூகமோ அதன் வாழ்க்கையைத் தொடங்குவது முன்னைய சீர்திருத்தம் அல்லது சமூக மாற்றங்களெனும் அடிப்படையிலாகும். இக்கால நாகரீகம் முற்கால நாகரீகத்தின் விளைவும் எதிர்கால நாகரீகத்தின் அடிப்படையுமன்றோ? நிகழ்கால நிலைமை இறந்தகால நிலைப்போக்குகளிலிருந்து உற்பத்தியாகி எதிர்கால நிலைமைக்கு ஆதாரமாகும். காரியமறிய காரணஞானம் இன்றியமையாததே. அவ்வாறே நிகழ்காலச் சுற்றுநிலையை நுட்பமாக அறிய இறந்தகால விவரங்கள் இன்றியமையாதனவே.

சரித்திரத்தில் சமூகநோக்கம் மேலானது. வருங்காலத்தில் மாணவர் நன்னிலையெய்த இதுவே காரணமாகும். சமூகம் என்னவென்பதும் அது எவ்வாறிருக்கிறதென்பதும் வெளிவாக்கி சமூகக் கடமைகளைச் செவ்வனே புரிவதற்கு மாணவர்களைத் தகுதியாக்குவதும்; சரித்திரத்தின் விரிந்த நோக்கத்திலடங்கும். நம்முடன் மிக நெருங்கிய மனிதர்களின் சுற்று நிலையை விளக்கித் தருவதும் சரித்திரத்தின் மற்றொரு நோக்கமாம். நம்நாடு, ஜனங்கள், ஸ்தாபனங்கள், ஒழுக்கவழக்கங்கள், சமூக அவசியங்கள் இவைகளை நமக்கு நன்கு வெளிப்படுத்துவது சரித்திரம் மட்டுமே. ஆதலால் பொதுக் கல்வியின் இணைப்பில் சரித்திரத்துக்கு முதன்மை ஸ்தானம் கிடைத்தது. இயற்கை உலகத்தை இயற்கைநூல் காட்டுவதுபோல் மனித உலகத்தைச் சரித்திரம் காட்டுகிறதென்று ஸ்பென்சர் கூறக் காரணம் இதுதான்.

நம் சுற்றுப் பக்கங்களிலுள்ள பொதுமக்கள் நிலைமை முன்னேற்றமடையும் வழக்கங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும் இக்காலத்திய ஸ்தாபனங்களின் உற்பத்தியிலும் வளர்ச்சியிலும் விருப்பம் உண்டுபண்ணவும் செய்வது சரித்திரத்தின் தனியான நோக்கமாகும். சுய நலப்பற்றைப் பொது நலப்பற்றாக மாற்றி வாழ்க்கைக்குரிய சமூக அறிவை வருங்கால குடிகளாகும் மாணவர்களுக்குப் பதியவைப்பதும் அவர்கள் குடிகளின் கடமையை நான்குணர்ந்து நிறைவேற்றுவதும் சரித்திர பாடத்தின் தனிநோக்கத்திலடங்கும். சாதி மத வேற்றுமை கட்கு அப்பால்பட்டு உலகனைத்தும் பரவிய

ஒரேமனிதசமூகம் இருக்கிறதென்றும் அந்த உலக சமூகத்தின் அங்கத்தினர்கள்தான் வெவ்வேறான ஜாதி சமயத்தார்களும் வெவ்வேறான நாட்டினர் களுமான ஜனங்கள் என்றும் உள்ள மிகச் சிறந்த சமூக எண்ணம் வருங்கால குடிகளில் விளங்கும்படிச் செய்துவிட்டால் சரித்திர போதனையின் தலைசிறந்த எண்ணம் நிறைவேறியது எனலாம்.

(3) சரித்திரம் கற்பிப்பதின்பயன்.

சரித்திர போதனையின் பயனாக விலை பெற்ற பல நன்மைகளும் உண்டு. அவற்றை, செயன் முறை, அறிஞர் நிலை, நல்லொழுக்கம் என மூன்றாகப் பிரிக்கலாம்.

செயன் முறை:—நாடோறுமுள்ள நம் வாழ்க்கைக்கு அவசியமான பல விஞ்ஞானபகுதிகளும் சரித்திரம் படிப்பதால் கிடைக்கின்றன. மாணவர்களுக்கு நூற்பழக்கமும் ஏற்படும். படிப்பில் விருப்பமும் நாகரீக முன்னேற்றத்திற்குத் தூண்டுதலு முண்டாம்.

அறிஞர் நிலை:—ஞாபகம், கற்பனை, பகுத்தறிவு முதலிய மனச் சம்பந்தமான நன்மைகளை அதிகப்படுத்தும் சந்தர்ப்பம் சரித்திர பாடத்தால் எளிதில் கிடைக்கிறது. இவையில் மாணவர்களின் கற்பனைத்திறன் வளர்ந்தால் ஆசிரியருக்கும் நலனுண்டு. கற்பனாசக்தி பலவிதமாம். அதில் புதிதாக அமைக்கும் கற்பனாசக்தி அழகுதான் சிறப்புடன் விரும்பப் படுவது. இத்தகையக் கற்பனையை விளங்கச் செய்து பொதுவான பாவனாசக்தியை வெளிப்படுத்த சரித்திரம் வசதியளிக்கும். பிள்ளைகளிடம் சரித்திரகதை கூறும்பொழுது அதிலுள்ள அரங்குகளும், நிகழ்ச்சிகளும், அவர்களின் மனக்கண்ணாடியில் துலங்க நாம் முயற்சிக்கிறோமன்றோ. குழந்தைப் பிராயத்திலும், பாலப் பருவத்திலும், பாவனாசக்திக்கு மிக்க ஆற்றலிருப்பதால் ஆண் பெண் இருபாலாரின் சங்கற்ப சக்தியை வலுப்படுத்தல் எளிதாம். அவர்கள் பழக்கத்திலும் அனுபவத்திலும் உள்ள காரியங்களைப் பயன் படுத்தினால் எளிதாக இது கைகூடும். ஆனால் மாணவனுக்கு வயது ஏற ஏற படிக்கவேண்டும் சரித்திர உண்மைகள் முன்னையைவிட நுட்பமும் ஆகிவிடும். கற்பனாசக்தியின் உபயோகமும் குறைந்து வரும்.

ஆரம்ப வகுப்புகளில் யூகமான கதைகளுக்குத்தான் முதன்மைஸ்தானம். இத்தகைய கதைகளின் காட்சி இயன்ற மட்டும் உருவசம்பந்தமான கருத்துக் களாயிருத்தல் (concrete) அவசியம். மேல் வகுப்பில் செல்லச் செல்ல உண்மை யான அபிப்பிராயங்களுக்குக் கூடுதல் கவர்ச்சி ஏற்படுகிறது. இக்காலத்தில் உருவசம்பந்தமான கருத்துக்கள் படிப்படி யாகக் குறைந்தும், குணசம்பந்தமான (abstract) கருத்துக் கூடியும் வெளிப்படவேண்டும்.

உயர்ந்தவகுப்புக்களில் பலதடவையும் ஆரம்பவகுப் பைப்போல் அழகிய வர்ணனைகளும், படக்காட்சியிலும் வாய்க்கப்பெருதக் கருத்துக்களைக் கையாளநேரிடும். இவ் வித சந்தர்ப்பங்கள் கற்பனுசக்தி விதியே ஏற்றதல்ல. மாண வர்களுக்கு வயது கூடும்பொழுது அலங்காரம் குறைந்த தும் உண்மை நிறைந்ததுமான மனப்பான்மை ஏற்படும்.

சங்கற்ப சக்தியை எவ்வாறு வளரச் செய்யலாம்.

பிள்ளைகளின் கற்பனுசக்தியை விரியச்செய்து சுவை நிரம்ப சரித்திர ஆசிரியர் இரு காரியங்கள் கவனிக்கவேண் டும். முதலில் மாணவர் சரித்திர சம்பந்தமான கருத்துக் களைக்கொண்டு இயற்றும் மனச் சித்திரங்கள் நல்ல தெளி வாய் இருக்கும்படி அழகும் நுட்பமுமுடையகருத்துக்களைப் பிள்ளைகளுக்கு அளித்தல் நலம். அவர்கள் பெற்ற கருத்துக் கள் பிழையானுல் அவர்கள் மனப் போக்கும் தவருகும். ஆதலால் புதிய கருத்துக்களை இயன்றமட்டும் தெளிவாக்கி வெளியிடுவது மிகவும் அவசியம். கருத்துக்களை ஒழுங்காகச் சேர்த்து மனச்சித்திரம் வரைதல் நிறைவேற மாணவர் கவனத்தை முக்கியஸ்தானத்தில் சேர்த்தல் இரண்டாவது குறிக்கோளாகும். இவ்விருகாரியங்களின் வெற்றி பெரும் பாலும் ஆசிரியரது தனிச்சிறப்பையும் வர்ணனைத்திறனையும் உதாரணமும், உபகரணமும் கையாளும்திறமைகளையும் பொ றுத்திருக்கின்றன.

வெறும்குழந்தை நிலையானதும் ஆகாயக் கோட்டை போன்றதுமான தற்பனைத் தன்மைகளையல்ல நாம் வளர்க்க முயலவேண்டுவது. கவிகள், சரித்திர நூலாசிரியர், சாஸ்திர பண்டிதர், சிற்பம் வல்லார் முதலியோரிடம் விளங்கும் சிறப் பும் படைப்புமுடைய சங்கற்ப ஆற்றலையே நாம் எதிர்

நோக்கவேண்டும். இது நிறைவேற, கற்பித்து அறிவிப்பதை விட வழி காட்டல் நன்றே. சங்கற்ப சக்தியைத் துலங்கச்செய்வதால் மட்டும் அதைப் பேணி வளர்ப்பதாகாது. விளங்கும் சங்கற்ப சக்தியை உயர்ந்த முறையில் ஆற்ற வேண்டும்.

எத்துணைச் சங்கற்ப சக்தியிருப்பினும் முற்றிலும் புதுமையான சந்தர்ப்பமோ நிகழ்ச்சியோ உண்டுபண்ண வியலாது. முன் அனுபவங்களும் கருத்துக்களும் புது முறைகளிலும் உருவங்களிலும் நன்கு வெளிப்படுத்தலே சங்கற்ப சக்தியின் சிறப்பாம். ஆதலால் முன்னையக் கருத்துக்களும் அனுபவங்களும் இயன்ற அளவு இன்பமாகவும் முழுமையாகவும் குழந்தைகளின் முன் வைப்பதுவே சங்கற்ப சக்தியின் நல்வழியாம்.

நல்லொழுக்கம்:—சரித்திரப்படிப்பு குண நலத்திற்கும், மனோவிகார அமைதிக்கும் அரண்செய்யும். உண்மையான தேசப்பற்றும் மனிதர் அனைவர்க்கு முரிய அமைதியறிவும் வருங்காலக் குடிகளில் உண்டுபண்ண இயலுமென்பது சரித்திரத்தின் தலைமைப் பயனென்றுணர்க.

தன்னாட்டுப் பற்று:— தன் நாட்டைப்பற்றிய பற்று யாவர்க்கும் இன்றியமையாதிருக்கும் குணமாகும். ஆனால் பல முறைதவறான எண்ணத்தால் மாசு படுத்துவர். அகந்தையும் ஆவேசமும் கொண்ட தேசப்பற்று ஏற்றதன்று. அநாகரிகமும் அறிவற்றதுமான தேசப்பற்றை மூடத்தனத்தினுடையவும் பக்குவமற்ற மனோநிலையினுடையவும் பிள்ளையென்பர். ஜாதிகள் அரசியலுக்காக வாழ்கிறதென்னும் தத்துவத்தில் பிரதிட்டித்த சில நாடுகளின் தன்னாட்டு பக்தி ஒரு குடியானவனின் முதற் கடமையாகக் கருதப்படுகிறது. சரித்திர பாடத்தின் முக்கிய நோக்கம் தன்னாட்டுப்பற்றை வளர்த்தல் எனச் சிலர் நம்புகின்றனர். இது பெருந்தவறான ஓர் எண்ணமே.

சரித்திரம் மனித சமூகத்தின் வளர்ச்சியை சம்பந்தித்த ஓர் படிப்பன்றோ! உலக மனிதர் அனைவரும் சரித்திர எல்லைக்குள் அடங்குவர். தேச சரித்திரங்களும், இராஜ்ய சரித்திரங்களும், சாம்ராஜ்ஜிய சரித்திரங்களும் உலக சரித்திரத்தின் ஓர் அங்கம் என்னும் உண்மை உணராமல் கற்பிக்கும்பொழுது பகுத்தறிவற்ற தன்னாட்டுப் பற்றும், மடத்தனமான தேசப்பற்றும் எழும்புகின்றன.

தன்னாட்டுப் பற்று சரித்திர பாடத்தின் முக்கிய தத்துவமாகக் கருதுவதானால் சரித்திரத்தின் சாஸ்திர சம்பந்தமான சுபாவம் அறவே கைநழுவ விடவேண்டும். சரித்திர பாகங்களின் உண்மை சம்பந்தமான ஆதாரங்களின் சோதனைகளும் உண்மையறிய முயற்சிப்பதும் பாழாகும். ஒரு நாட்டின் சரித்திரம் உண்மையை மறைத்து நல்ல நிறத்திலும் புகழிலும் செல்வத்திலும் சிறப்பாக இலங்குவதால் தப்பான வழியில் தேசபக்தி உண்டாகும். தன் நாட்டைப் பற்றிய சரித்திரம் மிக்க மேன்மையாகவும் பிறநாட்டைப் பற்றியது இழிவாகவும் வெளியிடுதல் எவ்வாற்றானும் ஏற்புடைத்தன்று. சரியோ, தப்போ என்ற ஆராய்ச்சி இல்லாது என்தேசம், என்சமயம், என்ஜாதி இவை மேன்மையென்று எண்ணுவது சரித்திர இயல்பிற்கும் நல்லொழுக்க இயல்பிற்கும் நாகரிகமுன்மாதிரிக்கும் பொருந்தியதன்று. சரித்திர நூலாசிரியரும் சரித்திரம் கற்பிக்கும் ஆசிரியரும் நடுநிலை தவறு சாஸ்திர ஆசிரியர்களைப்போல் பகை நட்பு நாடுகளின் இறந்த காலநிகழ்ச்சிகளை உண்மையுடனும் நடுநிலையுடனும் உரைக்கவேண்டும். சரித்திர நூலாசிரியன் உண்மையைக் கடைப்பிடித்து அதனையே போற்றவேண்டும்.

நன்மை தீமை ஆராய்ச்சியற்ற தேசபக்தி நன்மையை விடத் தீமையை அதிகம் விளைவிக்கும். உண்மையான தேசபக்தி தாய்நாட்டின் கேட்டை நீக்கி நன்மையளிக்கத் துணை செய்யும். மாசற்ற நாட்டுப்பற்று நுண்ணறிவுமிக்க சரித்திர போதனைகளின் நற்பலன்களின் ஒன்றாகும்.

சரித்திரமும் உலக சமாதானமும்.

நிலையான உலக சமாதானமும் திருப்தியும் பொதுவாக உலகம் விரும்பும் திட்டமாம். உட்பகையும், குழப்பமும், போரும் உலகில் நின்று மறைந்தாலும் சரித்திரம், அறிவு நிறைந்ததும் இன்பம் விளைவிப்பதும் ஆகிய ஓர் விஷயமாகத் தொடர்ந்து நலம் பெறும். தாய்நாட்டுப்பற்று, தீரம், வீரம், தொண்டு, தியாகம் முதலிய அருங்குணங்கள் வளருவதற்கு போர்க்களம் ஏற்றதாயினும் போர்களை உலகினின்றும் அறவே ஒழிப்பதால் முற்கூறிய குணங்கள் கூம்பிவிடுமென்று கருதற்க. இயற்கையோடு போர் செய்து உலக நன்மையை விளைவிக்கும் இயற்கை நுட்பங்களைத் துருவி நோக்கும் சாஸ்திர ஆராய்ச்சியாளரும் நாடுகள் தேடும் மகிழ்ச்சியாளரும் ஆகிய சமாதான வீரர்களின் சாந்திப்

போர், போர் வீரர்களின் இரத்த ஆறு ஓடுவதும் அழி வைத்தருவதுமான கொடும் போரை விட எவ்வளவோ இன்பமளிப்பதாம். குருதிக்களத்தில் தழைத்தோங்கும் எல்லாச்சிறந்த குணங்களும் சமாதான உலகில் துலங்கிக்கொண்டிருக்கும். வடதுருவம் கண்ட பீயரையும் எவரஸ்டு ஏறி ஆன்மத்தியாகம் புரிந்த ஐர்வினும் கடல்யாத்திரை வீரனை மகல்லனும் அமேரிக்க கண்டுபிடித்த கொலம்பஸும் காட்டின தைரியமும் தியாகமும் போர்வீரர்கள் புரிந்ததை விட மாற்றுக்குறைந்தன வாமோ!

ஆயிரத்துத்தொள்ளாயிரத்துப் பதினைங்கில் உலகப்பெரும்போர் உலகின் சமாதான விருப்பத்தைப் பெருக்கிற்று. உலக செல்வத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உரிய பொருட்களை ஒருவருக்கொவர் அழிக்க முற்பட்டு உலக மக்களைத் துன்பத்திலாழ்த்திய பேய்வெறித் தாண்டவத்தை உலகம் அறியத்தொடங்கி விட்டது. அதன் பயனாக உலக அமைதிவாழ்வின் பொருட்டு சர்வதேச நட்பை உண்டுபண்ணும் சங்கம் ஏற்பட்டது. உலகில் பல நாடுகளும் இதன் அங்கங்களாயின. போர்த்திட்டத்திற்குச் செலவு செய்யும் பணம் மனித சமூகங்களின் துன்ப விடுதலைக்குச் செலவு செய்ய வேண்டுமென்ற பெருநோக்கத்தோடு பல தேசத்தவர்களும் சேனைச் செலவைக்குறைக்க முன் வந்தனர். அழிவற்றதும், நிலையுற்றதுமான உலக சமாதானத்தை யொட்டியே பல திட்டங்களும் சர்வதேச சங்கத்தின் கவனத்தில் பட்டன. ஆனால் போரிலுள்ள காயங்கள் ஆறவும் துன்பங்களின் கொடுமைகள் குறையவும்செய்தபோது உலகநட்பின் குறிக்கோள் மறந்துவிட்டது. ஜப்பானும் இற்றலியும் முதலில் சர்வ தேசநட்பை எள்ளி இகழ்ந்தனர். பின் 1939–ல் வெடித்தெழுந்த இரண்டாம் உலகப்போர் சர்வதேச நட்பை அறவே அழித்தது. அத்துடன் உலக சமாதானமும் பாழாயிற்று. இதன் காரணமென்ன?

சகோதர சிந்தனை, நீதிபோதனை, வாய்மை, சமநோக்கு, எதிர்வாதமதிப்பு, போன்ற மேலான குணங்களையெடுத்துரைத்தால் மட்டுந்தான் சமாதான விருப்பம் பயனடையும். நம்பிக்கையும் அன்புமில்லாதவர்களின் வாக்குறுதி தந்திர சூழ்ச்சியும் அவர்களின் உடன்படிக்கை வெறும் குப்பைத்தாளுமாகும். மனிதனது விலங்குத் தன்மையான விருப்பத்தை வெல்ல சன்மாக்க சக்திகளுக்கு ஆற்றல் வந்

தால்தான் லட்சியங்கள் பலவும் செயலளவாகும். இந்த சக்தியை விரியச் செய்யும் முக்கிய உபகரணம் கல்வியும், அதனுலுண்டாகும் சீர்திருத்தமுமாம். மேன்மையுடைய தும் எங்கும் பரவியதுமான கல்வியில்தான் உலக சமாதானம் பொருந்தியிருக்கிறது. சிறந்ததும் மக்கள் அனைவர்க்கும் சம்பந்தப்பட்டதுமான சீர்திருத்தத்தில் கட்டப்படாத சமாதான அரண்மனை எவ்வளவுதான் அழகும் மேன்மையுமுடையதாயிருந்தாலும் அது வலுவாகாது. தன்னுட்டபிமானமோ சுதந்திரச் சிந்தையோ உலக சமாதானத்தை அழிக்கலாகாது. எல்லை கடந்த மதவெறியும் நிகரற்ற சாதியுணர்ச்சியும் பகுத்தறிவில்லா தன்னுட்டுப்பற்றும் ஒருதலைச்சார்பான வியாக்கியானங்களும் தூய்மையான சரித்திர போதனையைக் கெடுக்காதிருக்கவேண்டும். இன்பமளிக்கும் உலக சமாதானத்தை வருங்காலக் குடிகளுக்கு வழிகாட்டத் தக்க ஓர் தூண்டுகோலாகும் சரித்திரம். இதை தக்கவாறு உபயோகித்தலே உலக சாந்தியின் பொருட்டு ஆசிரியர்உலகம் செய்யும் அருந்தொண்டு.

ஆரம்பப் பாடசாலையில் சரித்திரபோதனையின் நோக்கமும் அதற்கேற்ற பாடத் திட்டமும்.

உயர்தரச் சரித்திரம் கற்பிக்கத்தக்க அடிப்படையிடவும் ஆரம்பக்கல்வி முடியும்பொழுது மாணவர்களைச் சூழ்ந்திருக்கும் மனிதச் சுற்றுப் பக்கங்களைப்பற்றி ஓர் பொது அறிவு அளிப்பதுதான் ஆரம்பப் பாடசாலையில் சரித்திரம் கற்பிப்பதால் செய்யவேண்டுவன. புராணக்கதைகள், இதிகாசக்கதைகள், சரித்திரக்கதைகள் என்பவை படிப்படியாக உண்மைச் சரித்திரத்திற்கு மாணவரை வழிநடத்தவேண்டும். தலபுராணம், தேசசரித்திரம், இந்தியசரித்திரம், உலகசரித்திரம் என்றிவ்வாறு பாடத்திட்டத்திலடங்கும் விஷயங்களை ஒழுங்காக விரிவுபடுத்தவேண்டும். காலவரையறை முறையில் கதைகளைத் தெரிந்தெடுத்து மறைவாக (பரோக்ஷமாக)ப் பிள்ளைகளுக்குக் கால அறிவை வளர்க்கலாம். வெறும் அரசாட்சி சரித்திரமோ அல்லது நாட்டின் சரித்திரமோ கற்பித்தால் மட்டும் போதாது. நாடு, சமுதாயம், சமயம், சாஸ்திரம், இலக்கியம் முதலிய எல்லாச் சமூகச் சுற்றுப்பக்கங்களும் சரித்திரத்திட்டத்தில் அடங்கியிருத்தல் அவசியம்.

ஆரம்பகாலம்:—கல்வித்திட்டத்தின் ஆரம்பப் பகுதியை மனதின் கால அளவிலும் ஆரம்பக்காலமாய்க் கருதுக. அதுபோல் நடுப்பாகம் அடுத்தபாகம் என்பவைகளையும் கணக்கிடலாம். ஆரம்பப் பாடசாலையில் சிறுவர்களின் அறிவைப் பொருட்களையொட்டி அனுபவங்களும் கருத்துக் களும் அடிப்படையாகக் கொண்டதெனக் கூறலாம். ஐம்பு லன்களுக்கும் விளங்காத கருத்துக்களை முழுதும் உணர அவர்களுக்கு ஆற்றலில்லை. இந்தத் தத்துவப்படி ஆரம்ப கால சரித்திரம் பொருட்களையொட்டிய அனுபவம் நிறைந்த கருத்துக் களாலாகவேண்டுமன்றோ! பாடசாலையிருக்கும் நாட்டின் சரித்திரம் நேர்காட்சிக்கு ஏற்றதாகையால் இது இக்காலத்திற்கு ஏற்றதென்று எண்ணுகின்றனர். இதற்கேற் ற போதனுமுறை கலை நிறைந்ததும் நாடகமாகயிருத்தலும் நலம். சரித்திர சம்பந்தமான ஜீவித சரித்திரக் கதைகள் சரித்திர நிகழ்ச்சிகளைவிட எளியதும் அழகானதுமானதால் ஆண்பெண் மாணவர்களுக்கு இன்பமாயும் கவர்ச்சியாயு மிருக்கும். மனிதனைச் சம்பந்தித்த சரித்திரத்தில் சம்பவங் களைவிட உயிரும் ஒளியுமிருக்கும். வெறும் சம்பவ விவரங் கள் மனிதசம்பந்த மற்ற குறைந்த கருத்தை வெளியிடும். முற்காலச் சரித்திர நிகழ்ச்சிகளை ஜீவசரித்திரக் கதைப்பாத் திரங்களுடன் பொருத்திவிளக்கினுல் அவைகளுக்கு உண் மையும் உயிரும் பெறுவதற்கு இடமுண்டு. சரித்திர சம்பந் தமாய் முக்கியமாக ஜீவியசரித்திரக்கதைகளை காலமுறை பிற ழாது திட்டமாய்த் தெரிந்தெடுத்து விளக்குவது சரித்திரம் கற்பிக்க மிகச்சிறந்த ஓர் ஆரம்பத்திற்கு ஏற்பதாகும்.

சரித்திரக்கதைகள்:— எதிர்காலத்தில் உண்மையான சரித்திரப் படிப்பிற்கு உதவுமாறு சரியான அடிப்படையி டுவதே ஆரம்பப்பாடசாலையில் சரித்திரம் கற்பிப்பதன் முக்கி ய நோக்கமென்று கூறினோமன்றோ! இதுமுற்றும் நிறைவே றுவது சரித்திரக்கதைகளாலாகும்.

மாணவர்கள் இயல்பாகவே துன்பத்தைக் கவனியாத வரும், வீரர்களை ஆராதிப்பவருமாவர். வீரச்செயல்களும், தீரமிகுந்த செய்கைகளும் அவர்கள் மனதில் சீக்கிரம் பதிந் து மனோவிகாரத்தைக் கிளப்புகின்றன. இது பெரும் பான் மையும் அவர்களின் முன்மாதிரிக்கு உதவியாகும். முன்மா திரியான து குணத்தை விளக்கி தன்னை அபிவிருத்தியடையச் செய்யுமென்பதில் ஐயமில்லை. சரித்திரக்கதைகள் படிப்ப

தால் அறிவுபெருகி சங்கற்பசக்திமிகுந்து சரித்திர உண்மை களையொட்டி முறை முறையாக அறிய ஆசையுண்டாகவும் இடமளிக்கிறது.

ஆரம்ப வகுப்புக்களுக்குத் தக்கதான சரித்திரக்கதைக ளை மூன்ருகப் பிரிக்கலாம்: (1) புராணகதைகள், (2) ஐதிகக் கதைகள், (3) உண்மைக் கதைகள்.

சரித்திரக் கதைகள் :---எதிர்காலத்தில் உண்மையான சரித்திரப் படிப்பிற்கு உதவுமாறு சரியான ஓரடிப்படையிடு வதே ஆரம்பப் பாடசாலையில் சரித்திரம் கற்பிப்பதின் முக் கிய நோக்கமென்று கூறினேமன்ரே? இது முற்றிலும் நிறைவேறுவது சரித்திரக் கதைகளாலாகும்.

மாணவர்கள் இயல்பாகவே துன்பத்தைக் கவனியாத வரும் விரர்களை ஆராதிப்பவருமாவர். வீரச்செயல்களும் தீரமிகுந்த செய்கைகளும் அவர்கள் மனதில் சீக்கிரம் புகுந் து மனேவிகாரங்களைக் கிளப்பிவிடுகின்றன. அவை பெரும் பாலும் அவர்கள் முன்மாதிரிக்கு உதவியாகும். முன்மாதி ரிக் குணத்தை விளக்கி தன்னை அபிவிருத்தி செய்ய இவை உதவுமென்பதில் ஐயமில்லை. சரித்திரக் கதைகள் கற்பதால் அறிவு பெருகி சங்கற்ப சக்தி மிகுந்து சரித்திர உண்மை களையொட்டி காலவ்ரையறை செய்து மேன்மேலும் அறிவு பெருகி வளரும். ஆரம்ப வகுப்புக்களுக்குத் தக்கதான சரித் திரக்கதைகளை மூன்ருகப் பகுக்கலாம்.

1. புராண கதைகள் :---கிரீஸ், ரோம், இந்தியா முத லிய நாடுகளிலுள்ள புராண இதிகாச கதைகள் இதற்கு உதா ரணங்களாம். ஒடிஸி, இலியட், ஏனிட், இராமாயணம், பார தம் என்ற நூல்களிலுள்ள கதைகள் இம்மாதிரி யமைந்தன வாம். இக்கதைகள் உண்மைக் கதைகளைவிட அதிகத் தொ டர்பு மதசம்பந்தமாகவும் சமுதாய சம்பந்தவுமான காரியங் களோடு என்பதேயாகும்.

2. ஐதிகக் கதைகள் :---இம்மாதிரி கதைகளுக்குச் சரித் திரத்தொடர்பு சிறிது காணலாம். ஆனல் உதாரணங்க ளாலோ இரேகைகளாலோ சரித்திர சம்பந்தமானவையெ ன்று தெளிவாகக் கூற முடியாது. ரோபின் ஹுட், டிமஸ், ஜேஸன், ஹெர்குலிஸ், உடலோடு சுவர்க்கம்சென்ற சேர மான்பெருமாள், பரசுராமன் ஆகியவர்களின் கதைகள்

இவற்றிற்கு உதாரணங்களாம். 'ஐதிகமாலை', 'தென்னிந்திய சரித்திரம்' என்ற நூற்களில் கேரளத்தையொட்டியும் தென்னிந்தியாவை ஒட்டியதுமான பலபல கிரி கேள்விக் கதைகள் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து சரித்திர சம்பந்தமான கதைகளை அவசியம்போல் எடுத்துக் கொள்ளலாம்.

3. உண்மைக் கதைகள் :--இவற்றில் விவரிக்கும் கதைகள் சரித்திர சம்பந்தமான உண்மைக் கதைகளாகும்.

உதா :---லியோனிதாஸ், லூதர், ஆல்பிரட், ஜோவான், வில்லியம்டெல், மகாவீரன், புத்தன், அசோகன், ஹர்ஷன், இராஜராஜசோழன், மாணிக்கவாசகர், சுந்தரபாண்டியன், சிவாஜி, சாந்துபிபி, சங்கராச்சாரியர், இராஜா கேசவதாஸ் ஆகியோர்.

மாணவர்களின் சுலபமான அவசியத்தை இலக்காக்கி முதலில் புராணகதைகளும், பின் கேள்விக்கதைகளும், கடைசியில் சரித்திரக் கதைகளும் என்ற முறையில் ஆரம்பகாலத்தில் பொருத்தமாயிருக்குமென்று 'ஜார்விஸ்' முதலிய சரித்திர அறிஞர்கள் கூறுகின்றனர்.

சரித்திரக் கதைகள் வாயிலாக அடையும் நன்மைகள்.

1. எதிர்கால சரித்திரம் படிப்பதற்கு அடிப்படையாக சரித்திர உண்மைகளைத் தயார் செய்ய இக்கதைகள் வசதியூட்டுகின்றன.

2. உண்மையான சரித்திரப் படிப்புக்கு உதவுமாறு மாணவர் மனதைப் பக்குவமாக்க சரித்திரக் கதைகள் ஏற்றவை.

3. சரித்திரம், பூமிநூல், இலக்கியம் ஆகிய விஷயங்களில் விரிவானதும் மனிதத் தன்மை வாய்ந்ததுமாகிய ஒரு அடிப்படையை முறையாக மாணவர்களிடம் நிலை நாட்ட இயலும்.

காலதேசம் உணர்தல்.

காலமும் இடமும் சரித்திரத்தின் பிரிக்கமுடியாத இரு பாகங்களாகும். சரித்திர உண்மைகள் காலதேசத் தொடர்பில் அமைகின்றன. பத்துப் பன்னிரண்டு வயதுவரை மாணவர்களிடம் திட்டமான காலதேச உணர்ச்சி அவ்வளவு தோன்றுவது.

ஆனல் வரையறுத்துத் திட்டம் செய்யப்பட்ட ஒரு பிளான் தயார் செய்து, சரித்திரக் கதைகளைத் தெரிந்தெடுத்து, ஒழுங்குபடுத்திக் காட்டலே காலதேசங்களை ஒட்டிய பொதுவான அறிவு இளமாணவர்களுக்கு உண்டாக்கும் உத்தமவழி. ஒரே காலத்தில் நிகழ்ந்த பல கதைகளையும் முறைப்படி கற்பிப்பதால் அக்காலநிலையை ஒட்டி ஓர் பொது அறிவு மாணவர்களுக்கு உண்டாகும். அல்லாமல் காலதேசங்களை முறையில்லாது இங்கிலாந்திலிருந்து கிறிஸ்து வருடத்திற்குமுன் ஒரு கதையும் அதைத் தொடர்ந்து இந்தியாவிலுள்ள தற்கால சரித்திரக் கதையிலொன்றும் அமேரிக்காவின் மத்திம காலநிலையிலுள்ள ஒரு கதையும் ஒரு வகுப்பில் தொடர்ந்து கற்பித்தல் நன்முறையாகாது. ஏதேனும் சில சரித்திரக் கதைகளில் அங்குமிங்குமிருந்து ஆசிரியர் இஷ்டம்போல் தெரிந்தெடுத்துப் படிப்பித்தல் போதாது. ஒரு குறிப்பிட்ட எண்ணத்தை இலக்காக்கி அதற்குத்தக்க மாதிரிக் கதைகள் தேர்ந்து முறைப்படுத்தவேண்டும். கதைகள் ஒரு குறிக்கோளை அடைவதற்கு வழி காட்டியாக மாத்திரந்தான் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆரம்பகாலமுதல் முடிவுவரையிலுமுள்ள சரித்திரம் படிப்பித்தல் உண்மைகளையும் காட்சிகளையும் ஒன்றன் பின் ஒன்ருக ஒழுங்குபடுத்தி வரையறை செய்துவைத்த பின்ஞக வேண்டும். ஆரம்பப் பாடங்களில் எளிதில் உணரும் சந்தர்ப்பங்களும் இலகுவான் கதை நடிகர்களும் அமைந்திருத்தல் வேண்டும்.

இரண்டாவதாண்டு மாணவர்களின் கவனம் சிறிது பெருகி பலப்படுவதால் கதைகள் சற்று நீண்டும் விரிவாகவும் இருக்கவேண்டும்.

மூன்ருவதாண்டுமுதல் சுயராஜ்யசரித்திரத்தில் புகழ்பெற்ற கதைப் போக்குகளை காலமுறைக்கேற்ப தெரிந்தெடுத்து படிப்பிப்பதால் சுயராஜ்யசம்பந்தமான முதலறிவு பெற முடியும். இக்காலத்தில் சுயராஜ்ஜிய சரித்திரத்திற்கு வெளியிலிருந்தும் கதைகளைப் படிப்பிக்கலாம்.

சரித்திரப்பாடம் எந்த வகுப்பில் தொடங்கலாம் என்பது.

முதலிரு வகுப்புகளிலும் பாடகாலவிவரப் பட்டிகையில் சரித்திரத்திற்குக் குறிப்பிட்ட இடம் இல்லாமலிருந்தாலும் இவ்விஷயத்தை பாஷையோடு சேர்த்து அந்த வகுப்புக்களில் கற்பிக்கலாம். உண்மையில் முதல் வகுப்பிற்கூட

சரித்திரம் நாம் தொடங்கவில்லை. முன்னுள்ளதைத் தொடர்கிறோம். முதல் வகுப்பிற் சேருமுன்னே மாணவன் பல கதைகளும் கேட்டிருப்பான். ஒன்றும் இரண்டும் வகுப்புக்களில் புராணகதைகளும், இதிகாசங்களும் பாஷையோடு கலந்து கற்பிக்கலாம். மூன்றும் வகுப்பில் தன்னுட்டுச் சரித்திரத்திலிருந்து கதைகள் படிப்படியாகக் கற்பிக்கலாம். நான்காம் வகுப்பில் முக்கியமான சுயராஜ்ஜிய சரித்திரக்கதைகளும் இந்திய சரித்திரக் கதைகளும் ஜனங்களைவரும் புகழும் உலகசரித்திரக் கதைகளும் சேர்க்கலாம். ஐந்தாம் வகுப்பில் திருவாங்கூர் சரித்திரத்தைப்பற்றிப் பொதுவான ஓரறிவு கிடைக்கும்படியான ஆராய்ந்தெடுத்த கதைகளும் இந்தியசாத்திரம் படிப்பிக்க ஆரம்பமாகும் உணர்ச்சி தரும் வாழ்க்கை வரலாறுகளும் ஜீவிதகதைகளும் தற்காலத்தைப் பற்றின பொது அறிவு கிடைப்பதற்கு வேண்டிய கதைகளும் தெரிந்தெடுக்கவேண்டுமென்பது பல சரித்திர அறிஞர்களது அபிப்பிராயம். ஐந்தாம் வகுப்போடு ஆரம்ப காலநிலை முடிவடைந்ததெனலாம்.

ஆரம்பக்காலத்தில் சரித்திரம் கற்பித்தல் சம்பந்தமான சில கட்டளைகள்.

1. பிரித்தறிவதைவிட சேர்த்தறியும் முறை நன்று.

2. தெரிவிக்கும் முறை நேர்க் காட்சியும் உருவங்களை ஒட்டியும் வர்ணனையாகவும் படங்களுடனும் இருத்தல் வேண்டும்.

3. இறந்த காலம் இயன்ற மட்டும் உயிருடனும் உண்மையுடனும் அறிவிக்குக.

4. காலமுறைப்படியான சரித்திர உண்மைகள் தெரிந்தெடுத்து காலரேகைகள், (Time charts) கிராபுகள் வாயிலாக கால அறிவு நல்குக.

5. பிள்ளைகளுக்கு எற்கெனவே பற்றுதலுள்ள நடிப்பு, கைத்தொழில் முதலியவாயிலாய் அவர்களின் கருத்து வெளியிடலைப் பெருக்குக.

6. இறந்த காலத்தை எதிர்காலத்தோடு இணைக்கும் உரையாடல் முறையிலும் மனவலிமையை வளர்க்க முயற்சிக்க.

(4) சரித்திரம் கற்பிக்கும் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய யோக்கியதைகள்.

1. சரித்திர அறிவு—பிள்ளைகளிடம் பற்று—அவர்களது இயற்கையான விருப்பமும் வேண்டுகோளும் அறிதல்—நடுநிலையோடு சாஸ்த்ரீகமான மனத்தோற்றம்.

2. கற்பிக்கும் முறையைப்பற்றிய சரியான அறிவு, கதை சொல்லுமுறை, இடையூறுகளை நீக்குமுறை, பிராஜக்டு முறை, நாடகமுறை இவ்வாறு மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான முறைகளை வெற்றிபெறும்படிக் கையாளும் திறமை, சந்தர்ப்பத்திற்கொத்தவாறு போதனுமுறை உபயோகிக்கும் ஆற்றல், வர்ணனைத்திறன், தக்க உபகரணங்களை உபயோகிக்கும் வல்லமை, ஊக்கம், மகிழ்ச்சி ஏனைய விஷயங்களுடன் பொருத்திக் கற்பிக்கும் திறமைபோன்ற குணங்கள் வேண்டும்.

3. ஒரு சரித்திர உபாத்தியாயர் தான் படிப்பித்ததில் வெற்றி பெற்றதெவ்வளவென்று அறிய அடியிற் கூறும் திட்டங்கள் உதவியாயிருக்கும்.

1. ஒவ்வொரு பாடத்திலும் தனியான நோக்கம் எவ்வளவு நிறைவேறிற்று?

2. நிகழ்காலத்தோடு பொருந்தி நடைமுறையிலிருக்கும் சமூகத்திட்டங்களுக்கு அடிப்படையான நிலையில் பாட உண்மைகள் அறிவிக்கப் பட்டதா?

3. கற்பிக்கும் கால நிலைமைக்குப் பொருத்தமானவை தனது விஸ்தரிப்பினுலும் உபகரணங்களைக் கையாளுவதிலுமிருந்து பிள்ளைகள் அறிந்திருக்கிறார்களா?

4. விஷயத்தைச் சரியாய் ஒழுங்குபடுத்தி காலக் கிரம முறை, டாப்பிக்கல் முறை முதலிய முறைகளை ஆதாரமாகக் கொண்டு இனிமையாக அறிவிக்கப் பட்டதா?

5. ஒன்றிற் கொன்று இணைக்கப்பட்ட சரியான ஸ்தாபனத்திற்கு உதாரணங் கண்டுபிடிக்க முயற்சிக்கப் பட்டதா?

6. மறக்கமுடியாத உண்மைகளும், ஆண்டுகளும் கற்பிக்கவும், அவைகளை நினைவில் நன்ருயிருக்கும்படி போதனை நல்கப் பட்டதா?

7. மன எழுச்சியை உண்டுபண்ணும் முறைகள் கையாளப் பட்டனவா?

8. போதனையின் பயனுகப் பிள்ளைகட்கு வேலை செய்யவிருப்பமும் ஞாபகசக்தி வன்மையும் உண்டோ? பிராஜக்டு, நாடகம் முதலியன பயிற்சியுளதோ?

9. தானே படிக்கப் பயிற்சியும் நூற்கள் படிக்கும் பழக்க வழக்கமு முண்டோ?

10. சரித்திரப் புகழ்பெற்ற தலங்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றி சிறப்பாகக் கவனித்ததுண்டா?

11. பாடபுஸ்தகம் தவிர மற்று சரித்திர நூற்களும், வீட்டுப் பாடப்புஸ்தகங்களும் (உப பாடம்) உபயோகிக்கும் விருப்பம் பலனடைந்ததுண்டோ?

முற்கூறிய கேள்விகட்கெல்லாம் போதுமான மறுபடி நல்க ஒரு ஆசிரியருக்கு இயலவில்லை என்று வரலாம். என்றுலும் இவை நமது படிப்பிக்கும் முறையைத் தாமாகவே ஆராய்ச்சி செய்யவும், முன்னேற்ற வழிகளை ஆராயவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

(5) பாட ஆயத்தம்.

வெற்றிதரும் சரித்திரபாடத்தில் இருகாரியங்கள் அடங்கும்.

1. புத்தி சாலித்தனமான பாட ஆயத்தம்.

2. பலனளிக்கத்தக்க பாடம் கொடுத்தல்.

தெரிந்தெடுக்கும் உண்மைகளின் மேன்மையும் ஒழுங்குமான படிப்பித்தல்தான் பாட ஆயத்தத்தில் கவனிக்க வேண்டியவை.

சரித்திரம் மிக்க விரிவும்பல உண்மைகள் நிறைந்தவுமான ஓர் விஷயமன்றே. சரித்திர உண்மைகளை எளிய கடின நிலைக் கொத்தபடி இரண்டாகப் பிரிக்கலாம்.

1. தனிச்சிறப்பான உண்மைகள் (particular facts)

2. பொதுவுண்மைகள் (general facts)

பொதுவுண்மைகள் என்பன பல தனி உண்மைகளை ஆதார மாகக் கொண்ட அநுமானங்களோ விரிந்த கருத்துக்களோ ஆகும். ஸ்ரீமூலம்திருநாள் மன்னர் பிரான் காலத்தில் நாட் டிற்குப் பல நன்மைகள் ஏற்பட்டன. இக் காலத்தில் திருவாங் கூர் மிக்க முன்னேற்ற மடைந்தது. ஜனத்தலைவர்களுடன் ஒத்துழைக்க சட்டம் உண்டுபண்ணுவதில் பல சீர்திருத்தம் செய்தனர். கிருஷியும் கைத் தொழிலும் சீர்படுத்தப் பல ஏற்பாடுகள் செய்தனர். இதனால் நாட்டின் செல்வநிலை செழிப்பாயிற்று இக்கருத்துக்கள் பொதுவுண்மைக்குதார ணங்களாம். இவற்றை நன்கு விளக்க இவையிலடங்கும் தனி உண்மைகளை எடுத்தியம்புதலவசியம். பலவிதச் சீர் திருத்தங்களில் நிலவரி சம்பந்தமானவை, நீதி நியாயம் சம்பந்தமானவை, கல்விசம்பந்தமானவை என்று ஒவ் வொன்றையும் பிரித்து விளக்குவதற்கு அதிலுள்ள பிரத்தே கக் காரியங்கள் வேண்டும். இதற்கு எடுத்துக் காட்டாக கிருஷி யின் சீர்திருத்தத்தைப் பார்ப்போம். "மலை நாடுகளில் ரப்பர், தேயிலை முதலிய கிருஷி செய்ய பூமி பதிவு செய்து கொடுக் கப்பட்டது. கிருஷிகாது நன்மைக்காக ஸர்க்காரினின்றும் குளங்களும், கால்வாய்களும் வெட்டிக் கொடுத்தனர். வேம் பநாட்டுக்காயலோரங்களில் தண்ணீர் வற்றச் செய்து புஞ் செய்ப்பயிர் செய்வதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு வரி குறைத் துக் கொடுக்கப்பட்டது. வரி நெல்லாக வாங்கி வந்ததனுல் ஏற்பட்ட துன்பம் தொலைக்கச் சரியான அளவுத்திட்டம் அமைக்கப்பட்டது. துன்பம் நீங்கிற்று" இவ்வுதாரணத்தில் பல தனி உண்மைகள் இருக்கின்றன. இதனுல் சாதாரண ஜனங்களுக்குப் பொதுவான உண்மைகள்தான் உணரமுடி யும். பரந்ததும் அருவமும் ஆன கருத்துக்களைவிடத் திட்ட மும் உருவமும் ஆன கருத்துக்களுக்கு எளிமையும் தெளி வும் உண்டு. இத்தத்துவப்பாடம் ஆயத்தம் செய்யும்பொ ழுது தனிப்பட்டதும் திட்டமுமான உண்மைகளைத் தெரிந் தெடுக்கவேண்டும்.

சாதாரண மனிதனுக்கு அற்பமாய்த் தோன்றும் சில பொட்டுகளையும் வரைகளையும் எழுதித் திறமை மிக்க ஓவியக் கலைஞன் படத்திற்கு உயிரும் உண்மையும் அளிக்கின்றான். வெறும் ஔட்லைன்மட்டும் வரைந்தால் அவசியமான விளக்கம் கிடைத்தலரிது. அவ்வாறு கடினமான சரித்திர விஷயங்களைப் பிரகாசப்படுத்துவது அத்துடன் சேர்த்திருக்

கும் நுண்பகுதிகள் (details) அல்லது விளக்கங்களாகும். முக்கிய உண்மைகள் சரித்திரத்தின் எலும்புகூடும், நுண்பகுதிகள் அதன் அழகிய தசைப்பாகங்களுமாம். இத்தகைய நுண்பொருள் மனதினின்றும் விரைவில் மறைந்துவிடுமென்றாலும் இவை தெளிவான ஞாபகம் ஊட்ட உதவும்

பாடம் ஆய்த்தம் செய்யும் பொழுது கருத்துக்களின் சேர்ப்பை நன்றாக் கவனிக்க. ஒவ்வொரு பாடமும் ஒன்றோ பலவோ தலைமை ஸ்தானக்கருத்துக்களின் தொடர்ந்த வளர்ச்சி நோக்கிப் பிளான் செய்க. பாடங்கள் முற்றுப் பெறவேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் சிறந்த ஒரு பகுதியின் (டாப்பிக்கின்) லக்ஷண மிருத்தல் நலம்.

பாடத்தின் பிரத்தேகமான உண்மைகள் தெரிந்தெடுப்பதையும், ஒழுங்கு படுத்துவதையும், வெளிப்படுத்தும் முறைகளையும் அடக்கியாளும் பாடங்களில் கருப் பலகையின் உபயோகம், உதாரணம், மாணவர் கடமைகள் உபகரணம் உபயோகித்தல் முதலியன கவனித்துப் பாடம் ஆயத்தம் செய்க.

ஐவகைத்திட்டங்கள்.

கல்வித்திட்டத்தில் மாணவர்களின் சுய அபிவிருத்தியைவிட விஞ்ஞானம் பெறுதல் முக்கியம் என்று எண்ணின காலத்தில் ஹெர்பட் என்ற ஜெர்மன் மனசாஸ்திர பண்டிதர் அமைத்ததும் பிற்காலத்தில் அவர் போதனை முறைகளைக் கைப்பற்றிய சில பெரியார் சீர்திருத்திப் பூர்த்தி செய்ததுமானபாட ஒழுங்குகளை ஹெர்பார்ட்டின் ஐவகைத்திட்டங்களென்பர். கருத்துணரும் ஒழுங்குகளை மனசாஸ்திரச் சட்டப்படி வகுத்தமைத்த இந்த ஏற்பாட்டிற்குப் பாடத்தில் மிக முக்கியநிலையுண்டு. டூவி, கில்பாட்றிக் போன்ற தற்காலப் பெரும்பண்டிதர்கள் மாணவர்களின் எண்ணப்படியான சுய முயற்சியின் முக்கியத் தன்மை வெளியாக்கின உடன் எங்கும் எல்லோராலும் அறியப்பட்ட ஹெர்பார்ட்டின் செயல் முறைக்குக் குறை நேரிட்டது. பிராஜக்டு பிராபளம் (வருத்தம் குறைதல்) முதலிய சுய முயற்சிப் பாடங்கள் பொருத்தமற்றவையென்று டியூவி, வேறு சில திட்டங்கள் கூடச் சேர்த்ததுண்டு. ஹெர்பார்ட்டினுடையவும் டியூவினுடையவும் நிலைத்திட்டங்களை வெறும் இயந்திரம்போல அதன் பொருளை பின்பற்றுதல் அறிவுடைமையாகாது. ஒவ்வொருபாடத்தின் நோக்கமும் தன்மையுந்தான் இத்திட்

டங்களையும் முறைகளையும் நடாத்தவேண்டுவன. இவர்களது பாடநிலைத்திட்டங்கள் ஆசிரியர்களது பாடம் தயாரித்தலையும் பாடம் கற்பித்தலையும் துணைசெய்யும் என்பதற்கு ஐயமில்லை.

போதனை சாஸ்திரத்தில் நிலைபெற்ற புகழ்தேடிய ஹெர்பார்ட்டின் ஐம்பெருந்திட்டங்கள் சரித்திரப் பாடத்தில் எவ்விதம் கையாளலாமென்று ஆராய்வோம்,

(1) தயாரித்தல். (2) முன்வைத்தல் (3) வேற்றுமை ஆராய்தல் அல்லது ஒன்று சேர்த்தல் (4) தத்துவ உருவப் படுத்தல் (5) செயன் முறை என்பவைகளே ஹெர்பார்ட்டின் ஐவகைத்திட்டங்கள்.

எல்லா சரித்திரப் பாடங்களும் ஒரே அச்சில் வார்த்தெடுத்தது போல் இந்த ஐம்பெருநிலைகளான சட்டக்கூட்டிலடக்குவது எளிதல்ல. அவ்விதம் செய்தல் மூடத்தனமாகும். ஆனால் அதில் முதல் மூன்று பாகுபாடுகளும் பெரும்பாலும் எல்லா சரித்திரபாடங்களுக்கும். உபயோகிக்கலாம் சரித்திரத்திலிருந்து பொதுதத்துவங்கள் அமைப்பதற்கும் அவைகளை வாழ்க்கை வாலாற்றில் செயன்முறையிலாக்குவதற்கும் போதுமான திறமையோ புத்திவன்மையோ மாணவர்களுக்கில்லை. அன்றியும் ஆரம்பநிலையில் சரித்திர உண்மைகளிலிருந்து பொது தத்துவங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சி சிறிதும் பலனளிக்கக் கூடினவையுமல்ல.

சரித்திரப் பாடங்களுக்கு முகவுரைப் பாடம், முன்வைத்தல், கண்டறிதல் என்ற மூன்று திட்டங்களை மட்டும் வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது நல்ல செயன் முறையாகும். ஒன்றுமை வேற்றுமைப்படுத்தலும், சேர்த்துக் கற்பித்தலும், திருப்பிக்கற்பித்தலும். செயன் முறையும் எல்லா பாடங்களுடையவும் நிலையையொட்டி கண்டு படிப்பின் உட்பிரிவுகளாக அடங்கும். எல்லாத்திட்டங்களையும் எப்படியாவது பூர்த்திசெய்யவேண்டுமென்று தம்திறமையோடு பிடித்திழுத்து அலங்கோலப்படுத்தலாகாதென்பது மட்டும் கருத்திற் கொண்டாற் போதுமானது. இயற்கையாகப் பஞ்சநிலைத்திட்டங்களில் உட்படுத்த வருத்தமில்லாத பாடங்களை அவ்விதமே சேர்ப்பதில் குறையொன்றுமில்லை. ஹெர்பார்ட்டின் ஐவகை நிலைகளிலிருந்து விலைமதிக்கத்தக்க சில காரியங்கள் சரித்திர ஆசிரியருக்கு ஏற்றுக்கொள்ள முடியும்.

ஒரு விஷயத்திற்கு வரையறுத்திருக்கிற மிகவும் குறைந்த சமயத்தில் (ஒரு பீரியடில்). பூர்த்தி செய்யக்கூடின விதத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒற்றுமையும் முழுத்தன்மையும் உண்டாகுமாறு வரையறுத்திருக்கும் ஐவகைத்திட்டங்களே பாடக்கிரமம் கற்பிப்பதைத்திட்டமாக்கி, ஆசிரியர் பாடவிஷய எல்லையைக்கடவாமல் சரியானபடி வழி . காட்டுவது.

முகவுரை, (பீடிகை , பாடம் முன் வைத்தல், கண்டறிதல் என்ற மூன்று திட்டங்களாகிய ஹெர்பார்ட்டின் தத்துவங்களை அடியிற் கண்டவாறு கையாளலாம்.

முகவுரை. (பீடிகை)

ஒவ்வொரு சரித்திரப் பாடத்திற்கும் அதற்குப் பொருத்தமான முகவுரை பயன்படும். பாடம் வழியாக ஆசிரியர் மாணவர்களின் மனதில் உட்கொள்கிற உண்மைகளை ஏற்றுக் கொள்ள அவர்களைத் தயார் செய்வதாகும் இம்முகவுரையின் நோக்கம். புதிய பாடத்திலுள்ள கருத்துக்களை மனதிலாக்க அவசியமான முன் கருத்துக்களை உணர்த்தி அவைகளைக் கவனத்திற்குக் கொண்டுவரச் செய்வதுதான் இந்நிலையில் ஆசிரியரது முக்கிய வேலை. புதுக் கருத்துக்களை வருத்தமின்றி மனதிலேற்றி அவைகளை மனதில் பதிக்க அவசியமான பொருத்தமும் யோக்கியதையுமுள்ள முன்னறிவை மட்டுந்தான் தகுதியான கேள்விகளாலோ வேறு விதத்திலோ வரவழைக்கவேண்டியது. விதைப்பதன் முன் நிலம் பண்படுத்தவேண்டியது அவசியமானதுபோல் கற்பிப்பதற்கு முன் மாணவரின் மனத்தைப் பண்படுத்தவேண்டியது வெற்றிகரமான படிப்பிப்பின் முதல் வேலை.

கருத்து வெளியீடு :---முகவுரை கழிந்த உடன் பாடத்தின் தனிப்பட்ட நோக்கத்தை தெளிவாகவும், சுருக்கமாகவும் கூறுவது ஆசிரியருக்கும் மாணவருக்கும் ஒன்றுபோல் உதவியளிக்கும். கருத்து வெளியீடு மாணவர்களின் உற்சாகத்தைத் தட்டியெழுப்பப் போதுமானதால் அதையொட்டி கவனமும் மெய்ப்பாடும் உண்டாக வழியுண்டு. அன்றி அவசியமில்லாததும் பொருத்தமற்றதுமான பாகங்கள் பாடத்தில் வராமல் படிப்பிக்கும் விஷயத்தில் ஐக்கியமும் கால அளவும் குறைவின்றி காப்பதற்கும் கருத்து வெளியீடு உதவும். இது முகவுரையின் ஒரு பாகந்தான்,

பாடம் முன் வைத்தல்.

புதுப் பாடத்திலுள்ள கருத்துக்களை சரியானபடி ஒழுங்குபடுத்தி மாணவர்கள் மனதைக் கவர்ந்து அவர்கள் முன் பாடம் வைப்பதுதான் இந்நிலையில் செய்ய வேண்டிய வேலை. சரித்திர பாடம் மிக்கம் விஞ்ஞான உணர்ச்சி தரும் ஒன்றும். ஆதலால் ஆசிரியரின் கடமை புதுக்கருத்துக்களை,—கண்ணாடியிற் காட்டல் போல்—தெளிவாகவும் எளிதாகவும் வெளிப்படுத்துவதாகும். ஒரு ஆசிரியரின் முழுத்திறமை கழிந்தகால நிலைகளைப் பாட முன்வைத்தல் என்னும் கண்ணாடிவழி உயிருடன் பிரதிபலிக்கச் செய்வதிலாகும். ஓர் ஓவியனின் வர்ணப்பெட்டியிலுள்ள பலவித நிறங்கள் கொண்டு சித்திரத்திற்கு செயற்கையழகும் உயிருமளிப்பது போல் ஆசிரியரும் தம் கையிலுள்ள உபகரணங்கள், படங்கள், பூபடங்கள், ஸ்கெச்சுகள் முதலியன உபயோகப்படுத்தி பாடத்திற்கு உயிரும் அழகும் கொடுக்கவேண்டும்.

உற்றுப் பார்த்தறிதல்.

இதுதான் அடுத்தபடி: கருத்துக்களை நீட்டாமல் சுருக்குவதுதான் இதன் முக்கிய லட்சணம். ஒற்றுமை வேற்றுமையறிதல், தத்துவ ஒழுங்குபாடு, செயன்முறை என்ற பிரிவுகள் முறையாக இதற்கு உதவும் பாடத்தில் முன்வைத்த கருத்துக்களை பொருந்துமாறு அறிந்து உண்மையைச்சுருக்கி வேறுபாடு கண்ட பின் அதற்குத்தக்கதத்துவ ஒழுங்குபாடு செய்வதாம். அத்துடன் பாடத்தை நடத்த பயனாகவிருந்த பல கருத்துக்களையும் சுருக்கி உணர்த்தலாம். இத்துடன் கற்பித்தல் முடிவுற்றாலும், மாணவர்களின் அறிவுச் சக்தி நிறைவுற ஆசிரியர் முயர்சிக்க வேண்டும். மனதிற்குள்ள கருக்தொழுக்கு முற்றுப்பெற மனதின் எதிர்வேலை செய்யும் நிலை அவசியமென்று மனோதத்துவசாஸ்திரபண்டிதர் கூறுவர். கருத்து வெளியிடல் கருத்துணர்தலையும், கருத்துணர்தல் கருத்து வெளியீட்டையும் தொடர்ந்து சென்று ஞாபகத்தை உறுதிப்படுத்துகிறது. உணர்தலில்லா வெளியீடும் வெளியீடில்லா உணர்தலுமில்லையெனும் சட்டப்படி உணர்தலுக்கு வலிமையும் தெளிவும் நல்க மாணவர்க்குக் கருத்து வெளியிட வசதியளிக்க வேண்டும். இதற்கேற்ற சந்தர்ப்பம் ஆவர்த்தனையும் பயனும் எனும் இறுதிநிலையே.

விடைகள், விரிவுரைகள், வாதப்பிரதிவாதம், படம் வரைதல், கைவேலைகள் போன்ற பயிற்சிகளால் இது நிறைவேறும். பாடத்தில் விளக்கிய பற்பலக்கருத்துக்களின் சுருக்கமும் ஆட்சியுமே சுற்றுப் பார்த்தல் நிலையின் திட்டங்களென்ப.

போதனாமுறை

ஆரம்பப்பள்ளியில் பெரும்பாலோரும் இச்சொல்லிக் கொடுக்கு முறையைத்தான் கையாள்வர். ஆதலால் அதைப் பற்றி மட்டும் கூறுவோம்.

சரித்திரபோதனை வெற்றிபெறப் பலமுறைகளுள. அவைகளில் முக்கியமானவை சொல்லிக்கொடுத்தல் அல்லது பிரசங்கமுறையும் புத்தகமுறையுமாம். ஆசிரியரின் வாய்மொழிப்பாடத்தை ஒட்டியது பிரசங்கமுறையும், பாடப்புத்தகத்தை ஒட்டியது புத்தகமுறையுமாம். ஆரம்பவகுப்புக்களில் சொல்லிக்கொடுக்கல் முறை மேன்மையானதே. மேல் உயர உயர பாடப்புத்தகமுறையும் கையாளலாம். உயர்ந்த நிலையில் வந்தவுடன் பாடப்புத்தகமுறைக்குத்தான் உயர்வென்றாலும் சொல்லிக்கொடுக்கும் முறையும் அதைப்போல் அவசியந்தான்.

ஆரம்பமுதல் உயர்ந்த வகுப்புவரைப் போதனாமுறையின் அபிவிருத்தியையொட்டி நன்மாதிரி சொல்லு முறையில் பலமாதிரிகள் கையாளலாம். கற்பித்தல் (சொல்லிக்கொடுக்கல்) முறை பரந்ததும் பொதுவானதுமான ஒருமுறையாகும். அதனுடைய செயல் முறைகளின் மாதிரிகளை வேறுபட்டமுறைகளாக எண்ணலாம். சொல்லல், வருத்தமின்றி கற்பிக்கும் பிராஜெக்ட், சொற்பொழிவு, ஒற்றுமை வேற்றுமைப்படுத்தல், டாபிக்கல் (அத்தியாயம்) டைப் (வகுப்பு) நாடகமுறை என்ற பலவித முறைகள், இதிலடங்கும். இவைகளில் ஏதேனும் ஒன்று மேன்மையாம், யாவரும் ஒப்புக்கொள்வதும், ஏற்றுக்கொள்வதும், பின்பற்றுவதும் என்று கூறுவதற்கில்லை. விஷயத்தின் தன்மையையொட்டி ஆசிரியரின் சௌகரியம்போல் இவைகளில் ஏதேனும் ஒரு முறையை நிலையாகவோ பல முறைகளைச் சேர்த்தோ கையாளலாம்.

சொல்லிக் கொடுக்கு முறை.

பாடப்புத்தகங்களும், மற்று உபகரணங்களுமெல்லாம் வெறும் உயிரற்ற பொருட்கள். கழிந்தகால நிகழ்ச்சிகளும், உண்மைகளும், சரித்திர பாத்திரங்களும் உயிருடன் விளங்கினவை. அதனால் வெறும் என்புக்கூடும் உயிரில்லாததுமான சரித்திர உண்மைகளே ஆசிரியர் முன்வந்திருப்பவை. மந்திரவாதியின் கோல் உயிரற்ற பொருகளுக்கு உயிரளித்து அவைகளைத்துள்ளிச் சாடச்செய்வதுபோல் ஆசிரியரின் சொல்லுமுறை சரித்திர உண்மைகளுக்கு உயிர் கொடுத்து அவைகளின் என்புக் கூட்டுக்கு மாமிசத்தை யுண்டு பண்ணைச்செய்து, வரண்ட தன்மையை இளக்கி விடும் தன்மையிலமையவேண்டும். ஆசிரியரின் உயிரோடு கூடின சத்தம், பாவனை, பின்பற்றல், செய்கை முதலிய குணங்கள்தான் போதனைக்கு உயிரளிப்பன. இவைகளெல்லாம் சத்தமாத்திரமான சொல்லும் முறையிலடங்கும்.

நடைபெறாத காரியங்களைச் சங்கற்பித்து உண்டுபண்ணுவது கட்டுகதைகளும், உண்மையாக நடந்த காரியங்களைச் சேர்த்து உண்டுபண்ணுதல் உண்மைக்கதைகளுமாகும். சரித்திரம் உண்மைக்கதைகளின் கூட்டு என்று இதிலிருந்து அறியலாம். இந்தக்கதைகளைக் கற்பிப்போனே ஆசிரியன். சொல்லுமுறையின் வெற்றி ஆசிரியரின் கதைசொல்லு முறையைத்தான் பெரும்பாலும் பொறுத்திருக்கிறது.

இன்பமும், மனக்கவர்ச்சியுமான கதை சொல்லுவதற்கு சில விசேட குணங்கள் இன்றியமையாததாகும். விரிவானதும், நிலையானதுமான அறிவிலிருந்து பிறக்கிற வாக்குவல்லமையும், நயமும், இன்பமும் இவ்வளவென்று எடுத்துக் கூறல் முடியாது. அதனால் ஆசிரியரின் சொல்லுமுறை வெற்றிபெற முதறபடி ஆசிரியரின் சரித்திரஞானச் செல்வமாகும். ஆசிரியரின் மொழிப்பயிசியும், மனோகரமான வர்ணனைகளும், எளிதான சொற்றிறனும் மனக்கவர்ச்சியான முன்வைத்தலும் போதனு முறைகளை நன் மாதிரியில் கொணரச் செய்யும். கற்பிக்கிற விஷயங்களைப்பற்றி ஆசிரியருக்குத் தெளிவான முழுஅறிவு இருந்தால் மட்டுமே சொலலுமுறை எதிர் மறுப்பில்லாத இனிமையை யூட்டும். மாணவர் களிடம் உணர்ச்சியும் கவனமுமூட்ட இது மிகவும் உபயோகமாகிறது.

சொல்லும் முறையில் மொழிப் படங்கள் மூலம் தெளிவான கருத்துருவங்களை இயறறவேண்டியதாகிவிடும். இதனை வர்ணனைத்திறன் கொண்டே காட்ட முடியும். நுண்மதி பெற்ற ஓர் ஓவியன் வர்ணங்கள் கொண்டு தீட்டி நேடும் திறமையை ஆசிரியர் வாக்கு வர்ணனைகளால் தேடுகிறார். ஒரு ஓவியன் முதலில் சில கோடுகள் வரைந்து (ஔட்லைன்ஸ்) பின்முடிவில் படத்தை நிரப்பிட்டு ஜீவன் வருவிப்பது போல் ஆசிரியரும் முதலில் விஷயத்தையொட்டி பொதுப்படையான ஒரு அறிவு கொடுத்தபின் சூக்குமப் போக்கை ஒழுங்குபடுத்தி அவ்வப்போது காட்டி மாணவர்களின் மன உருவங்களை ஆசிரியரின் பாடப்படத்தில் பூர்த்தி செய்யவேண்டும்.

மாணவர்களின் மனோசக்தியைப் பற்றின சரியான அறிவும் சொன்முறை வெற்றிக்கு இன்றியமையாததாம். மாணவர்கள் எளிதிலுணரும் பாஷையைக் கைக்கொள்ள வேண்டியது அவசியம். ஆசிரியரும் மாணவனும் உபயோகிக்கிற பதங்கள் அதிகமும் ஒன்றாக இருந்தாலும் இருவர்களின் மனதில் தோற்றுவிக்கும் பொருள் மாறுபட்டிருக்கும். அதனால் வகுப்பின் பொதுவான பாஷை அறிவைச் சரியாக மனதிலாக்கி அதற்குத்தக்கப்படி மொழிவதே சொன்முறை வெற்றிக்கு பயன்தருவது.

பாடவிஷயத்துக்கும், சொல் முறைக்கும் பொருத்தமான பாஷையை உரைக்குந்திறனும், பாவனையும், இயற்கையும், ஆசிரியருக்கு வேண்டும். பாட விஷயத்தின் தன்மையையொட்டி நேர் முறையான அழகிய நிலையை ஆசிரியர் ஏற்றுக்கொள்ளவேண்டும். பாடத்தில் தானே ஆனந்தித்து நாடகமுறையான தனியின்பத்திலாழ்ந்து கதை சொன்னால் உண்மையும், அழகும், இன்பமும் தானே பின் தொடர்ந்து வருமென்பதில் ஐயமில்லை. நற்சுவையோடு நன்மொழி புகறல் கலைவல்லுநரின் திறமையாகும். கலை நிறைந்த அறிவோடுகூட நடத்துமுறையே இங்கு ஆசிரியருக்கு உதவியளிப்பது.

கதை சொல்வதால் மட்டும் சொன்முறை முற்றுப்பெறுது. சரித்திரபூர்வமான விஞ்ஞானம் புகட்டல் போதனையின் ஒரு விசேடமன்றோ! உயர்ந்த வகுப்புக்களுக்கு வர வர இந்த எண்ணங்களுக்கு ஒழுங்கான திறமை அமைய

வேண்டும். ஆதலால் இந்த எண்ணத்தை முன்வைத்து அதற்கேற்ற போல் போதனுமுறைகளும் விசேட காரியங்களும் ஆசிரியர் கையாளவேண்டும்.

பாடம் முழுவதும் சொல்வதாலோ கதைகூறி முடிப்பதாலோ அது சொன்முறையாகாது. புத்திகூர்மையானதும், ஆழ்ந்த சிந்தனைகளையெழுப்புவதுமான வினக்கள் சொன் முறையின் ஒரு இலக்கணமாகும். கேள்விகளின் எண்ணிக்கையும் சந்தர்ப்பங்களும் திட்டப்படுத்தவேண்டியது விஷயத்தின் தன்மையையும் சொல்முறையையும் ஒட்டியதாகும். கரும்பலகை, பாடப்புத்தகங்கள், பூபடங்கள், சித்திரங்கள் நோட்டுகள், வேறு மாதிரியான அப்பியாசங்கள், செயன் முறையாற்றும் வேறுபரிசீலனைத் திட்டங்கள் என்ற விதமான பொதுவான போதானுமுறை உதவிகள் சொன்முறை வெற்றிக்கு ஏற்றுற் போல் கையாளவேண்டும்.

சொன்முறையிலுள்ள பாடங்களை ஒழுங்குபடுத்தல்.

சொன்முறையிலுள்ள பாட ஒழுங்கீடு—முகவுரை, பாடம் முன்வைத்தல், உற்றுப் பார்த்தறிதல் என்ற பெர்து தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தவேண்டும். ஒவ்வொரு பாடமும் திட்டமானதும் வரையறுக் கப்பட்டதுமான ஒரு முழுநோக்கத்துடன் (யூனிற்று) இருக்கவேண்டும். ஒவ்வொரு யூனிற்றிலும் தலைமையான ஒரு கருத்திருத்தலவசியம் வேண்டும். இக்கருத்தை இயற்கையான காலநிலைகளாகப் பகுத்து காரியகாரணத் தொடர்பால் ஒவ்வொன்றையும் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு நிலையும் ஆசிரியர் தெளிவாகக் கற்பித்தபின் மாணவர்களைக் கொண்டுத் திரும்பச் சொல்லச் செய்யவும். அதன் சுருக்கம் கரும்பலகையில் எழுதவும் வேண்டும். இந்தக் கரும்பலகைச் சுருக்கம் பின்வரும் பாடத்திற்கு உதவுவதும் கடைசியான உற்றறிதலின் அடிப்படையுமாக இருக்கவேண்டும்.

சொன்முறையில் பாடத்தின் வெளியீடு பூர்த்தியானல் அடுத்தபடி மாணவர்களின் உற்றுப்பார்த்தறிதலுக்கு நடத்துதலாம். இந்நிலையில் முக்கியமானது பரிசோதனையானதால் ஆசிரியர் முயற்சி கூடுமானவரை குறைத்து மாணவர்கள் கருத்தை வெளியிட வசதியளிக்கவேண்டும். ஆசிரியர் பாடஅரங்கிலிருந்து மாறிமாணவர்களை அரங்கத்தில் கொண்டு

வரவேண்டும். இந்நிலையில் மாணவர்களின் கடமை நிறை வேற்ற ஆசிரியர் ஆத்திரப்படலாகாது. அவசியமான கேள் விகளைக் கேட்பதும் பிழைகளைத்திருத்தவும் மட்டுமே செய்ய வேண்டும். வாய்மொழியை விட மௌனமாகவும் விவர ணத்தைவிடச் சுருக்கமாகவும் இந்நிலையில் பெறவேண் டும். பாடம் முழுவதும் மாணவரைக் கொண்டு சுருக்கமாகச் சொல்லச் செய்வது நலம். முதலின் திறமைவாய்ந்த ஒன்ருே இரண்டோ மாணவர் களைக் கொண்டும் பின் சாதாரண மாணவர்களைக் கொண்டும் திரும்பச் சொல்லச்செய்க. அதுவே அதிக நன்மைபயக் கும். மாணவர்களிடத்திலுள்ள பிழைகளை இந்நிலையில் கவனித்து மற்றவர்களைக் கொண்டு திருத்துவது நன்முறை யன்ருே. அவசியமானுல் மட்டும் ஆசிரியர் இதில் தலையி டவேண்டும். மாணவர்கள் சொன்ன பிறகு அதிக விஸ்த ரிப்பு வேண்டுமென்ற பாகங்களைத் திரும்பவும் சுருக்கி தெளி வாக்க ஆசிரியர் முயற்சி செய்யலாம். பாடமுடிவில் பாடச் சுருக்கத்தை நோட்டுப் புத்தகத்தில் மாணவர்களைக் கொண்டு எழுதியெடுக்கக் கட்டாயப் படுத்தி பாடத்தை ஒட்டின அப்பி யாசங்கள் கொடுக்கவும் வேண்டும்.

சுருக்கக் கூறுமிடத்து உத்தமமான சொன்முறை அடி யிற் கூறும் ஆறு உறுப்புக்களிலடங்கும்.

1. வாய்மொழிதல்.
2. தெளிவுபடுத்தல்.
3. விளுவிடைகள்.
4. கரும்பலகைச் சுருக்கம்.
5. பாடப்புத்தக உபயோகம்.
6. மாணவர்களுக்குரிய அப்பியாசங்கள்.

சரித்திரம்.

ஆரம்பப் பாடசாலையில் சரித்திரம் கற்பிப்பதற்கு உதவியளிக்கும் ஸிலபஸ்.

குறிப்பு :---ஒன்றும் இரண்டும் வகுப்புக்களில் சரித்திரத்துக்குத் தனி பீரியட் வைக்கவில்லை. அங்கே ஏனைய விஷயங்கள் வாயிலாகப் புராண இதிகாச கதைகளில் தொடங்கலாம்.

வகுப்பு 3---45 பாடங்கள்.

A. புராண கதைகள் :—கேரள நாட்டுப் புராண கதைகள், பாரத நாட்டுப் புராண கதைகள், உலகம் புகழ் புராண கதைகள்.

1. கேரள நாட்டுப் புராண கதைகள் :—பரசுராமன், சேரமான்பெருமாள், மகாபலி போன்றவர்.

2. பாரதநாட்டுப் புராண கதைகள் :—வான்மீகி, ஸ்ரீராமர், வியாசர், தருமர், துருவன், நளன், தமயந்தி, சாவித்திரி, வீமன், விக்கிரமாதித்தன், பிரகலாதன் முதலியோர்.

3 உலகம் புகழ் புராணகதைகள் :—ஜேஸன், ஹெர்குலிஸ், ரோமுலஸ், ஆர்தர், ரோபின்ஹுட், ரீமஸ் முதலானவர்கள்.

B. சரித்திரக் கதைகள் :—

1. கேரள சரித்திரத் தலைவர்கள் :— குலசேகராழ்வார், ஹென்று தாமஸ், சங்கராச்சாரியார், எழுத்தச்சன் ஆகியோர்.

2. பாரதநாட்டுச் சரித்திரத் தலைவர்கள் :—(பண்டைக்காலமும் நடுக்காலமும்) புத்தர், அசோகர், ஹர்ஷன், சாந்துபீபி முதலியோர்.

வகுப்பு 4---60 பாடங்கள்.

A. ஆதிமனிதரின் கதைகள்.

B. தாய்நாட்டுச் சரித்திரக் கதைகள்.

உதாரணம் :—இரவிவர்ம, குலசேகரர், இரவிக்குட்டிப்பிள்ளை, மார்த்தாண்டவர்மா, சுவாதி திருநாள், ஸ்ரீமுலந்திருநாள்.

C. பாரதநாட்டுச் சரித்திரக் கதைகள் :— (பண்டைக் காலமும் நடுக்காலமும்) சந்திரகுப்தன், சாணக்கியன், பிருது விராஜ், ராணாபிரதாபசிம்மன், சிவஜி, கிளைவ், பாபர், ஹுர்ஜ ஹான் போன்றவர்கள்.

D. உலக ஆசிரியர்களும் உலக உபகாரிகளும்.

1. ஸ்ரீகிருஷ்ணன், இயேசுநாதர், முகம்மது நபி.

2. வில்லியம்டெல், ஜோவான் ஆப் ஆர்க், ஆல்பிரட், ஜார்ஜ் ஸ்டீபன்ஸன், கன்பியூஷியஸ் முதலியோர்.

3. வராஹமிஹிரன், நாகார்ஜுனன், காளிதாஸன்.

வகுப்பு 5---75 பாடங்கள்.

A. திருவாங்கூரின் பொதுச் சரித்திரம் கற்பிப்பதற்கு தேர்ந்தெடுத்த ஏற்ற கதைகள்.

பண்டைக்காலக் கேரளம் :--சேரவம்சம், மத்தியகாலம், வேணாடு, தேசிங்கநாடு, காயங்குளம், வடக்கங்கூர் முதலியன.

தற்காலம் :— அனுஷம் திருநாள் மார்த்தாண்டவர்மா, போர்த்துகேசியர், டச்சுகாரர், ஆங்கிலேயர், இராமையன் தளவாய், தருமராஜா, இராஜாகேசவதாஸ், வேலுத்தம்பி, கௌரிலட்சுமிபாய், விசாகம்திருநாள். இராஜா ஸர் டி. மாதவராயர், ஸ்ரீ மூலந்திருநாள், ஸ்ரீ சித்திரைத்திருநாள்.

B. தற்கால இந்திய சரிதத்தில் பொதுவான அறிவு பெறத்தக்க தேர்ந்தெடுத்த கதைகள்.

இந்தியா சரிதத்தில் இடைக்காலமும் தற்காலமும்.

உதாரணம் :—ஔரங்கசீப், ஆங்கிலேயர் இந்தியாவைப் பிடித்தது, வாறன் ஹேஸ்டிங்ஸ், கோகலே, பானர்ஜி, தாகூர், காந்திஜி, ஜவஹர்லால், சரோஜினிநாயுடு, இக்கால இராஜப் பிரதிநிதி வேவல் பிரபு, ஆறுவது ஜார்ஜு சக்கரவர்த்தி.

C. தற்கால உலக சரிதத்தைப்பற்றி பொது அறிவு பெறத்தக்க சில கதைகள்.

சான்றுகள் :—பிரஸிடன்று ட்ருமான், சர்ச்சில், ஸ்டாலின், ஹிட்லர், ஷியாங் கைஷெக், உலகப் பெரும் போர்கள், லூயி பாஸ்டர், எடிஸன், மார்க்கோணி, இரைட் சகோதரர்கள், கிராம்பெல்.

பாடம் 1.

படம்
ட ட்
ப ப்
ம ம்

பட பட	மடம்
மட மட	பட்டம்
டம் டம்	பப்படம்

பாடம் 2.

மரம்
ர ர்

பர பர	பம் பம்
ரப்பர்	பம்பரம்

பாடம் 3.

சரம்

ச் ச

சரி சரி	சட ச்ட
ரசம்	சமம்
சட்டம்	சப்பரம்

பாடம் 4.

சக்கரம்

க க்

கடகம்	கக்கம்
கட்டம்	பக்கம்
கட்டடம்	கம்பம்

பாடம் 5.

தட்டம்

தத்

கதர்	தகரம்
பதர்	சத்தம்
தடம்	பதக்கம்

பாடம் 6.

நகம்

நந்

நட	நகரம்
நட்டம்	தந்தம்
நம்பர்	பந்தம்

பாடம் 7.

கப்பல்

வல்

கடல்	பகல்
மடல்	கம்மல்
மலர்	பந்தல்

பாடம் 8.

வடம்

வவ்

வலம்	வல்லம்
வட்டம்	நல்லவர்
வடகம்	வல்லவர்

பாடம் 9.

கலயம்

ய ய்

பயம்	சமயம்
நயம்	மயக்கம்
வயல்	பந்தயம்

பாடம் 10.

வள்ளம்

ள ள்

களம்	மக்கள்
கவளம்	கம்பளம்
பவளம்	மத்தளம்

பாடம் 11.

மரகதம்	கல் மடம்
சம்பளம்	மரக் கலம்
சல்லடம்	வலப் பக்கம்
பட்ட மரம்	பள்ள வயல்
வட்டக் கல்	கள்ளர் பயம்
பட்டப் பகல	ரப்பர் மரம்

பாடம் 12.

சன்னல்

ன ன்

மனம்	கன்னம்
கனம்	தகப்பன்
கடன்	வந்தனம்

நந்த வனம்

சந்தன மரம்

நம் மன்னன்

பாடம் 13.

கண்

ண ண்

பணம் பண்டம்

மணல் வண்டல்

கவண் மண்டபம்

மலர் மணம் வலக் கண்

கடல் மணல் மண் கலயம்

கண்ணன் படம்

பாடம் 14.

பழம்

ழ ழ்

பழக்கம் வழக்கம்

தவழ்தல்

பழ மரம்

பளம் பழம்

பழம் பண்டம்

பழக்க வழக்கம்

பாடம் 15.

பற்கள்

ற ற்

கற்கள் கற்றவர்

வற்றல் மறத்தல்

கறக்கம் பதற்றம்

கடற் பக்கம்

வற்றல் வடகம்

பாடம் 16.

மரங்கள்

ங ங்

தங்கம் கலங்கல்

மங்கல் பங்கசம்

சங்கம் சங்கடம்

பல மடங்கள்

தங்கப் பதக்கம்

பாடம் 17.

மஞ்சள்

ஞ ஞ்

பஞ்சம்	கஞ்சன்
மஞ்சம்	வஞ்சகன்

சப்பர மஞ்சம்

பஞ்ச வர்ணம்

பாடம் 18.

க்		க
ங்	மங்களம்	ங
ச்		ச
ஞ்	சங்கரன்	ஞ
ட்		ட
ண்	கண்டசரம்	ண
த்		த
ந்	வண்டல் மண்	ந
ப்		ப
ம்	மலர்ப் பந்தல்	ம

ய்	ய
ர்	ர
ல்	ல
வ்	வ
ழ்	ழ
ள்	ள
ற்	ற
ன்	ன

கள்ளங் கபடம்

தங்கச் சப்பரம்

பரதன் நல்லவன்

பாடம் 19.

அன்னம்

அ

அவன்	அப்பம்
அவள்	அப்பளம்
அவல்	அஞ்சல்
அரம்	அம்பலம்

அரச மரம்

அக்கம் பக்கம்

அண்ணன் அழ்கன்

அரசர் நல்லவர்

பாடம் 20.

ஆல்

ஆ

அண் ஆலயம்
ஆரம் ஆபரணம்
ஆழம் ஆனந்தம்
ஆட்டம் ஆண்டவர்

ஆலம் பழம்
ஆம்பல் மலர்
கடல் ஆழம்

பாடம் 21.

இலை மரம்

இ

இவன் இரவல்
இவள் இரக்கம்
இடம் இன்பம்
இதழ் இறக்கம்

இளவரசன்
இடப் பக்கம்
மலர் இதழ்

பாடம் 22.

ஈக்கள்
ஈ

ஈர்	ஈசல்
ஈரம்	ஈரல்
ஈயம்	ஈறல்

ஈர மணல்
ஈச்ச மரம்
ஈக்கள் பறந்தன

பாடம் 23.

உரல்
உ

உரல்	உச்சம்
உரம்	உறக்கம்

உலகம் உத்தரம்
உயரம் உழவன்

கல் ஊல்
உப்பளம்
உண் கலம்
உடல் நலம்

பாடம் 24.

ஊஞ்சல்
ஊ

ஊர் ஊமன்
ஊன் ஊக்கம்
ஊண் ஊட்டம்

ஊர் வலம்
ஊர் அம்பலம்
ஊசல் பண்டம்
ஊஞ்சல் ஆட்டம்

பாடம் 25.

எள்

எ

எவன்	என்
எவள்	எச்சம்
எவர்	எத்தனம்

கந்தன் என் அண்ணன்.
அந்த மரம் என்ன மரம்?
உங்கள் ஊர் எந்த ஊர்?

பாடம் 26.

ஏர்

ஏ

ஏலம்	ஏப்பம்
ஏனம்	ஏந்தல்
ஏக்கம்	ஏற்றம்

ஏத்தம் பழம்
ஏன் இந்தப் பயம்
மனம் உள்ள ஏலம்

பாடம் 27.

ஐவர்

ஐ

ஐயர் ஐங்கரன்

ஐயம் ஐயப்பன்

ஐயர் வந்தனர்

ஐவர் அரசர்

ஐயம் இட்டனர்

பாடம் 28.

ஒட்டகம்

ஒ

ஒப்பம் ஒக்கல்

ஒற்றல்·

நல்ல ஒப்பந்தம்

ஒற்றல் இட்டனர்

உன் ஒட்டகம் உயரம்

பாடம் 29.

ஓட்டம்

ஓ

ஓமம்	ஓடம்
ஓரம்	ஓணம்

கடல் ஓரம்
ஓர் ஒட்டகம்
பந்தய ஓட்டம்
ஓர் ஊஞ்சல்

பாடம் 30,

ஔடதம்

ஔ

நல்ல ஔடதம்

அ	ஆ	இ	ஈ
உ	ஊ	எ	ஏ
ஐ	ஒ	ஓ	ஔ

பாடம் 31.

உற்சவம்
ஆடம்பரம்
ஏற்றம் இறக்கம்

ஓர் ஏர் உழவன்
ஆல மரம் படர்ந்த மரம்
ஐயம் இட்டவர் நல்லவர்
பல மரங் கண்ட தச்சன்
இளவரசர் இரக்கம் உள்ளவர்
சங்கரன் மகன் ஐங்கரன்
ஊக்கம் உள்ளவர் உலகம் ஆள்வர்

பாடம் 32.

ஆ
ா
கா
ஙா
சா
ஞா
டா காகம்

தா	சாயம்	மான்
நா	ஞாபகம்	தாரா
பா	தாயார்	பலா
மா	நாடா	வாய்
யா	பாலம்	காளான்
ரா	தபால் காரன்	உழாத வயல்
லா		
வா	காயா பழமா	
ழா		
ளா	பாப்பா! அழாமல் வா	
——	அக்காள் தாலாட்ட வந்தாள்	
——		

பாடம் 33.

ஓ
ெ
ணா
றா
னா

ஓணான்

இறால்	மாமனார்
கனா	வற்றாத கடல்
மாணாக்கன்	வனாந்தரம்

அண்ணா! பலாப் பழம் தா,
இராமன் பாடம் கற்றானா?
தாத்தா பத்தணா இனாம் தந்தார்.

பாடம் 34.

இ
ி
கி
யி
சி
ஸ்ரீ
டி
ளி
தி
தீ

கிளி

சித்திரம்	மயில்
கடிகாரம்	அரிசி

பி	அணில்	எலி
மி	நிலா	விசிறி
யி	தம்பி	வழி
ரி	அம்மி	உறி
லி		
வி		
ழி		
ளி		
றி		
னி		

கனி

ஆனி ஆடி மாதங்கள்.
மணி என்ன ? கடிகாரம் பார்.
வண்டி வழியில் நிற்கிறதா?
தம்பி பள்ளியில் படிக்கிருன்.

பாடம் 35.

ஈ
டீ
கீ
ஙீ
சீ
ஞீ
டீ
ணீ

மீன்

தீ

நீ	கீரி	பீங்கான்
பீ	சீனி	மதியீனம்
மீ	தண்ணீர்	சரீரம்
யீ	தீவட்டி	லீலாவதி
ரீ	நீலம்	வீதி
லீ	பன்னீர்	

வீ
ழி சீனி இனிப் பான பண்டம்.
ளி லில்லி சங்கிதம் படிக்கிருள்.
றி அக்காள் அரிசி தீட்டினுள்.
னி இவ்வீட்டின் நீளம் வீதி என்ன?
நீங்கள் யாரிடம் படிக்கிறீர்கள்.

பாடம்,36

சலாம்	ஒட்டியாணம்
சினிமா	தனிவழி
கிரீடம்	பிடிசாதம்
தீபாவளி	காய்கறி
இளநீர்	பள்ளிவாசல்
காற்ருடி	மயில் விசிறி
நாற்காலி	மணிச் சட்டம்

ஆசிரியர் பாடம் கற்பித்தார்,
சிவராமன் ஆற்றில் நீந்தினுன்.
மயிற் பீலியால் விசிறி கட்டலாம்.
மீன் தண்ணீரில் வசிக்கும் பிராணி.
மாமனுர் நார்க்கட்டிலில் உறங்கினுர்.
கல்யாண வீட்டில் சந்தனம் பன்னீர் தந்தார்கள்.

பாடம் 37

உ
ு
கு
டு
மு
ரு

குரங்கு

மூ
ளு

ஆடு	குருவி
முகம்	கழுகு
முக்காலி	அழுக்கு முண்டு
எழுத்தாணி	முரட்டுமனிதன்
மருமகன்	கருங்குரங்கு

முருகன் ஓர் உழவன்.
கருடன் வட்ட மிடும்.
எழுத்தாணியால் ஏட்டில் எழுதலாம்.

பாடம் 38.

உ
|
ஙு
சு
பு

ு
ஞு
ணு
[illegible]
நு
லு
று
ளு

பசு

வு
யு

கரும்பு	நுங்கு
கதவு	எலும்பு
யுத்தம்	எறும்பு

கனு கன்று
பந்து காற்று

புனுகு

துள்ளுமறி புல்லாங்குழல்
புதுச்சுளகு மூத்துப் பல்லக்கு
ஊறுகாய் குறுந்தடி

மாடு புல் தின்னும்.
மயிலிறகு மிக அழகு.
நாலும் இரண்டும் ஆறு.
அம்பும் வில்லும் ஆயுதங்களாம்.

பாடம் 39.

ஊ
உ
ழ்
கூ
ஜு
பூ
ழு கூடு
ழூ பூட்டு வாரியூர்
பழவூர்

கூனன் பூம்பந்தல்
கூவரகு தாம்பூலம்
பள்ளிக்கூடம் பூசனிக்காய்

அப்பா! பூட்டும் சாவியும் தாருங்கள்.
ஆட்கள் கூட்டங் கூட்டமாய் நிற்கிறார்கள்.
கூழானாலும் குளித்துக் குடி.
வாரியூரில் உப்பளம் இருக்கிறது.
பாகவதர் தம்பூர் மீட்டினார்.

பாடம் 40.

ஊ		ூ
ூ		ஞூ
கூ		ணூ
சூ		தூ
டூ		நூ
மூ		லூ
ரூ		றூ
யூ	தூண்	னூ
ளூ		

சூரியன்	பூணூல்
குண்டூசி	தூண்
மூக்கு	நூல்
ரூபாய்	நல்லூர்
கீழூர்	சிற்றூர்
உள்ளூர்	நன்னூல்

தூக்கு விளக்கு எரிகிறது.

கமலம் நூல் நூற்கிறாள்.

சுந்தரி கூந்தலில் பூச்சூடினாள். வாங்கியது.

இந்த மூக்குத்தி நூறுரூபாய்க்கு

என்வீடு கூப்பிடு தூரத்தில் இருக்கிறது.

பாடம் 41.

எ
ெ
கெ
ஙெ
செ
ஞெ
டெ
ணெ
தெ
நெ
பெ
மெ
யெ
ரெ
லெ
வெ
ழெ
ளெ
றெ
னெ

பெட்டி

செவி	நல்லெண்ணெய்
சுண்டெலி	எழெட்டு
தெங்கு	வெள்ளொலி
நெற்றி	சிற்றெறும்பு
மெழுகு	பதினெட்டு

ஆற்றில் பெருவெள்ளம் வருகிறது.
அணுவுக்கு எழெட்டுப் பழங்கள் வாங்கலாம்.
வெண்ணெய் உருக்கினல் நெய்யாகும்.
பெட்டியிலிருந்து பதினெட்டு ரூபாய் எடு.
கல்வியிற் பெரியவன் கம்பன்.

பாடம் 42.

ஏ
ே
கே
ஙே
சே
ஞே
டே
ணே
தே
நே
பே
மே
யே
ரே
லே
வே
ழே
ளே
றே
னே

தேர்.

கேள்வி	பேரன்
சேவல்	மேகம்
நேரம்	லேகியம்

வேர்

ஆண்டிக்கு ஊரேது வீடேது!
அவன் குடிப்பது கூழே உடுப்பது கந்தலே.
மரம் மேலே வளர்கிறது.
அதன் வேர் கீழே இறங்குகிறது.
நான் உள்ளே வருகிறேன்.
வழியே செல்; வழியே வா.

பாடம் 43.

முத்தந்தா

கண்ணே! மணியே! முத்தந்தா
கட்டிக்கரும்பே! முத்தந்தா
வண்ணக்கிளியே! முத்தந்தா
வாசமலரே! முத்தந்தா

தேனே! பாலே! முத்தந்தா
தெவிட்டாக் கனியே! முத்தந்தா
மானே! மயிலே! முத்தந்தா
மடியில் வந்து முத்தந்தா.

பாடம் 44.

ஐ
ை
கை
ஙை
சை
ஞை — குதிரை.
டை
[illegible]

தை	உலக்கை	எருமை
நை	மீசை	போர்வை
டை	குடை	வாழை

ை	தையல்	பாறை
பை	பையன்	நைந்த துணி
ரை		
——		

வை மரத்திலேறி மாங்காயைப் பறி.
ழை குழந்தை வாழைப்பழம் தின்கிறது.
—— தையும் மாசியும் பனிக்காலம்.
றை வருக்கைப் பலா மிக்க சுவையுடையது.
—— தாத்தாவின் மீசை நரைத்துவிட்டது.

பாடம் 45.

ஐ
பூ பூனை.
ணை
லை வீணை தவளை
ளை தலை — தென்னை
னை

வாழையிலை	அடுக்களை
புகையிலை	கலைமான்

சீதை வீணை வாசிக்கிருள்.
பூனை எலியைப் பிடிக்கும்.
பனை ஓலையில் பாய் முடையலாம்.
காலை மாலை நூலை ஓது.
களை பறித்தால் பயிர் வளரும்.

பாடம் 46.

ஒ		ெ-ா
ெ-ா		ணொ
கொ	தொட்டில்.	றொ
ஙொ		னொ
சொ		
ஞொ	கொக்கு றொட்டி	
டொ	சொட்டு கையொப்பம்	
——	தண்டொட்டி நல்லொழுக்கம்	
தொ	நொண்டி புள்ளொலி	
நொ	பொம்மை கண்ணொளி	
பொ	மொட்டு பொற்றொடி	
மொ		
யொ	வானொலி	
ரொ		
லொ	நெற்றியில் பொட்டிடு.	
வொ	மொட்டு விரிந்து பூவாகும்.	
ழொ	பிள்ளைகள் ஒவ்வொருவராக வந்தார்கள்.	
ளொ	பால் பானை பொங்கி வடிந்தது.	
——		

—

பாடம் 47.

ஓ		ே-ா
ே-ா		ணோ
கோ	கோழி	றோ
ஙோ		னோ
சோ	சோறு ரோமம்	
ஞோ	தோசை லோகம்	
டோ	நோன்பு யாழோசை	
——	போட்டி வெள்ளோட்டம்	
தோ	மோட்டார் கன்றோய்	

நோ யோசனை பெற்றோர்
போ
மோ பசுவோடு கன்று வந்தது.
யோ கோழி கொத்தித் தின்னும்.
ரோ சோறு குழைந்தது.
லோ பொன் விலையுயர்ந்த லோகம்.
வோ மோர் குடிப்பது உடம்புக்கு நல்லது.
ழோ
ளோ
—
—

பாடம் 48.

ஒள
ெ–ள
கௌ வௌவால்.
ஙௌ
சௌ கௌவினான் மௌனம்
ஞௌ சௌக்கியம் பௌர்ணமி
டௌ
ணௌ யௌவனம்
தௌ
நௌ நாய் ரொட்டியைக் கௌவிச் சென்றது.
பௌ அத்தான் மௌனமாக வாசிக்கிறான்.
மௌ குழந்தை சௌக்கியமாக இருக்கிறதா ?
யௌ வௌவால் தலைகீழாய்த் தொங்கும்.
ரௌ பௌர்ணமியன்று சந்திரன் நன்றாய்ப்
பிரகாசிக்கிறது.
லௌ
வௌ
ழௌ
ளௌ
றௌ
னௌ

பாடம் 49.

அஃது ஒரு கத்தி
எஃகினல் செய்தது

தோழி! வா பூந்தோட்டத்திற்குப் போகலாம்.
பாலும் பழமும் நல்ல உணவு.
பெட்டைக் கோழி முட்டை யிடும்.
மோட்டார் வண்டி வேகமாய்ச் செல்லும்.
சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.
உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
பங்குனியும் சித்திரையும் வெய்யிற்காலம்
வெள்ளிக் கிண்ணத்தில் சந்தனம் கொண்டுவா.
பாறையிலிருந்து கல்லை உருட்டினன்.
நம் அரசர் அரண்மனை கொட்டாரம் எனப்படும்.

பாடம் 50.

ஜ	ராஜா	வருஷம்
ஸ	ஜலம்	புஷ்பம்
ஷ	கஸ்தூரி	அக்ஷரம்
க்ஷ	ஸர்ப்பம்	பக்ஷணம்

ஸ்ரீ — ஸ்ரீமான்
ஸ்ரீ சித்திரைத்திருநாள்
ராஜகுடும்பம்.
திராக்ஷைப் பழம்.
ஸந்தோஷம்.

பாடம் 51.

முருகனும் அப்பமும்.

முருகன் ஒரு சிறு பையன். அவனுக்கு வயது ஐந்து. அவன் முதல் வகுப்பு மாணவன்.

ஒரு நாள் அவன் அக்காள் அவனுக்கு ஓர் அப்பம் கொடுத்தாள். அப்போது எதிர் வீட்டுச் சுந்தரம் அங்கே வந்தான். உடனே முருகன் அப்பத்தைப் பின் புறத்தில் மறைத்து வைத்தான்,

சுந்தரம் போனபிறகு முருகன் அப்பத்தைத் தேடினன். காணவில்லை. அதை ஒரு பூனை தின்றுகொண்டிருந்தது. முருகன் ஏமாற்றம் அடைந்தான்.

பாடம் 52.

கிழமைகளும் மாதங்களும்

கிழமைகள்

ஞாயிற்றுக் கிழமை
திங்கட் கிழமை
செவ்வாய்க் கிழமை
புதன் கிழமை
வியாழக் கிழமை
வெள்ளிக் கிழமை
சனிக் கிழமை

மாதங்கள்

சித்திரை	ஐப்பசி
வைகாசி	கார்த்திகை
ஆனி	மார்கழி
ஆடி	தை
ஆவணி	மாசி
புரட்டாசி	பங்குனி

ஏழு நாள் ஒரு வாரம்.
முப்பது நாள் ஒரு மாதம்.
பன்னிரண்டு மாதம் ஒரு வருஷம்.

பாடம் 53.

பசுவும் கன்றும்.

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி. (1)

அம்மா என்குது
வெள்ளைப் பசு—அதன்
அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி. (2)

நாவால் நக்குது
வெள்ளைப் பசு—பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக்குட்டி. (3)

முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு—மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக்குட்டி. (4)

பாடம் 54.

நிறங்கள்

மிளகாய்ப் பழம் சிவப்பு நிறம்
கொக்கு வெள்ளை நிறம்
இலை பச்சை நிறம்
வானம் நீல நிறம்

எலுமிச்சம் பழம் மஞ்சள் நிறம்
காகம் கறுப்பு நிறம்

இளியின் நிறம் என்ன ?
பாலின் நிறம் என்ன ?
இரத்தத்தின் நிறம் என்ன ?
யானையின் நிறம் என்ன !
கடலின் நிறம் என்ன ?
பூவரசம் பூவின் நிறம் என்ன ?

பாடம் 55.

அறுசுவை

சர்க்கரை இனிக்கும்
தயிர் புளிக்கும்
மிளகாய் எரிக்கும்
உப்பும் உவர்க்கும்
நெல்லிக் காய் துவர்க்கும்
பாகற் காய் கசக்கும்.

கரும்பு————
பாக்கு————
கடல் நீர்————
நல்ல மிளகு ——
எலுமிச்சம் பழம்——
சுண்டைக் காய்——

பாடம் 56.

நெற்பானையும் எலியும்.

ஓர் ஊரில் ஒரு பாட்டி வசித்து வந்தாள். அவள் ஒரு பானையில் நெல் வைத்திருந்தாள். அதில் ஒரு ஓட்டை இருந்தது.

ஒரு எலி அதன் வழியாக நுழைந்து உள்ளே சென்றது. நாலைந்து நாளாக அங்கேயிருந்து நெல்லைத் தின்றுகொண்டிருந்தது. அதனால் அதன் உடல் பருத்துவிட்டது. பிறகு அதற்கு வெளியில் வர முடியவில்லை.

ஒரு நாள் பாட்டி பானையிலிருந்து நெல்லை எடுக்க வந்தாள். வீட்டுப் பூனையும் கூடவே வந்தது. பாட்டி பானையின் மூடியைத் திறந்தாள். எலி வெளியே குதித்தது. உடனே பூனை அதன் மேல் பாய்ந்து அதைச் கௌவிக் கொண்டு போய்விட்டது.

பாடம் 57.

சூரியன்.

சூரியன் உதிக்கும் நேரம் காலை; அடையும் நேரம் மாலை.

சூரிய வெளிச்சம் உள்ள காலம் பகல்; இல்லாத காலம் இரவு.

சூரியன் உதிக்கும் திசை கிழக்கு; மறையும் திசை மேற்கு.

கிழக்கே பார்த்து நின்றால் வலதுகைப் பக்கம் தெற்கு; இடதுகைப் பக்கம் வடக்கு.

பாடம் 58.

வானம் கறுத்தால்—

வானம் கறுத்தால் மழை பெய்யும்
மழை பெய்தால் மண் குளிரும்
மண் குளிர்ந்தால் புல் தழையும்
புல் தழைந்தால் பசு மேயும்
பசு மேய்ந்தால் பால் சுரக்கும்
பால் சுரந்தால் கன்று குடிக்கும்
கன்று குடித்து மிஞ்சியதைக்
கறந்து கொண்டு வந்திடலாம்
காப்பியில் விட்டுக் குடித்திடலாம்.

பாடம் 59.

நொண்டியும் குருடனும்

ஒரு ஊரில் ஒரு நொண்டி இருந்தான். அவன் இரு கால் நொண்டி. வெளியிற் செல்ல அவனுக்கு இயலாது.

ஒரு நாள் அவனிடம் எப்படியோ ஒரு குருடன் வந்து சேர்ந்தான். இவனுக்கு இரண்டு கண்ணும் தெரியாது பிறர் உதவி இவனுக்கும் அவசியம்.

இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டார்கள். பின் குருடன் தோளில் நொண்டி ஏறினான். நொண்டிக்குக் கால் கிடைத்தது. குருடனுக்குக் கண் கிடைத்தது. இருவருக்கும் கஷ்டம் நீங்கியது.

பாடம் 60.

அப்பா எழுந்திரு

அப்பா எழுந்திரையா
    அரசே எழுந்திரையா
கொக் கொக் கோ என்று
    கோழி அதோ கூவுது பார்
கா கா கா என்று
    காகம் பறக்குது பார்
பூவிரிந்து ரோஜா
    புது மணம் வீசுது பார்
வந்து வந்து வண்டு
    வட்டம் சுழலுது பார்
கறவைப் பசுவை அதன்
    கன்று சுற்றித் துள்ளுது பார்
பால் குடிக்க வேண்டாமோ
    பழம் தின்ன வேண்டாமோ
பாடங்கள் எல்லாம்
    படித்திட வேண்டாமோ
சீக்கிரம் பள்ளிக்குச்
    சென்றிட வேண்டாமோ
காலையும் ஆச்சுதையா
    கண் விழித்துப் பாரையா
அப்பா எழுந்திரையா
    அரசே எழுந்திரையா.

பாடம் 61.

நற் பழக்கம்

காலையில் எழுந்திரு.
காலைக் கடனை முடி.
பல்லை நன்றாய் விளக்கு.
குளிர்ந்த நீரில் குளி.
துணியைத் துவைத்துக் கட்டு.
நல்ல உணவை விரும்பு.
பள்ளிக் கூடத்திற்குப் போ.
பாடத்தைக் கருத்தாய்ப் படி.
மாலையில் நன்றாய் விளையாடு.
இரவில் சுகமாய் உறங்கு.

பாடம் 62.

மன்னர் வாழ்த்து.

நம்மை யெல்லாம் காப்பவர்
நற்குணங்கள் நிறைந்தவர்
தெய்வ பக்தி சிறந்தவர்
திருவிதாங்கோ(டு) ஆள்பவர்
குடிகள் அன்பு பெற்றவர்.
கோயில் திறந்த கொற்றவர்
சிறுவர் கல்வி நாடெலாம்
செழிக்க வைத்த புண்ணியர்
சித்திரை நாள் வந்தவர்
தேசம் போற்றும் மன்னவர்
பத்ம நாப தாஸ வஞ்சி
பால ராம வர்மர் தாம்
ஊழி காலம் உலகினில்
வாழி வாழி வாழியே

தமிழ் நெடுங்கணக்கு

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ
க	கா	கி	கீ	கு	கூ	கெ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ
ச	சா	சி	சீ	சு	சூ	செ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ
த	தா	தி	தீ	து	தூ	தெ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ
ற	றா	றி	றீ	று	றூ	றெ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ

ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
கே	கை	கொ	கோ	கௌ	க்
ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
டே	டை	டொ	டோ	டௌ	ட்
ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
தே	தை	தொ	தோ	தௌ	த்
நே	நை	நொ	நோ	நௌ	ந்
பே	பை	பொ	போ	பௌ	ப்
மே	மை	மொ	மோ	மௌ	ம்
யே	யை	யொ	யோ	யௌ	ய்
ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
லே	லை	லொ	லோ	லௌ	ல்
வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
றே	றை	றொ	றோ	றௌ	ற்
னே	னை	னொ	னோ	னௌ	ன்